# ஆனந்தபோதினி

## ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

**(தொகுதி 13.)**

பிரபவ௵ ஆடி௴ முதல் விபவ௵
ஆனி௴ வரையில்

1927௵ ஜுலை௴ முதல் 1928௵ ஜுன்௴ வரையிற்

**நா. முனிசாமி முதலியார்,**

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு,

சௌகார்பேட்டை, மதராஸ்.

*All Rights Reserved.*

காலிகோ பைண்ட் விலை ரூபா 1—6—0. 1928 தபாற் கூலி வேறு.

# முகப்புப் பட அட்டவணை.

| பட விவரம். | ஸு. | மாசம். |
|---|---|---|
| ஸ்ரீ. சாரதாமணிதேவி | பிரபவஸு | ஆடி |
| மைசூர் மகாராஜா ஸ்ரீ. கிருஷ்ணராஜ உடையார் பகதூர் அவர்கள் | ,, | ஆவணி |
| ஸ்ரீ. இராம கிருஷ்ண பரமஹம்ஸ சுவாமிகள் | ,, | புரட்டாசி |
| நமது இராஜப்பிரதிநிதியும், அவர் மனைவியும் இர்வின் பிரபு-இர்வின் பிரபுவின் மனைவி | ,, | ஐப்பசி |
| விவேகானந்தர் | ,, | கார்த்திகை |
| பிராணாயாம லயன் பிளாக்குகள் 8 வகை (233-ம் பக்கம் பார்க்க) | ,, | ,, |
| டாக்டர்-அன்ஸாரி | ,, | மார்கழி |
| சிதம்பரம் ஸ்ரீ. நடராஜர் கோவில் | ,, | தை |
| சென்னையில் 1927ஸு டிசம்பர்மீ கூடிய 42-வது காங்கிரஸ் மகாசபை | ,, | மாசி |
| சைமன் கமிட்டியாரும், அவர்களுடன் வந்த லேடி ஸ்டிராத்ஞவும் | ,, | பங்குனி |
| ஸ்ரீ. காளத்தி ஆலயம் | விபவஸு | சித்திரை |
| லண்டனில் இந்திய ஹைகமிஷனர் நிர்வாக விஷயத்திற்காக அமைக்க உத்தேசித்த கட்டிட பிளான் | ,, | வைகாசி |
| காஞ்சிபுரம். ஸ்ரீ. வரதராஜப் பெருமாள் கோவில் | ,, | ஆனி |


அன்பர்களே! நீங்கள் ஆனந்த வாழ்க்கையை அடைய வேண்டுமானால்

## ஆனந்த போதினி

என்னும் மாத சஞ்சிகையை வரவழைத்துப் படியுங்கள். இது, அநேகம் நன்மையான வியாசங்களைக் கொண்டு வெளிவருவது, 13 ஆண்டுகளாக நடைபெற்று வருவது; இருபதினாயிரம் பேர்களுக்கு மேற்பட்ட சந்தாதாரர்களையுடையது; மாதந்தோறும் குறிப்பிட்ட தேதி தவறாமல் வெளிவருவது; அழகிய ஆப்டோன் படங்களுடன் வெளிவருவது; அதிகரித்த பக்கங்களை யுடையது. தமிழ் நாட்டில் இதற்கிணையான தமிழ் மாதப் பத்திரிகை வேறெதுவுமில்லை. இன்னும் இதனை 64 பக்கங்களை யுடையதாகவும், உயர்ந்த அமைப்புகளுடனும் வெளியிட உத்தேசித்திருக்கிறோம். ஆதலின், நேயர்களே! உடனே சந்தாதாரராகச் சேருங்கள்; உங்கள் நேயர்களையும் சேரும்படி செய்யுங்கள்.

வருட சந்தா } இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 1.
பினங், சிங்கப்பூர், முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 1-4-0

பத்திர[illegible] [illegible]னி ஆபீஸ்,
நெ. 6, வெங்க[illegible] தெரு, [illegible]பேட்டை நெ. 167, மதராஸ்.


# ஆனந்தபோதினி

## 13-வது வருடப் பொருள் அட்டவணை.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| **கடவுள் வணக்கம் :** | |
| தாயுமானவர். | |
| பாட்டு முதற் குறிப்பு. | |
| பாரா தி | 1 |
| மின்னை | 1 |
| எம்பரா | 1 |
| பேதித்த | 49 |
| கருத்தினுட் | 49 |
| ஆரறிவா | 49 |
| சந்ததமும் | 97 |
| கலங்காத | 97 |
| நடக்கினு | 97 |
| காரிட்ட | 145 |
| அகண்ட | 145 |
| ஐயனேயுனை | 145 |
| அந்தகாரத்தையோ | 193 |
| விண்ணூறு | 193 |
| கூடியநின் | 193 |
| ஸாரனந்தம் | 241 |
| தக்கநின் | 241 |
| பவம்புரிந்திடும் | 241 |
| அவனன்றி | 289 |
| சாட்டையிற் | 289 |
| துய்யன் | 289 |
| அன்னேயனே | 337 |
| தந்தைதாயு | 337 |
| வேறுபடுஞ் | 337 |
| எங்காளு | 385 |
| ஏசற்ற | 385 |
| பாழாகி | 385 |
| நிற்குண | 433 |
| ஏதமற்றவர்க் | 433 |
| துங்கமழு | 433 |
| மண்ணாதி | 481 |
| அன்றுநால் | 481 |
| எத்திக்குந் | 481 |
| மெய்விடா | 529 |
| சுகமாகு | 529 |
| தொல்லைவினைக் | 529 |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| அரும்பொருள் விளக்கம் | 2,50,98, 146,194,242,290,338,386,434, 482,530 |
| **தலையங்கம் :** | |
| நம்போதினியின் 13-வது ஆண்டு | 3 |
| இந்தியாவும் ஆரம்பக்கல்வியும் | 6 |
| உள்நாட்டுப் பொருள்களின் உயர்வு | 51 |
| தெய்வ பலமும் மனித பலமும் | 99 |
| இந்தியர்களும் சர்வதேச சங்கத்தாரும் | 147 |
| கூட்டு வர்த்தகம் | 196 |
| குடியே குடிகேட்டிற்குக் காரணம் | 243 |
| தேசியப் பாடல்களைப் பாட வேண்டிய கிரமங்கள் | 291 |
| கடவுளுக்குக் கைக்கூலி | 339 |
| தமிழ்க் குற்றங் களைதல் | 387 |
| அரசாங்க உத்தியோகஸ்தர்கள் | 435 |
| ஏழ்மையை நீக்குவ தெப்படி? | 488 |
| ஏழைகட்கு ஏற்படவேண்டிய அனுகூலங்கள் | 581 |
| **தேசநலப் பகுதி:** | |
| ஸ்ரீ. மாதவ கோவிந்தரானடே | 11,56 |
| கதரின் வெற்றி | 14 |
| காந்தி தரிசனம் | 16,60,107,205, 400 |
| தேச நன்மையைப் பற்றிய ஓர் விண்ணப்பம் | 88 |
| இன்று காங்கிரஸ் நிலை | 58 |
| பாபு சுரேந்திரநாத் பனர்ஜி | 108, 151,201 |
| தென் நாட்டில் தேசியம் | 105 |
| பகட்டுப் பெருள்களின் படுகொள்ளை | 162 |
| இந்தியாவில் ஜனங்கள் ஆட்சி செய்த விதம் | 182 |
| வருகின்ற காங்கிரஸ் | 208 |

விஷயம் பக்கம்

ஸ்ரீ. கோபால கிருஷ்ண கோகலே 248,298
ஆனந்த மோகன் போஸ் 343,396
இராட்டினக் கும்மி 375
தேசத்தில் தேவதாசீயம் 398
கதருடைக் கும்மி 424
பண்டித ஸ்ரீ. மதனமோகன மாளவ்யா 440,489,542
பாரதநாடு (பாட்டு) 443
மதுவிலக்கு (ஆனந்தக்களிப்பு) 492
மதுவிலக்கு (கும்மி) 493
மோட்டார்க் கண்ணி 546
நமது நாட்டின் தௌர்ப் பாக்கிய நிலைமை 565

ஆரியசித்தாந்தம் :

யோகம் 17,63,109,156,304
சமாதி 209,253,356
முடிந்தஞானம் 404,445,498,556

கைத்தொழில் :

பன்னீர் செய்யும் முறை 20
சந்தனாதித் தைலம் 22,69
காகித உற்பத்தி 70,124,169
பட்டு உற்பத்தி செய்யும் விதம் 170, 223,268,316
இஞ்சி உற்பத்தி 371,465
இந்திய காப்பி உற்பத்தி 465,509, 554

மாணவர் பகுதி :

ஆத்திசூடி உதாரணக் கதைகள் :

குணமது கைவிடேல் 23
கூடிப் பிரியேல் 74
கெடுப்பதொழி 117
கேள்விமுயல் 163
கைவினை கரவேல் 217
கொள்ளை விரும்பேல் 312
கோதாட் டொழி 363
சக்கர நெறி நில் 414
சான்றோரினத்திரு 459
சித்திரம் பேசேல் 504
சீர்மை மறவேல் 547
உரைமணிமாலை 39,76,120

விஷயம் பக்கம்

அறிஞரின் அமுதமொழிகள் 40,88, 135,181,235,277,281,326,376 425,472,522,570
தங்கத்தாடி (ஒருகதை) 262
நற்போத மஞ்சரி 282

சரித்திரங்கள் :

பெஞ்சமின் பிராங்க்லினின் குணாதிசயங்கள் 24
விருவியஸ் எரிமலையின் சரித்திரம் 30,84,133,179,272
ஸ்ரீமதி சாரதாமணி தேவியார் 86, 126,177,277,319
மைசூர் மகாராஜா ஸ்ரீ. கிருஷ்ண ராஜ உடையார் பகதூர் அவர்கள் 92

வைணவம் :

பெரியோர் இலக்கணம் 27
ஸ்ரீ. ஆண்டாள் 81,115,215,259, 561
ஓர் பெண்மணியின் விண்ணப்பம் 161
நடாதூரம்மாள் 310,362
நடாதூர் அம்மாள் வரத தேசிகர் வைபவம் 411,456

சைவசித்தாந்தம் :

எறிபத்த நாயனார் புராணத்தின் சில விசேடக் குறிப்புகள் 29,67,112, 159,212,257,308,360,408
வாதவூரடிகள் ஞானோபதேசம் பெற்ற வரலாறு 453,502,559

வேதாந்தம் :

வேதாந்தசார சங்கிரக வசனம் 61, 107, 153, 206, 250, 301, 345, 401,449,494
சமரஸஞானச் சொற்பொழிவு 537
ஜீவிய சந்தா விவரம் 393
புதிய ஜீவிய சந்தாதார் 371
பழைய ஜீவிய சந்தாதார் 371

விஷயம் பக்கம்

அறிவிப்பு :

சந்தாதாரர்களுக்கு 16,80,123,160, 218,256,403,491,555
அறிவிப்பு 47,468
ஓர் வேண்டுகோள் 222
சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு 239
சந்தா நேயர்களுக்கு 14-வது ஆண்டின் முன்னறிவிப்பு 392,438,487
பஞ்சாங்க அறிவிப்பு 429
புத்தக இனம் அறிவிப்பு 429
முன்பணமனுப்பும் சந்தநேயர்களுக்கு விஞ்ஞாபனம் 488
13-வது ஆண்டுப் பூர்த்தி 536

வினாக்கள் :

ஓர் வினா-(பௌர்ணமி பூசை) 29

விடைகள் :

நமது போதினி பிரபவ ஆடி மீ சஞ்சிகை 29-ம் பக்கத்தில் உள்ள பௌர்ணமி பூஜை வினாவிற்கு விடை 114

பெண்மக்கள் பகுதி :

மாதரும், ஆடையும் 33,79
மாதரும், குடும்பமும் 77,121,2[illegible]1, 266,314,365,416,461,507,552
தமிழ்நாட்டுத் தாய்மார்கட்கு ஒரு விண்ணப்பம் 165,219
நம் நாட்டுப் பெண்களும் கைராட்டினமும் 167
இந்தியமாதரும், மஞ்சள்குங்குமமும் 367

வியாபாரம் :

கப்பல் வியாபாரம் 35,369
வணிகநீதிகள் 418

விவசாயம்

நெல்சாகுபடி 419

வைத்தியம் :

டைபாயிட் சுரம் 36
சௌசம் 71
வாந்திபேதிக்குச் சிகிச்சை 73

விஷயம் பக்கம்

ஆசமன்னியம் 137
இளைத்ததேகக்காரர் சாப்பிட வேண்டியவை 139
ஸ்நானம் 171
பிராணாயாமம் 228,273
சில அநுபவ முறைகள்: (தேள் கொட்டுக்கு, பாம்பு கடிக்கு, வைரக் கற்களை பரீக்ஷித்துப் பார்க்க, மீன் பிடிக்க ரகசியவழி, இராக்காலங்களில் சொப்பனம் வாராதிருக்க.) 322
சில அனுபவ முறைகள் வேறு: (சிலந்திக் கட்டிக்கு, பழைய காரக்குகளைப் புதுப்பித்தல், தூக்கம் வருவதற்கு) 359
காயத்திரி சந்தியாவந்தனம் 373
வைத்தியக் குறிப்பு 471
தமரகவாயுச் சிகிச்சை 471
மோட்டுப்பூச்சி மருந்து 471
சிறு வைத்திய முறைகள் : (கால் வெடிப்பு நீங்க, வண்டு கடிக்கு, ஒற்றைத் தலைவலி தீர, கண்வலிதீர, சிலந்தி ஆறுவதற்கு) 506
பிழைதிருத்தம் 22

நாடகப்பகுதி :

பூர்வகால நாடகங்கள் 127,270,350

நீதிகள் :

ஆங்கிலக் கவி லார்ட் டெனிஸன் இயற்றிய 'ஆர்தர் மரணம்' என்னும் செய்யுளில் கூறிய பிரார்த்தனையின் மகத்துவம் 41
குழந்தைகளும் நகைகளும் 90
வாதசூஷணை 511
குறித்தகாலம் தவறாமை 512
பொறுமை 514
சன்மார்க்கசற்போத ஞானக் கும்மி 519,549
பிரார்த்தனை செய்துகொள்ளுதல் 568
தீங்கைத் தட்டிக் கொடுத்து வாங்குவதா? 569

விஷயம் பக்கம்

**விநோதம் :**

விநோதக் கூற்று 43
நெய் விநோதம் 43
பவண்டன் பேனு விநோதம் 43
புரோகிதர் விநோதம் 43
பிராமண நெய்க் கரண்டி 140
மிளகாய்ப்பொடி விநோதம் 140
வாழைப்பழங் கொடுத்து வயிறெரிந்தவன் 189
வழி விடாதவன் தலையில் வாங்கியெடுத்தது 189
மூட வேலைக்காரன் 189
நாடக ஆக்டர் விநோதச்செயல் 238
விநோத தேசபக்தர் 238
தசாவதார விநோதம் 238
விரத விநோதம் 286
சீட்டு விளையாட்டு 286
ரோட் மேஸ்திரி 286
ஸ்டேஷன் மாஸ்டர் 286
மாஜிஸ்டிரேட், ஜட்ஜி, கலெக்டர், குற்றவாளிகளைப்பற்றிய விநோதங்கள் 332
புளுகு விநோதம் 332
குதிரைப்பந்தயக் குருடர்கள் 380
பேதியெடுத்த காப்பி 380
தாங்களே க்ஷவரஞ் செய்துகொள்வோர்க்கு எச்சரிக்கை 381
பொக்கைகளுக்கு அறிவிப்பு 381
ரெயில்வே சண்டையும் சமாதானமும் 428
மோட்டார் விபத்தை நீக்குவதற்குப் பக்கா யோசனை 428
இன்கம்டாக்ஸ் விநோதம் 429
விலாசந் தெரிய விநோத மார்க்கம் 429
வெற்றி தோல்வியைப்பற்றிய விநோதம் 429
கூடப் பிறந்தவனல்லவென்ற விநோதம் 429
ரெயில்வே லஞ்ச விநோதம் 477
சுயாகலப் புலி துன்பமுற்றது 477
நாடகத்தில் வசூல் அதிகமாவதற்கு நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் ஒருவகைத்தந்திரம் 525
ஒட்டறை தேடிய விநோதம் 525
கடன்காரனுக்குக் கெடுச்சொல்லும் விநோதம் 525
வாத்தியார் கணக்கும், மாணுக்கன் விடையும் 525
மதுபானத்தை உடனே விட்டவன் 571
பாடம் நேரத்திற் கொருவிதமாக மாறியது 571

**நாவல் :**

கிருஷ்ணசிங் அல்லது துப்பறியும் சீடன் 44,93 141,187,236,283, 330,377,426,475,523,572

**ஆனந்தபோதினிப் புகழ்ச்சி :**

ஆனந்தபோதினியின் பயன் 46
ஆனந்தபோதினியின் அடிதொழல் 91
ஆனந்தபோதினியின் அருமை 176
ஆனந்தபோதினி நீதியானந்தக் களிப்பு 214
ஆனந்தபோதினியின் பெருமை 423,515
ஆமோத பத்திரிகை 423
ஆனந்தபோதினியின் நல்வரவு வேண்டல் 544

**வர்த்தமானப் பகுதி :**

ஓர் ஆச்சரியம் 47
103 வயதுவரை உழைத்தவர் 47
மின்சார இருதயம் 47
அற்புத சமாதி 95
ஆகாய மூலிகை 95
மோட்டார் வீடு 95
எலக்டிரிக் விநோதப் புழு 143
மின்சார அதிசயங்கள் 148
புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணெய் 143
வால் முளைத்த பெண் 148
உலகத்தில் அதிக வயது கொண்டவர் 191
தூக்க மில்லாமையாகிய வியாதியை நிவர்த்தி செய்யும் தொட்டி லாட்டம் 191
நவீன செவிப்புலக் கருவி 191
ஓர் அற்புத மகான் 239
மிஸ் மேக்டோனல்ட் 239
கடலை நீந்திய பெண் 239
இயந்திர மனிதன் 239
சென்னையில் காங்கிரஸ் மகாநாடு 287
ஆகாய விமானிகளுக்கு வைத்திய சாலை 287
இந்தியாவும் ஆகாய விமான விருத்தியும் 287
பூத பௌதிக சாஸ்திரிகள் நீண்ட ஆயுளுடன் இருப்பதேன் 335
கையின் நிறத்தைக் கொண்டு வியாதிகளைக் கண்டு பிடித்தல் 335
லண்டனில் ஹிந்து கோயில் 383
கலியாணஞ் செய்தவர்களுக்கு வரி 383
தபால் விகிதம் குறைக்கப்பட்டது 383
நூதன ஓசைக் கருவி 383
எரிமலை 383
ஐரோப்பா கண்டத்தில் அடங்கியிருக்கும் தேசங்கள் 431
தூக்குத் தண்டனை விதிக்கப்படாத தேசங்கள் 431
நம் நாட்டு நோட்டுகள் நம் நாட்டிலேயே அடிக்கப்படுமென்பது 431
ரஷ்யாவில் திக்கற்ற குழந்தைகள் 431
ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியாரைப்பற்றிய விஷயங்கள் 431
அற்புத மகான் 479
சைகிலில் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்தவர்கள் 479
சென்னை மாகாண நியாயவாதிகள் கணக்கு 479
சைக்கில் பந்தயக்காரர் கணக்கு 479
நூறு வயதிற்கு மேற்பட்டவர் கணக்கு 479
சென்னைக் கவர்னர் டெல்லிக்குத் தனிரெயிலில் சென்றதற்குக் கட்டணம் 479
சைமன் கமிட்டியார் தங்கள் நாடு சென்றதும், நம் நாட்டிற்கு மறுபடி திரும்பிவருங் காலமும் 479
இங்கிலாந்தில் சட்டசபை அங்கத்தினரை நியமிப்பதற்குப் பெண்களுக்கும் சமஉரிமை கிடைக்க ஏற்பாடு 527
ரஷ்யாவில் ஏழை யாட்சியை ஏற்படுத்திய லெனின் என்பாரின் மூளையைப் பரீக்ஷித்தல் 527
இங்கிலாந்தில் மது மயக்கத்தால் குழந்தைகளைக்கொன்ற தாய்மார்களின் கணக்கு 527
இந்தூர் இராஜ்ஜியத்தின் செலவு 527
இங்கிலாந்தில் அடுத்த ஆண்டுக்குச் சட்டசபை அங்கத்தினரை நியமிக்க ஏற்பாடுகள் 527
இங்கிலாந்தில் சட்டசபை அங்கத்தினரா யிருப்பவர் 575
போர்வீரர்கள் விஷயமான செலவு விவரம் 575
அமெரிக்காவில் மதுவிலக்கிற்கு மூல புருஷரா யிருந்தவர் நம் நாட்டிற்கு வருகை 575
தேசப் பயிற்சிக்குரிய விஷயங்களடங்கிய பத்திரிகையும், புத்தகமும் 575
விளையாட்டுக் குரிய விஷயங்களடங்கிய பத்திரிகையும், பந்தய விவரமும் 575

**சோதிடப் பகுதி :**

பஞ்சாங்கம் 48,96,144,192.240, 288,336,384,432 480,528,576
அண்டத்தின் ஜாதகம் 186
விபவ வருடப்பலன் 478

| விஷயம் | பக்கம் |
|---|---|
| **ஆட்சியாளர் கவனிக்க வேண்டிய நீதிகள் :** | |
| தனுஷ்கோடிக் கஷ்டம் ஆபீஸ் | 122 |
| **இந்தியர் அனுஷ்டானங்கள் :** | |
| பசுவின் சாணம் | 129 |
| காலை ஸ்நானம் | 164 |
| **எந்திரப்பகுதி :** | |
| ஜேம்ஸ்வாட்டும் நீராவி இயந்திரமும் | 173 |
| ஸ்டீவன்ஸனும் நீராவி இயந்திரமும் | 225 |
| ஆகாயவிமானம் | 467 |
| **கல்விப்பகுதி :** | |
| பதினெண்பாவை | 190 |
| வாசகசாலை | 265 |
| ஆரம்ப ஆசிரியன் | 323 |
| கவனிப்பீர்களா? (அச்சுவேலையைப்பற்றியது) | 327 |
| தமிழும் தமிழ்க்கல்வியும் | 517 |
| லோக்கல் போர்டுகளும் ஆசிரியர்களும் | 545 |
| ஊக்கத்தால் உயர்வுபெற்றவன் | 567 |
| குறிப்பு : | 28,114,279.334,349,352,464 |
| பிழைதிருத்தம் : | 22,300 |
| **விவசாயம் :** | |
| நிலக்கடலை | 280 |
| **இசைப்பகுதி :** | |
| புராதன சங்கீதம் | 469 |
| **தெய்வவணக்கப் பகுதி :** | |
| கோவில்களும் அவைகளின் பாதுகாப்பும் | 325 |
| ஆலயங்களில் நடக்கும் அக்கிரமங்கள் | 342 |
| சுருளி என்னும் சுரபிமாமலையின் மகத்துவம் | 463 |
| **மதிப்புரை :** | |
| செந்தமிழ் இலக்கணம் முதற் பாகம் | 333 |
| கணித எண்சுவடி | 333 |
| பிரதாப சந்திரன் | 333 |
| ஞான இரகசிய சிந்தாமணி | 333 |
| தமிழின் தற்கால நிலைமை | 334 |
| பக்திமார்க்கம் | 334 |
| முத்திநெறி | 334 |
| அனுபவ அவுடத வைத்திய முறை | 334 |
| ஜெனன ஜாதகக் குறிப்பு | 334 |
| வேளாளர் தோற்றமும் அவர்தம் வரலாறும் | 334 |
| சர்வ கருணை சமரஸ விளக்கம் | 382 |
| வைத்தியஞானக் கும்பி | 382 |
| இராஜாகோபிசந்த் | 382 |
| விஜயசுந்தரி | 382 |
| உடுதசாபிரதீபிகை | 382 |
| மூத்தேவர் சரிதை | 430 |
| திருவெள்ளூர்ப் புராணம் | 430 |
| ஞான சௌந்தரி அல்லது மாற்றாந் தாய் கொடுமை | 430 |
| பன்னீர், காலண்டர் | 478 |
| காலண்டர் வரவு (நெல்லூர் ஜில்லா) | 478 |
| மர்மமூலி | 478 |
| ஞான ரகஸ்யம் 1008 | 478 |
| மதுரகான பக்திரஸ கீர்த்தனங்கள் | 526 |
| சுயமரியாதைப் பஞ்சாங்கம் | 526 |
| ஞானமணிமாலை பதிற்றுப்பத்து | 526 |
| ஸர்வ தந்திர ஸித்தாந்த பதார்த்த லக்ஷண ஸங்கிரஹம் | 573 |
| சத்திய விரதன் | 573 |
| குடும்ப விநோதக் கதைகள் | 574 |
| கமலாசனி | 574 |
| **சுகாதாரப் பகுதி :** | |
| வீட்டில் வைக்கத்தகாத மரங்கள் | 364 |
| சில சுகாதார மொழிகள் | 420,455 |
| சுகபானம் | 518 |
| **ஏமாற்றம் தீர்க்கும் பகுதி:** | |
| ஓர் விநோதமான பிழைக்கும் வழி | 374 |
| **அரசியல் விஷயங்கள் :** | |
| சைமன் கமிட்டியார் | 421 |
| சென்னை அரசாங்க வரவுசெலவு | 422 |
| இந்திய அரசாங்க வரவு செலவு | 423 |
| வருடத்தில் 30-லட்சம் ரூபா செலவு செய்யும் மன்னன் | 474 |



ஓம்
பரப்பிரஹ்மணேநம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.


(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | விபவஇல ஆனிமீ கஉ | பகுதி |
|---|---|---|
| 13 | 1928இல ஜூன்மீ 14உ | 12 |


## கடவுள் வணக்கம்.

" மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்தநீ
மெய்யான மெய்யை யெல்லாம்
மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை
மெய்யாது மறியா வெறும்
பொய்விடாப் பொய்யினே னுன்னைத் திருந்துதான்
பொய்யான பொய்யை யெல்லாம்
பொய்யெனு வண்ணமே புகலவைத் தாயெனிற்
புன்மையே னென்செய்கு வேன்
மைவிடா தெழுசீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞான குருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கடொறு நின்ற குருவே
கைவிடா தேயென்ற வன்பருக் கன்பாய்க்
கருத்தா டுணர்த்து குருவே
கருதரிய சிற்சபையி லானந்த கீர்த்தமிடு
கருணா கரக் கடவுளே." (1)

" சுகமாகு ஞானத் திருமேனி யாநல்ல தொண்டர் தங்கள்
அகமேபொற் கோயி லெனமகிழ்ந் தேமன்று ளாடியகற்
பகமேயுன் பொன்னடி நீழல்கண் டாலன்றிப் பாவிக்கிந்தச்
செகமாயை யான வருங்கோடை நீங்குந் திறமிலையே." (2)

" தொல்லைவினைக் கீடாய்ச் சுழல்கின்ற நானொருவன்
எல்லையில் நின்கருணை யெய்துவனோ—வல்லவனும்
மோன குருவே முழுதினையுந் தானுணர்ந்த
ஞான குருவே நவில்." (3)

## அரும்பொருள் விளக்கம்.

1. "நீலகண்ட குருவே! விஷ்ணுவடிவான குருவே! பிரமனுருவாகிய ஆசிரியனே! சர்வமதங்களிலும் அவரவர் கருதியபடி நின்ற குருவே! அன்பர்க்கு அன்புருவாகி அவர் கருத்தினுள் இருந்து அறியத்தக்க வற்றை அறிவித்த ஆசிரியனே! கருதரிய சிற்சபையில்.........கடவுளே! உண்மை நீங்காத நாவினையுடைய மெய்யர் உள்ளத்திலிருந்து சத்தியமான உண்மைப் பொருள்களையெல்லாம் நீ உண்மையாக விளக்கி அவர்க்குக் காட்டியது சத்தியம்; இதற்குச் சந்தேசமில்லை; உண்மை சிறிது முணராதவ னும், வெறும் பொய்யைவிட்டு நீங்காத பொய்யனுமாகிய எனது மனத்தி லிருந்து பொய்யாகிய பொய்ப்பொருள்களையெல்லாம் நான் பொய்யென் றுணர்ந்து சொல்லாமல் மெய்யென்று சொல்லும்படி செய்தாய்; நீ இவ் வாறு நியமித்தனையாயின் அற்பனாகிய நான் என் செய்குவேன்" என்று ஆசிரி யர் இதிற் கூறுகின்றார்.

பூர்வபுண்ணியவசத்தால் சத்தியத்தைக்கொண்டு நடக்கும் பெரியா ரிடத்தே பகவான் எழுந்தருளியிருந்து மெய்யான செயல்களையெல்லாம் விளக்கிக் காட்டியது உண்மையாதலின், "மெய்விடாநாவுள்ள மெய்யரு ளிருந்து நீ மெய்யான மெய்யையெல்லாம், மெய்யென வுணர்த்தியது மெய் யிதற் கையமில்லை" என்றனர். பழய தீவினை மிகுதியால், உண்மையை ஆராய்ந்துணராமல் பொய்யான பிரபஞ்சவயப்பட்டவனிடத்துப் பகவான், உண்மையை மறைக்கும் சத்தியாயிருந்து, அசத்தியமாகிய தனுகரண புவன போகங்களைச் சேர்த்து அவனை அவ்வழியில் நிறுத்துவானாதலின், "மெய் யேது மறியாவெறும் பொய்விடாப் பொய்யினேனுள்ளத்திருந்துதான் பொய்யான பொய்யையெல்லாம் பொய்யெனு வண்ணமே புகலவைத்தாய்" என்றனர். ஆசாரியனைத் திரிமூர்த்திவடிவமாகக் கொண்டு துதிப்பது மர பாகலின், "நீலகண்டகுருவே! விஷ்ணுவடிவான ஞானகுருவே! நான்முகக் குருவே!" என்றனர்.

மெய்யருள்=மெய்யரிடத்து.

2. "ஞானமே திருமேனியாகக்கொண்ட அடியாருள்ளமே அழகிய கோயிலெனக்கொண்டு மகிழ்ந்து சிற்றம்பலத்தில் கூத்தாடிய கற்பகமே! உன் பொன்னடி நீழலையடைதாலன்றிப் பாவிக்கு இந்தப் பூலோகமாயை யான கோடைவெப்பம் நீங்கும் மார்க்கமில்லை" என்று இதில் ஆசிரியர் கட வுளை நோக்கிக் கூறுகின்றார்.

இதனால் இறைவனடியைச் சேராதார்க்குப் பிரபஞ்சமாயை நீங்கும் மார்க்கமில்லை யென்பதாயிற்று.

அகம்=உள்ளம். மன்று=சபை. கோடை=வெயில்; வெப்பத்தை யுணர்த்தின்றது.

3. "பழயவினைக்குச் சரியாக (பழவினைப்படி) சுழன்று திரிகின்ற நான் உன்னருளைப் பெறுவேனோ? எல்லாம் வல்லவனாகிய மௌனகுருவே! முழுதுமுணர்ந்த ஞானகுருவே! நீ சொல்வாயாக" என்பது இதன்கருத்து.

தொல்லை=பழமை. எல்லை=அளவு. மோனம்=மௌனம்.

---


# ஆனந்தபோதினி

விபவளூ

ஆனிமீ கவ


## ஏழைகட்கு ஏற்படவேண்டிய அனுகூலங்கள்.

இதர நாடுகளில் ஜனங்கள் தங்களுக்கு மேன்மேலும் அனு கூலம் தேடிக்கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள். அத்தேசங்களில் முனிசிபல் சபை, யூனியன் சபை, தாலுக்கா சபை, ஜில்லா சபை அல்லது சட்ட சபை ஆகியவற்றில் அங்கத்தினராக ஏற்பட முற்படுவோர், தங்களை அங்கத்தினராக நியமித்தால், தங்களால் ஜனங்களுக்கு இன்ன இன்ன அனுகூலங் கள் செய்யப்படுமென்பதை நியமிப்பவர்களுக்கு (ஓட் கொடுப்ப வர்களுக்கு) முன்னதாகக் கருத்துப் பத்திர மூலமாகத் தெரிவிக் கிறார்கள். அவ்வாறு அனுப்பும், "கருத்துப் பத்திர"த்திலுள்ள விஷயங்களை ஓட்டர்கள் வாசித்து, அவற்றைப்பற்றி ஆழ்ந்து யோசித்து, அவர்களில் எவரின் கருத்துப்படி காரியம் நடேறி னால் ஜனங்களுக்கு மேலான அனுகூலம் ஏற்படுமென்று நினைக் கிறாரோ அவரை அங்கத்தினராக நியமிப்பார். நம் நாட்டில் அத் தகைய வழக்கமில்லை. எப்படியோ பலர் ஓட்டர்களின் சகாயம் பெற்று அங்கத்தினராக வந்து விடுகின்றனர். அவர்கள் ஒருவரை யொருவர் குறை கூறுவதில் இருக்கிறார்களே தவிர ஜனங்களுக்கு நன்மையைத் தேடும் விஷயத்தில் கவனம் செலுத்துவதில்லை. மேலும் அவர்கள் பணக்காரர்களா யிருப்பதனால், ஏழைகளாகிய நமக்கு எவ்வெவ்வகையில் கஷ்டம் விளைகிறதென்பதையும், எவ் வெவ்வகையில் அனுகூலம் ஏற்படுமென்பதையும் அறியாதவர்களா யிருக்கிறார்கள். பெரும்பான்மையும் இவர்களால் ஜனங்களுக்குப் பிரதிகூலங்களே ஏற்பட்டு வருகின்றன. ஜனங்களின் சௌகரியத் திற்கென ஏற்பட்ட நகர சங்கங்களென்ற முனிசிபல் விஷயங்களை யும், ஜில்லா போர்டு, தாலுகா போர்டு விஷயங்களையும் ஆராய்ந் தால் மிகப் பரிதபிக்கக் கூடியவைகளாயிருக்கின்றன.

ஏழைமக்களுக்கென ஏற்பட்ட பள்ளிக்கூடங்களில், பண ஆசை கொண்டவர்கள் பள்ளிக்கூடப் புத்தகங்களை அச்சடித்து அவைகளை அதிக விலைக்கு விற்கிறபடியால் ஏழைகளாயிருப்பவர்கள் அதிக கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். சிலர், அதிக விலை கொடுத்து இப்புத்தகங்களை வாங்கித் தம் மக்களுக்குக் கொடுத்துவிட்டுப் பின்னர்க் குடும்பச் செலவுக்குப் பணமில்லாமல் தவிக்கிறார்கள்; சிலர், இப்புத்தகங்களை வாங்குவதற்கு வேண்டிய பணம் தங்களிடத்திலில்லாததால் இவைகளைத் தங்களுடைய மக்களுக்கு வாங்கிக் கொடுக்காமலே இருந்து விடுகிறார்கள். இந்தக் கஷ்டங்கள் ஒழிய வேண்டுமானால் நம் மாகாணத்திலுள்ள முனிசிபல் சபையார் முனிசிபல் அச்சுக்கூடமும், ஜில்லா சபையார் ஜில்லா சபை அச்சுக்கூடமும் ஏற்படுத்தவேண்டும். அவர்கள் 1, 2, 3, 4, 5-வது வகுப்புக்களுக்குரிய பாடப் புத்தகங்களைத் தயாரித்து அவைகளை இந்த அச்சுக்கூடங்களில் அச்சடித்துச் சரசமான விலைக்கு விற்க வேண்டும். இவ்விதமாக ஏற்பாடு செய்யப்பட்டால், இப்புத்தகங்கள் இப்போது கிடைக்கும் விலையில் கால்பகுதி விலைக்குக் கிடைக்கும். முனிசிபல் காரியாலயத்திற்குரிய தஸ்தாவேஜுகளையும் ஜில்லா சபைக் காரியாலத்திற்குரிய தஸ்தாவேஜுகளையும் பிறருடை அச்சுக்கூடங்களில் அச்சடிப்பதனால் பல ஆயிரக்கணக்கான ரூபா செலவாகிறது. மேற்கூறப்பட்டுள்ளபடி முனிசிபல் அச்சுக்கூடமும் ஜில்லா சபை அச்சுக்கூடமும் ஏற்படுத்தி அவைகளில் இந்த தஸ்தாவேஜுகளை அச்சடித்தால், இப்போது ஏற்படும் அச்சுக்கூலியில் பாதித்தொகை மீதியாகும். இவ்வாறு மீதிப்படும் தொகையைக்கொண்டு ஜனங்களுக்கு ஏதேனும் ஒரு அனுகூலம் செய்யலாம்.

ஆங்கில வைத்திய முறை கற்றுள்ளவர்களைக்கொண்டு முனிசிபல் வைத்திய சாலைகளிலும், யூனியன் வைத்தியசாலைகளிலும், தாலுக்கா சபை வைத்திய சாலைகளிலும், பிணியாளர்களைச் சோதித்து அவர்களுக்கு அன்னிய நாட்டு மருந்துகள் அளிக்கப்படுகிறபடியால் செலவு அதிகமாக ஏற்படுகிறது. இவ்வாறு செய்வதற்குப் பதிலாக நம் நாட்டு வைத்திய முறை அறிந்துள்ளவர்களைக் கொண்டு இந்நோயாளிகளைச் சோதித்து இவர்களுக்கு நம் நாட்டு மருந்துகள் கொடுக்கப்பட்டால், இப்போது ஏற்படும் செலவில் முக்கால் பகுதி தொகை மீதியாகும். இவ்வாறு மீதியாகும் பணத்தைக்கொண்டு குடிகளுக்கு ஏதேனும் ஒரு அனு-



கூலம் செய்யலாம். நம் நாட்டு வைத்திய முறைதான் உலகில் சிறந்த முறையாயிருக்கிறது. ஆங்கிலேயர் முறைப்படி ஒரு கட்டியைக் கத்திகொண்டு அறுத்து வேதனை உண்டாக்கிக் குணப்படுத்த வேண்டியதா யிருக்கிறது. நம் முறைப்படி அக்கட்டியின்மேல் பச்சிலையை வைத்துக் கட்டி வேதனை உண்டாக்காமலே குணப்படுத்தி விடலாம். கால் எலும்போ கை எலும்போ முறிந்தால் ஆங்கிலேயர் முறை கற்றுள்ளவர், முறிந்த பாகத்தில் காலையோ கையையோ துணித்து விடுவர். நம் நாட்டு முறைப்படி, முறிந்த பாகத்தில் பச்சிலைச் சாற்றைப்பிழிந்து, வேறுபட்ட எலும்பை ஒன்றாகச் சேர்த்து விடலாம். இவ்விதமான சிறப்பான முறையை நம் நாட்டார் கைவிட்டுவிட்டு அயல்நாட்டார் முறையைக் கையாண்டு துன்புறுவது வெட்ககரமாகும். அயல் நாட்டார் மருந்துகள் சொற்பகாலம் வரையில்தான் குணத்தை அளிக்கும்; நம் நாட்டு மருந்துகள் நீண்டகாலம் வரையில் குணத்தை உண்டாக்கும். ஆங்கிலேயர் மருந்துகளைக் கொடுத்து, "குணப்படாது" என்று கூறி ஆங்கில முறை வைத்தியர்களால் கைவிடப்பட்ட பிணியாளர்கள் பலரும், நம் நாட்டு மருந்தை உட்கொண்டு குணமடைந்திருக்கின்றனர். நம் முன்னோர்கள் தயாரித்த இத்தகைய சிறப்பு வாய்ந்த மருந்துகளை நம் நாட்டார் கைவிட்டு விட்டு அயல் நாட்டார் மருந்துகளில் சிந்தையைச் செலுத்துவது பொருந்தாச் செயலாகும். வெளிநாட்டார் நம் நாட்டு மூலிகை முதலிய வைத்தியச் சாமான்களைத் தங்கள் நாட்டுக்குத் தருவித்து அவைகளைச் சுத்தப்படுத்தி மருந்தாகச் செய்து நம் நாட்டுக்கு அனுப்பி அதிக விலைக்கு விற்கிறார்கள். மேற்கூறப்பட்ட வைத்தியசாலைகளில் இம்மருந்துகள் கையாளப்படுகிறபடியால் அதிகப் பணம் கொடுத்து அவைகளை வாங்க வேண்டியதாயிருக்கிறது. இவ்வாறு ஒரு வகையில் செலவு அதிகமாக ஏற்படுகிறது. இந்த வைத்தியசாலைகளில் நம் நாட்டு மருந்துகளைக் கையாளாமல் வெளிநாட்டு மருந்துகளைக் கையாளுவதினால் வெளிநாட்டாருக்கு ஜீவனம் ஏற்பட்டு நம் நாட்டு ஜனங்களில் ஒரு பகுதியினருக்கு ஜீவனத்திற்கு வழியில்லாமற்போய்விட்டது. நம் நாட்டில் உற்பத்தியாகும் மூலிகை முதலிய வைத்தியச் சாமான்களைக்கொண்டு மருந்துகள் தயாரித்து அவைகளை இவ்வைத்திய சாலைகளில் கொடுத்தால் செலவு குறைவதல்லாமல் நம் நாட்டிலுள்ள ஏழை ஜனங்கள் அநேகருக்கு ஜீவனத்திற்கு வழி ஏற்படும்.

நம் மாகாணத்தில் அநேக இடங்களில் சுங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்நாட்டில் சில மாகாணங்களிலும் இதரநாடுகளிலும் இந்தச் சுங்கச் சாவடிகளில்லை. நம் மாகாணத்தில் இவைகள் இருப்பதனால் ஏழைகளாகிய பலர் அதிக கஷ்டத்திற்கும் சஞ்சலத்திற்கும் ஆளாகிறார்கள். உண்பதற்கும் உடுப்பதற்கும் தேவையான அளவு உணவும் உடையுமில்லாமல் வருந்தும் ஏழைக் குடியானவர்கள் வண்டி கட்டிக்கொண்டு ஒரு ஊருக்குப் போக வேண்டியிருக்கையில் அவர்களுக்குச் சுங்கச்சாவடிகளில் கட்டணம் செலுத்த வேண்டியதைப்பற்றி மனக்கவலை ஏற்பட்டு விடுகிறது. அவர்களிடத்திலோ காசில்லை. இந்தக் கட்டணம் செலுத்துவதற்குப் பணம் சேகரிப்பதற்கு அவர்கள் படும் அவஸ்தை கொஞ்சமல்ல. இந்தச் சாவடிகள் இருப்பதற்குச் சட்ட சபை அங்கத்தினர்களை நியமிப்பவர்கள்தாம் காரணர். இந்தச் சாவடிகளை விலக்கிவிட முனிசிபல் சட்டத்தையும், ஜில்லா, தாலுக்கா, யூனியன் சபை சட்டத்தையும் திருத்த வேண்டியதைப்பற்றி ஜஸ்டிஸ் கட்சியாராவது சுயராஜ்ஜியக் கட்சியாராவது இது பரியந்தம் ஒரு வார்த்தையாகிலும் பேசவில்லை. அவர்களைப்போலவே சட்டசபை அங்கத்தினர்களை நியமிப்பவர்களும் இந்த விஷயத்தில் அக்கரையில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சட்டசபை அங்கத்தினர்களை நியமித்த சமயத்திலாவது அல்லது பிறகாவது இந்தச் சட்டங்களை இவ்வாறு திருத்தும்படி இந்த இரண்டு கட்சியார்களை வற்புறுத்தியிருந்தால் இவ்விஷயத்தில் ஒரு வழி ஏற்பட்டிருக்கும்; இந்தச் சாவடிகள் எடுபட்டுப் போயிருக்கும். சுங்கச் சாவடிக் கட்டணம் வசூலிப்பதற்குக் குத்தகைவிடும் விஷயமாகக் கிடைக்கும் பணத்தைக் கொண்டும், மற்ற வகைகளில் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதித் தொகையைக் கொண்டும் பாட்டைகள் ஏற்படுத்தப் படுகின்றன; அவைகளின் மராமத்து செய்யப்படுகின்றன. இந்தச் சாவடிகள் விலக்கப்பட்டால், அவைகள் மூலமாகக் கிடைக்கும் வருவாயின்று பாதைகள் போடுவதற்கும் ரோட்டுகளைச் செப்பனிடுவதற்கும் பணமில்லாமற் போய்விடுமென்று சிலர் வாதிக்கக்கூடும். அது ஒரு வகையில் ஒப்புக்கொள்ளக் கூடியதே; எனினும், குடும்பச் செலவுக்கு வேண்டிய தொகைக்கு மேற்பட்ட பணம் வைத்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்துதான் பணம் வசூலிக்க வேண்டும்; ஏழைக் குடியானவர்களிடமிருந்து அதை வசூலிப்பது அநீதியாகும்; தங்கள் வயிற்றுக் கொடுமையின்பொருட்டுக் கடும் வெய்யிலி



னாலும் குளிரினாலும் வருந்திக்கொண்டு வைக்கோல், வறட்டி, செங்கல், மணல், நெல் முதலிய பொருள்கள் அடங்கிய வண்டிகளைச் செலுத்திச் செல்பவர்களிடமிருந்து பணம் வசூலிப்பது கொடுஞ்செயலாகும். இது தெய்வத்திற்குச் சம்மதியாயிராது. மோட்டார் வண்டி வைத்துக்கொண்டிருப்பவரிடமிருந்து வரி சென்னையில் ஆறு மாதங்களுக்கு 35 ரூபாவும், ஜில்லாக்களில் 25 ரூபாவும் வசூலிக்கப்படுகின்றன. நம் நாட்டில் வங்காள மாகாணத்தில் இத்தகையவரிடமிருந்து 200 ரூபா வசூலிக்கப்படுகிறது. அது போலவே நம் மாகாணத்திலும் வசூலிக்கலாம். இவ்வாறு செய்தால், பாதை போடுவதற்கும், செப்பனிடுவதற்கும் சுங்கச் சாவடிகள் மூலமாக இப்போது வசூலாகும் தொகையைவிட அதிகமான தொகை கிடைக்கும். இந்த வரியை அதிகப்படுத்துவதற்கு மேற்கூறப்பட்ட சட்டங்களைத் திருத்த வேண்டும். ஜஸ்டிஸ் கட்சியார் 1920-ம் ஆண்டு முதல் 1926-ம் ஆண்டு வரையில் பெரும்பாலும் சட்ட சபை அங்கத்தினர்களாகவும் மந்திரிகளாகவும் இருந்தனர். அக்காலத்தில் அவர்கள் இந்த வரியை அதிகப்படுத்துவதற்கும் சுங்கச் சாவடிகளை விலக்குவதற்கும் இந்தச் சட்டங்களைத் திருத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள், இந்த வரியை அதிகப்படுத்தினால் தங்களில் மோட்டார் வண்டியுடையவர்களும் இவ்வண்டி வைத்துக் கொண்டிருக்கும் மற்றவர்களும் இப்போதைவிட அதிகமாகப் பணம் செலுத்தும்படியாக நேரிடுமாதலால் அவர்கள் தங்கள்பால் கோபமும் வெறுப்பும் கொள்வார்கள் என்று அஞ்சி இந்தச் சட்டங்களை இவ்வாறு திருத்தாமலிருந்துவிட்டார்கள் சென்ற 1926-ம் ஆண்டில் சட்ட சபை அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டபோது சுயராஜ்யக் கட்சியாருடன் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் அங்கத்தினர்களாக ஏற்பட்டார்கள். அவர்களாகிலும் இந்தச் சட்டங்களை இவ்வாறு திருத்தப் பிரயத்தனஞ் செய்திருக்கலாம். ஆனால் அவர்களும் ஜஸ்டிஸ் கட்சியாரைப்போல் அஞ்சி இவ்விஷயத்தில் ஈடுபடாமலிருக்கிறார்கள்.

மேற்கூறப்பட்ட மூன்றுவிதமான அனுகூலங்களுடன் இன்னும் பலவிதமான அனுகூலங்கள் நமக்கு ஏற்பட வேண்டியவைகளாயிருக்கின்றன. முனிசிபல் சபை அங்கத்தினர்களாகவும், சட்டசபை அங்கத்தினர்களாகவும், மந்திரிகளாகவும் இருக்கும் பணக்காரர்கள் நமக்கு இந்த அனுகூலங்களைச் செய்யமாட்டார்கள். ஆதலால் ஏழை வகுப்பினரே இச்சபைகளின் அங்கத்தினர்களாக ஏற்பட்டுத் தங்களுக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்துகொள்ள வேண்டும்.

ஓம் தத் ஸத்.

# 13-வது ஆண்டுப் பூர்த்தி.

சந்தா நேயர்களே! கடவுள் அனுக்கிரகத்தாலும், பெரியோர்களின் ஆசிர் வசனத்தாலும், உங்களுடைய பேருதவியாலும் தமிழ் நாட்டில் நாடோறும் செழிப்புற்று நடை பெற்றுவரும் நம் ஆனந்த போதினிக்கு இந்த ஆனிமீ முடிவோடு 13-வது ஆண்டு பூர்த்தியாகிறது. மற்றெவ்வருடங்களைக் காட்டினும் இவ்வருடத்தில் உங்களுடைய ஆதரவை அதிகமாகவே ஏற்பட்டிருக்கிறது. உங்களில் சில அன்பர்கள் ஜீவிய சந்தாதாரராகச் சேர்ந்தனர்; பலர், தங்கள் தங்களால் இயன்றவரை புதிய புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பினார்கள்; விசேஷ பத்திராபிமானமுள்ள சில நண்பர்கள் நூற்றுக்கணக்கான சந்தாதாரர்களையும் சேர்த்தனுப்பி யிருக்கின்றனர். நீங்கள் இவ்வாறு பலவகையிலும் நலம் புரிந்து பத்திரிகை நடத்துவதில் நமக்கு ஊக்கமளித்து வந்தபடியால் நாமும் முன் ஆண்டுகளைக் காட்டினும் இந்த ஆண்டில் அதிக உற்சாகமும், ஊக்கமும் அடைந்து நம் போதினியை அதிக பக்கங்களுடையதாகவும், மாதமொரு முகப்புப் படமுள்ளதாகவும், சிறந்த கல்விமான்கள் பலரால் எழுதப்படும் உயர்ந்த வியாசங்களுள்ளதாகவும், ஒவ்வொரு தமிழ்மாதம் முதல்தேதியிலும் தவறாமல் வெளியிட்டு வந்தோம். இவ்வாறு நடை பெற்றுவரும் நம் போதினியின் உயர்வு நோக்கி மேலும்மேலும் பல புதிய சந்தாதாரர்கள் சேர்ந்துகொண்டே வருகின்றனர். இங்ஙனம் பலரும் நம் போதினிக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து வருவதால் சென்ற வருடங்களினும் இவ்வருடத்தில் சந்தாதாரர்களின் தொகை அதிகரித்திருக்கின்றது. இதனோடு சந்தாதாரர்களனைவரும் நம் பத்திரிகையில் மிகுந்த அபிமான முடையவர்களா யிருப்பதால் நாம் இவ்வருடக் கடைசியில் எல்லோரும் சந்தாத்தொகையை முன்பணமாக அனுப்பிவிட வேண்டு மென்று தெரிவித்தபடி பெரும்பான்மையோர் அனுப்பி நமக்குப் பெரிய சௌகரியத்தை உண்டாக்கி யிருக்கின்றார்கள். சிறுபான்மையோரே முன்பண மனுப்பாதிருப்பவர்; அவர்களும் இம்மாதம் வி. பி. யைப் பெற்றுச் சந்தாவைச் செலுத்திவிடுவார்கள். சந்தாதாரர்கள், நமக்குப் பலவகையிலும் ஊக்கமளித்து வந்ததால் நாம் வருடந்தோறும் பத்திரிகையை விருத்திசெய்து வந்ததோடு சென்ற ஆண்டு 11-வது சஞ்சிகையில் தெரிவித்தபடி நம் ஆபீசுக்கு உயர்ந்த கட்டிடம் கட்டத்தொடங்கி அவ்வேலை பூர்த்திபெற்றுச் சென்ற வைகாசி மாசத்தில் அதில் ஆபீஸ் ஸ்தாபிக்கப்பட்டு வேலை நடந்துவருகிறது. அக்கட்டிடத்திற்கு நாம் தெரிவித்த ரூபா இருபத்தையாயிரத்துக்கு மேலும் அதிகத்தொகை செலவாகியிருக்கிறது. அதனோடு இன்னும் நம் பத்திரிகையை 64. பக்கங்களுடையதாகவும், முகப்பு ஆப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும், சிறந்த கல்விமான்களால் எழுதப்படும் வியாசங்களுடனும் வெளிப்படுத்திவர உத்தேசித்திருக்கிறோம். ஆதலின், சந்தாதாரர்கள் இன்னும் அதிகமாகச் சேர்ந்து நமக்குத் துணை புரிவார்களாயின் நம் உத்தேசப்படியே பத்திரிகையை நடத்திவருவோம். நம் நோக்கம் நிறைவேறவும், நம் போதினியின் அபிமானிகட்கு நிறைந்த ஆயுளும், சிறந்த செல்வமும், ஆனந்த வாழ்வும் உண்டாகவும் பேரருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுகின்றோம்.

பத்திராதிபர்,

ஆனந்த போதினி.

# சமரஸ ஞானச் சொற்பொழிவு.

(இராணிப்பேட்டை சமரஸ சன்மார்க்க சங்கம், 6-வது ஆண்டு விழாவில் 5—5—28ல், சுவாமி சுத்தானந்த பாரதியார் தலைமை யுரையாகக் கூறியது.)

அன்பர்காள்! உலகில் ஒரு ஸமரஸப் பசி தோன்றியிருக்கின்றது. சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை என்னும் சொற்கள் நமது பாரத மக்களின் ஆவியினின்று ஒலிப்பதை நாடோறும் பார்க்கிறோம், படிக்கிறோம், கேட்கிறோம். உலகில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரே கடவுளை அடைய வழிகாட்டும் பல மதங்கள் ஒன்றோடொன்று பொருது நிற்கின்றன. பெயராலும் வடிவாலும் கடவுளை வேறுபடுத்தி, இந்துமதம் அல்லற்படுகிறது. சைவ வைணவச் சண்டைகளும், தென்கலை வடகலைச் சண்டைகளும், வேதாந்த சித்தாந்த வாக்கு வாதங்களும், துவித அத்துவித வாதங்களும், சங்கர ராமாநுஜ மத்துவ மனஸ்தாபங்களும், நாமம், விபூதி, கோபி, பூணூல், முத்திரை, அக்கம் முதலியவற்றின் தாக்கங்களும் ஒன்றையொன்று கொன்று கொண்டு நம் நாட்டின் சமரஸத்தைக் கெடுத்து வருகின்றன. மொட்டைக்கும் குடுமிக்கும், தாடிக்கும் கிராப்பிற்கும், கொரானுக்கும் கீதைக்கும், பைபிளுக்கும் திருவாய் மொழிக்கும் சண்டையும், பூசலும், வாதமும், குரோதமும்! வாதம்புகுஞ் சமயநெறிக் கரிதாகிய ஒரு பொருளின் பெயரை மனித சமூகம் சூதாடுகின்றது. பெயர் வடிவான பேதங் கடந்ததொரு பொருளைப் பற்பல விதமாகப் பாவித்து உலகோர் அல்லற்பட்டு அழியும் கொடுமை பொறுக்க முடியவில்லை. உலக நன்மைக்காகவும், மனித சமூகத்தின் ஒற்றுமைக்காகவும், பெரியோர்களால் உபதேசிக்கப்பட்ட அறக் கோட்பாடுகளை அறியாது, உலகம் சமயச் சண்டையில் சாகிறது. ஒவ்வொரு சமயத்துள்ளும் எத்தனை கிளைச்சமயம், எத்தனை குட்டிச்சண்டை, அடிதடி! இத்தனை சமயங்களும் சேர்ந்து உலகை யுத்தகளமாக்கி விட்டன; மனிததர்மத்தைப் பாழ்ப்படுத்தி விட்டன; அகங்காரத்தை ஆள விடுத்தன; சகோதரனைச் சகோதரன் கொல்லும்படி விடுத்தன; சமணரைச் சைவர் கழுவேற்றினர்; சைவத் திருநாவுக்கரசரை சமண மஹேந்திர வர்மன் பாடுபடுத்தினான். சாதிக் கொடுமைகளைப் போக்கவந்த புத்த மதமும் சமண மதமும் பட்டபாட்டிற்குக் கணக்குண்டோ? இரு மதங்களின் மூலக் கொள்கைகளையும் சங்கரர் தழுவித் தம் அத்வைத மதத்தைப் போதித்தார். சர்வம் பிரம்ம மயம், தத்வமஸி, சிவோஹம் என்ற உயர்ந்த ஸமரஸ மந்திரங்களை அத்வைத மதம் போதித்தது. அம்மந்திரங்களை அறிபவன் எல்லா வுயிர்களையும் பராபரன் சந்நிதியெனறு வணங்குவான். அத்வைதத்தை மாயாவாதமென்று சித்தாந்திகள் தங்கள் பசுபதி பாசக் கொள்கையால் தாக்குவர். அவர்களை வைணவர் தங்கள் அனந்தகுண கல்யாண ஸ்ரீயப்பதியான வைகுண்ட நாதனின் பெயரால் கண்டிப்பார். அவர்களையும ஆத்திரத்துடன் தாக்குவர் மத்துவர். இந்த அக்கப் போரால் சிந்திய ரத்தம கணக்கு வழக்கில்லை. முகம்மதியர்களுக்குளளும் சுனிக்கும் ஷியா வகுப்பாருக்கும், முகம்மதிய அகம்மதிய வகுப்பாருக்கும் உட்புகைச்சல் ஒயவில்லை. சகோதர ஒற்றுமையை மதக் கோட்பாடாக்கிய இஸ்லாம் இந்நிலையிலிருக்கிறது. கிருஸ்தவ மதமோ சில்லறை மாற்றிச் செலவழிந்து வருகிறது,

விவிலில் மட்டும் கிறிஸ்தவர்கள் கையிலிருக்கிறது. விவிலின் உபதேசங்கள் அவர்கள் நெஞ்சிலும் செய்கைகளிலு மில்லை. கிறிஸ்தவ உலகில் பலாத்காரச் செய்கை யில்லையா? சாந்த வுருவான இயேசு நாதரின் சீடர்கள் ஒருவரை ஒருவர் பகைத்து வெட்டிக் கொள்ளுகின்றனர். பிற ஜாதியாரை நசுக்குகின்றனர். தற்போது இயேசு நாதர் அவர்களிடை யிருந்தால் அவரையும் கறுப்பு மனிதா என்று தள்ளுவர்.

அந்தோ! உலகம் கடவுள் பெயரால் சண்டையிட் டிறக்கும் மடமை என்று ஒழியுமோ? உலகம் மடமையால் இப்படிக் கொந்தளித்துச் சமரசத்திற்காகப் பெரும் பசி எடுத்திருக்கிறது. இது சமயம் மனித சமூகம் முழுதும் இணைந்து ஒரு குலமாகக்கூடிய—ஒரு தர்மயாகக்கூடிய ஒரு தர்மம் பிறக்க வேண்டி யிருக்கிறது.

## வினாக்கள்

உலகில் தற்போது நடக்கும் சமயக் கூத்துகளை நோக்குவோன் சந்தேகக் கடலுள் ஆழ்வான். மதமென்றால் என்ன? யார் படைத்தது? ஏன் படைத்தான்? படைத்தவன் ஒருவனா, பலரா? ஒருவனாயின் பல மதங்கள் ஏற்படுத்தி மக்களுள் சண்டை யெழுப்பச் செய்வானேன்? அதுவோ அவன் தொழில்? இச் சண்டை மதங்களோ மனிதனுடைய மதம்? சண்டை மதங்களால் மனித சமூகத்துக்கு ஏதேனும் முன்னேற்ற முண்டா? அது உலக சமரசத்தைத் தருமா? பின்னை மனிதன் மதமெது? அதன் கொள்கைகள் என்ன? எத்தகைய தர்மத்தால் மனிதன் ஓர் குலம்போல் வாழலாம்? எதனால் உலகிற் சண்டை ஒழிந்து அன்பு நிலவும்? அத்தகைய அறத்தின் கோட்பாடுகள் என்ன? அது புதுமதமா? எப்போதும் உள்ளதா? அதனால் மனித சமூகம் எத்தகைய பலனை யடையும்? என்ற கேள்விகள் நமது மனத்தில் உதிக்கின்றன. இவற்றிற்கு முடிந்த மட்டும் விடையளிப்போம்.

மக்களுக்குள் ஏற்கனவேயுள்ள தெய்வ சக்தியை விளக்குவதே மதமெனப்படும். மனிதன் தன்னுள் இலகும் தெய்வ சக்தியைக் கிட்டியளவே அவனுடைய களிப்பும் மிகும்.

கடவுளோடிருத்தல் களிப்புமின்பமும், கடவுளைப் பிரிதல் கவலையுந் துன்பமும்.

தெய்வத் தன்மை யடைவதே மனித வாழ்வின் நோக்கம். உலகிற் பிறந்த ஒவ்வொரு உயிரும் இந்த உயர்ந்த படியை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. எல்லா உயிருள்ளும் ஈசனைக் காண்பதே மனிதனுக்குக் கண்ணழகு. ஈசன் திருமொழியை எவர் சொன்னாலும் மகிழ்ந்து கேட்பதே மனிதனுக்குக் காதழகு. நம்பி நினைத்து, முயன்று ஞானத்தை யடைவதே மனிதனுக்கு அறிவழகு. ஈசனுக்கு ஏற்றதாக, அவன் படைப்பிற்குரிய தாசஞ் செய்வதே மெய்த்தவம். இதயம் பூவாகவும், இன் சொல்லே மந்திரமாகவும், தொண்டே துதியாகவும் வழிபடுதலே மனிதன் வழிபாடு. அன்பு, அறம், நன்றி இவையே மனிதன் செய்கைகளுக் கழகு. தர்மமொன்றே மதக் கொள்கை. அதைத் தாண்டிடின் வாழ்வு தழைப்பது மில்லை.

## கடவுள் ஒருவர்

ஒரே கடவுளே எல்லாப் பூதங்களிலும் மறைந்தவன்; எல்லாவற்றிலும் வியாபித்தவன். எல்லாப் பூதங்களுக்கும் அந்தராத்மாவாக வுள்ளவன். கன்மங்களுக் கதிபதி. சர்வ பூதங்களுக்கும் இருப்பிடம், சாட்சி, சேதனன், கேவலன், நிர்குணன். பூதாத்மா ஒருவனே. அவன் எல்லாருக்குள்ளும் முன்னி யிருக்கிறான் என்று உபநிடதங்கள் கதறுகின்றன. அதை அவன்



படைத்து அதனுட் புகுந்தான் என்று தைத்திரியம் முழக்குகின்றது. தானே ஜீவகோடிகளாகப் பிரிந்தான். அந்த ஜீவகோடிகளுள் கடவுளே விளங்கி நிற்கிறான் என்று உபநிடதம் பறையறைகிறது.

“என்னினும் உயர்பொருள் எள்ளளவில்லை மாலைக் கயிறுபோல் மன்னுயிர்க் குள்ளேன்” என்று பகவத்கீதை முறையிடுகின்றது.

எல்லா அறிவுள்ளும் ஆண்டவன் நிலவுகின்றான்; அவன் விறகிற் றீயினன். பாலிற்படும் நெய்போல் மறைய நிற்பவன். மாமணிச் சோதியான்; அவனே அனைவருக்குந் தோன்றாத் துணையாயிருப்பவன். அத்தகைய உலகத் தந்தைக்கு இஸ்லாம், கிறிஸ்து, இந்து, புத்த வர்ணங்கள் இல்லை. அவற்றைப் பூசினான் மனிதன். மனிதன் தனது மாயையால் அப் பரம் பொருளைப் பற்பலவிதமாக எண்ணுகிறான். ஒன்றென்றும் அதனுள்ளேயே தோற்றமும் ஒடுக்கமுமென்றுங் கண்டோனே அதனைக் காணமுடியும். அத்தகைய கடவுள் சுத்தமே வடிவானவன். அவன் ஜீவனை சுத்தப்படுத்திப் பிறப்பு இறப்பென்னும் உலையிலுருக்கித் தன்னுடன் முடிவிற் சேர்த்துக் கொள்ளும் தட்டான். சுத்தமான மனத்துள்ளேயே அவன் காணப்படுவான். சுத்தமே கடவுள்.

“எப்பூதங்களிலும் உள்ளவன் ஆன்மா வென்றும், ஆன்மாவினிடமே எல்லாப் பூதங்களு முளவெனவும் தியானித்து பரப்பிரமத்தை யடைவான். வேறு வழியில் அதனைப் பெறமாட்டான்.” என்று கைவல்யோபநிடதம் சொல்லுகிறது.

“எல்லாப் பூதங்களுக்குள்ளும் நான் இருக்கிறேன் என்று எண்ணிப் பணியும் யோகி என்னை அடைகிறான்” என்று கீதை முறையிடுகிறது. ஆதலின், உலகிற் சிறந்த வழிபாடு, ஆருயிர் வழிபாடே யாகும். அனைத்துள்ளும் கடவுளைக் கண்டு அருட் பணி புரிதலே மனிதனுடைய விடுதலை வழியாகும்.

## ஏன் படைத்தான்?

உலகம் பராசக்தியின் கோயில்; அவன் திருலீலைக்கூடமே பூமி; பூமியின் காரியங்கள் நடப்பதற்காகப் பல வினைகளுக்கு ஆளாகப் பல வுயிர்களும் படைக்கப்பட்டன. உலகிற் பணி செய்ய ஒவ்வொரு வினைக்கும் அணியாய் உயிர் படைக்கப்பட்டது. கடவுளுக்கும் நமக்கும் நடுவிலிருப்பது கரும வேலியே; அக்கரும வேலியைத் தாண்டியே கடவுளை யடைய முடியும்.

## அவனை அடைவ தெப்படி?

மனிதன் கடவுளை அடையும் வழி ஒன்றே; அதுவே வினையறிந்தாற்றி விடுதலை யடைதல். ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்றார் அப்பர். ‘சீரிய பணி செய்து நாளுண்டிரு. அதுவே உய்யும் அற வழியாகும்’ என்று உபநிடதம் கூறுகிறது. கர்மத்திற்கே நீ அதிகாரி. பலனை எனக்கு அர்ப்பணித்து அருட்பணி புரிவாயாக என்று கீதை முழங்குகிறது. ஆதலின், ஒவ்வொருவரும் தம் வாழ்வின் நோக்கத்தை எண்ணி யறிந்து திண்ணியராய் அருட்பணி புரிந்தே அவனை நண்ணுவர். அவ்வினையனவே உலகில் நமது தோற்றமாகும்.

## அறம்

ஒவ்வொருவனுக்கும் தன் கர்மமே சுதர்மமாக அமைக்கப்பட்டுள்ளது. அந்த சுதர்மத்தை ஆற்ற ஒரு சிறந்த பொது தர்மத்தை அவன் அனுட்

டித்தே தீரவேண்டும். தன்னலம் விடுத்து அருட்பணி புரிய மனிதன் சன்மார்க்க நெறியில் ஒழுக வேண்டும். சன்மார்க்கத்தை யடைய மனிதன் சுத்த மடைய வேண்டும்.

சுத்த மடைந்தவனே சன்மார்க்க நெறியில் நின்று தன்னயம் விடுத்து அருட்பணி புரியும் வெற்றி வீரனாவான். கடவுளை அடைவதற்குச் சுருக்கு வழி அவனுடைய சட்டத்திற்குக் கீழ்ப்படிதலே. அவனுடைய சட்டம் தர்மமே. தர்மம் வேதத்திற்கு முன்னேயே உள்ளது; தர்மமே கடவுளின் சக்தி. அறம் ஆதியந்த மற்றது. எல்லா வேதங்களும் அறம் என்னும் பெருநூலின் சிற்றிதழ்களே; அறத்தின் துளியே அருமறை யெல்லாம்; பல நூற்றாண்டுகளுக் கொருமுறை வானினும் விரிந்த அற நூலிலிருந்து ஒரு உண்மை மனித சமூகத்தைக் காக்க ஒரு தெய்வீக புருஷனால் கொண்டு வந்து பரப்பப்படுகிறது. அந்த அறவழியே மனிதன் கடவுளை யடையும் பாதை. அந்த அறவழியில் மனிதனுக்கு ஒளியாய் வழி காட்டுவது சுத்தமே. சுத்தப் படப்பட மனிதன் கடவுளாகிறான். ஆதலின், சுத்த மடைவதே மனித வாழ்வின் முதல் நோக்கம்.

## சுத்தம்

மனோவாக்குக் காய சுத்தமடைய வேண்டும். கடவுளைக் காணும் வழியும் அதுவே. அதனால் மனிதன் இம்மை மறுமை யின்பங்களையும் அடைந்து, இறைவனையும் அடைகிறான். சுத்தமே இயம நியம சாதனம். சுத்தமே பூரணத்துவம், சுத்தமே கடவுட் டன்மை.

அன்பு, உறுதி, மெய்யறிவு, ஆண்மை, ஸமரஸம், இன்பம் இவையே நம்மைக் கடவுளுடன் கலக்கச் செய்யும் மனச் சுத்தம். சிறுமை, பொறாமை, வஞ்சகம் இவைகளை விடுத்து, உண்மையுள்ள இனிய வீரவுரை பேசுவதே வாக்குச் சுத்தம். பசிக்கு ஒரு பாபமற்ற தொழிலும், உண்மையான அருட்பணியும், நாண், எளிமை, நேர்மை முதலியனவும் காய சுத்தம். இப்படி முத்தூய்மை யடைவதே சுத்த நிலை. இதுவே இறைவ னொன்றிய நிலை.

சத்தியம், நலம், உறுதி, அருள், தொண்டு, அடக்கம் இவையே சுத்தனை யடையும் வழி; சுத்த மதமே எல்லா மதங்களின் சம்மத மாகும். இதுவே மனிதனுக்கு மதம் (தர்மம்) ஆகும். முதலில் இத்தகைய சுத்த மடைந்து, பந்தங்களினின்று சுதந்திரப்பட்டு ஸமரஸப்படுவதே மனிதவாழ்வின் இன்பம். சுத்தம், சுதந்திரம், ஸமத்துவம் இம்மூன்று மொழிகளில் மனிதனின் இன்பம் அடங்கியுள்ளது. இவையின்றி ஒன்றிற்கும் சக்தியில்லை. மனித சமூகம் சாந்தமும் சமரசமும் அடைந்து கடவுளையடைய வேண்டுமானால் இதனினும் சிறந்த வழி வேறில்லை.

முதலில் நாம் மனிதன்; பிறகே இந்தியன், ஐரோப்பியன், கிறிஸ்தவன், முகம்மதியன் என்பது. முதலில் நாம் மனித தர்மத்தைப் பின்பற்றவேண்டும். பிறகே நாம் இந்த மதம் அந்த மதமென்ற விவகாரம் பிறக்கும். முன்னே



நாம் மனித சமுதாயத்தின் ஒரு அங்கத்தினரான பிறகே நாம் இந்தியன், ஆங்கிலன் என்னும் விவகாரம் பிறக்கிறது. ஜாதி, நிறம், ஏழை, பணக்காரன், பெயர், வடிவு, விபூதி, நாமம், குடுமி, சட்டை, மொட்டை, தாடி, ருத்திராக்கம், துளசிமாலை, தென்கலை, வடகலை முதலிய பேதங்களெல்லாம் அன்னமயகோச விகாரம். இவற்றிற்கும் உண்மையான மனித தர்மத்திற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. இந்த வெளித்தோல் விவகாரங்களெல்லாம் அவரவர் சௌகரியத்தைப் பொறுத்தனவாகும். இவற்றைக் கொண்டு சண்டை தொடுத்து அறத்தை விடுத்து அல்லற்படுகிறான் மனிதன். இந்த வெளி வேஷங்களை மறந்து உள் மனிதனுடன் உறவு பேணிச் சுத்தமடைந்தால் உலகின் சண்டைகள் ஒழியும். அந்தச் சண்டை ஒழிந்த நிலையே சமரச நிலை.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்தல் வேண்டும். அன்பர் பணியாற்றவேண்டும். அன்பே சிவமாயறிதல் வேண்டும். உலகம் கோயில்; உலகோர் நடமாடும் கோயில்கள்; நாம் உலகில் ஒரு அருட்பணி செய்யவந்தோம். உலகன்னையான பராசக்தியை நெஞ்சில் ஊன்றி அவள் மைந்தரான நமது சகோதரருக்கு அருட் பணி புரிவதே மனிதவாழ்வின் நோக்கம். அதற்கேற்பட்ட காலமே ஆயுள்; குறித்த ஆயுளில் வினையை முடிப்பதே ஜீவன் முக்தி. எஞ்சிய வினையை இயற்ற வருவதே பிறப்பு; வினைக்குரிய ஆயுளின் முடிவே இறப்பு; எல்லோரும் பராசக்தியின் அன்புக் குடைக்கீழ் அவள் அருளில் வளருங் குழந்தைகளாக எண்ணி அன்பு புரிவதே ஸமரஸம். ‘அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு’’ என்றதே சமரஸ நிலை; கடவுளாகிய பொன்னைக் கொண்டு மனதில் அனைவரும் உரைத்து மிளிருவதே சமரச அன்பு நிலை.

“யானும் நீ அதன்றி யெம்பிரானும் நீ யிராமனே.”

என்று உருகி உறுதிப்படுவோனிடமே ஆத்மாராமன் நிலவிச் சமரஸ விழியைத் தருவான். ‘சமத்வம் யோக உச்சதே’ என்று கீதை மொழிந்தது.

இத்தகைய சமரச உணர்ச்சியே உலகை ஒற்றுமைப்படுத்தும்; அதுவே ஜாதிக் கொடுமையையும் சமயச் சண்டையையும் தீர்க்கும். அன்பர்காள்! சத்ய யுகம் பூக்கப் போகிறது. அது சமரஸ மணத்துடன் சாந்தப் பொலிவுடன் பூக்கும். அந்த யுகத்தில் அனைவரும் அத்தன்மை யடைவர். தீண்டாதார் என்ற பேச்சே ஒழியும்; ஏழு கோடி நாராயணரைத் தீண்டாதார் என்று சொல்லும் தெய்வ நிந்தனை ஒழியும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் என்ற உணர்ச்சி பிறக்கும். அந்த சத்யுக தூதராய் நாம் விளங்குவோமாக.

சுத்தம் சுதந்திரமும் தோற்றும் சமத்துவமே, இத்தலத்தோர்க் கின்ப நெறி.
நல்லவரோங்க, நலமோங்கிப் பூவெங்கும் எல்லோரும் வாழ இசை!
அறமும், அறவோர், அறச் செயலும் பூவில், உறவுற்று வாழ்க உவந்து!
எல்லா உலகிற் கிறைவன் ஒருவன், எல்லா வுடலும் இறைவ னாலயமே.




## பண்டித ஸ்ரீ மதன மோகன மாளவ்யா.

(491-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாளவ்யா அவர்கள் அதிவைதீக பிராம்மண வகுப்பைச்சேர்ந்தவரென்றும், தீவிர சமயப்பற்றுள்ளவரென்றும் நாம் முன்பே வரைந்தோம். அவர் தேசநன்மைக்கும், பல்துறை விருத்திக்கும் சமயாநுசாரமே அடிப்படையானதென்ற தீவிர நம்பிக்கை யுடையவர்; மதப்பற்றில்லா மனிதரெவரும் மாட்சி யடையாரென்ற சிறந்த கொள்கையினர். 'பிராம்மணர்களின் அதிவைதீக மத அனுஷ்டானங்களின் உட்கருத்துகளை விளக்கி அவற்றை அவர்கள் கைக்கொள்ளுமாறு செய்வதால் சமயமேன்மை தோன்றும்' என்ற விருப்ப மவருக்குண்டு. கலாசாலைகளில் மதக்கல்வி போதிக்கப்படவேண்டுமென்று அவர் கருதி, அதற்கேற்ற பல பாடப் புத்தகங்களையும் வரைந்தார். சனாதன தர்ம மகாசபையொன்று அவருடைய முயற்சியால் 1906-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அலகபாத்தில் கூட்டப்பெற்றது. ஏராளமான பொருட்செலவு செய்து, உழைத்து மாளவ்யா அவர்களே அச்சபையை நன்கு நடைபெற வைத்தார்கள். சமய உணர்ச்சியுடன் தேசியக்கல்வியும், எந்த வித்தை அறம்பொருளின்பமாம் மூன்றையும் அளிக்குமோ அவ்வித்தையும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறவேண்டுமென்ற பெருநோக்கத்துடன் அவர் ஸ்ரீ காசியில் ஹிந்து சர்வ கலாசாலை யொன்றை—பாரதீய விஸ்வ வித்யாலயம் எனும் பெயருடன் ஸ்தாபிக்க யத்தனங்கள் செய்தார். சத்காரியத்தை ஆரம்பித்தால் அதற்கு இடையூறு விளைக்கப் பலர் முன்வருவது வழக்கந்தானே? மற்றும், நமதுநாட்டில் மூலை முடுக்குகள் தோறும் அபிப்பிராயபேதங்கள் நிலவுவது நிதர்சனமல்லவா? ஆகவே, அதற்குப் பலர் பலவாறு மாறுன ஆலோசனை கூற வாரம்பித்தனர். இக்காரியம் ஏராளமான பொருட்செலவில் நடைபெறவேண்டியதாயிருந்தாலும், மாளவ்யா அவர்கள் சிறிதும் மனந்தளராது, தாம் சிரமேற்கொண்டது மத, பாஷாபி விருத்தியைப் பொறுத்ததாதலின் எவ்விதமும் அதனை நிறைவேற்றிவிடவேண்டுமென்று கங்கணம் பூண்டிருந்தார்கள். சாஸ்திரீய ஆராய்ச்சி (Scientific research), கைத்தொழிற் பயிற்சி, வடமொழி இலக்கண இலக்கியக்கல்வி முதலியவற்றையும் மாணவர்களுக் கூட்ட அவர் தக்க ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினர். இறைவனருளால் அவருடைய சத்காரியமும் கைகூடிற்று.

கடந்த நாற்பதாண்டுகளாக அவர் சுதேசி இயக்கத்தில் முக்கியஸ்தராயிருந்து வந்தார். தேசீ திஜாரத் கம்பெனி யானது அலகபாத்தில் 1881-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது முதல் பண்டித மாளவ்யா அதனை அபிமானித்து வந்தனர். அக்கம்பெனி, நமது நாட்டில் சர்வஜன உபயோகமான



சகல சாமான்களையும் கைத்தொழிலால் செய்து விற்கவேண்டுமென்ற நோக்கத்துடன் நிறுவப்பெற்றது. அது ஸ்தாபிக்கப்பெற்ற காலம் முதல் அவர் தமது சுற்றுப்பிரயாணங்களிற் செய்யும் உபந்யாசங்களிலெல்லாம் 'மேல் நாட்டாரனுப்பும் சாமான்களைவிட சுதேசப்பொருள்கள் வனப்புக் குறைந்தனவாயும், அதிக விலையுள்ளனவாயு மிருப்பினும், சுதேச கைத்தொழிலபிவிருத்தியைக் கோரி அவற்றையே உபயோகிக்கும்படி மகா ஜனங்களை வேண்டிவந்தார். சுதேசக் கைத்தொழிற் சாமான்களை ஆதரிப்பது ஓர்வித சமயாசாரமென அவர் கருதலாராயினர். வரவர அவர் அதில் அதிக உறுதியுடையாராய்த் தேசிய இயக்கத்தின் முன்னணியில் நின்றுழைத்தார்; 1905-ல் காசியில் நடைபெற்ற இந்தியக் கைத்தொழில் மகாநாட்டிலும், 1907-ல் அலகபாத்தில் நிறைவேறிய ஐக்ய மாகாணக் கைத்தொழில் மகாசபையிலும் அவர் முக்கியஸ்தராயிருந்து அவற்றை நடத்தி வைத்தார். பலதுறைக் கல்வி யபிவிருத்தியை அவர் ஊக்கமுடன் நடத்தி நல்ல நிலைக்குக் கொண்டு வந்தார். நைநிதாலில் 1907-ல் சர்ஜான் ஹீவட்—அரசாங்கத்தாரால் நடத்தப்பெற்ற கைத்தொழில் மகாநாட்டில் அவருக்கோர் அங்கத்தினர் பதவியு மளிக்கப்பெற்றது. அம்மகாநாடு நடைபெற்றதன் பயனாக ஆரம்பமான பிரயாகைச் சர்க்கரைக் கம்பெனியில் அவர் பாத்தியஸ்தராயும் விளங்கினர்.

**சுதேசி இயக்கம்.**

இனி, அவரது இயற்கைத் தயாள குணத்தை வெளியிடும் சில நிகழ்ச்சிகளை எண்டெடுத்து வரைவோம். அவர் உள்ளங் கனியச்செய்த உதாரச் செயல்கள் பற்பல. தங்களைப் பிறர்மதிக்கவேண்டுமென்னும் கருத்துடையார் பிறரறிய உதவிசெய்து பெயரீட்ட முயல்வர். மனப்பூர்வமாகத் துயருறும் மக்களுக்கிரங்கித் தொண்டு செய்வாரோ எவ்வித பிரபல்யத்தையும் கருதுவதில்லை. ஆகவே, மாளவ்யா அவர்கள் பொது ஜனங்களுக்கு உதவி செய்யச் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் 'வலதுகை கொடுப்பதை இடதுகை யறியவேண்டாம்' எனபதற்கிணங்க நடந்து வருவது வழக்கம். ஒரு சமயம் அலகபாத்திற்குப் 'பிளேக்' என்னும் 'எலிவிபூநோய்' விஜயம் செய்தபோது அப்பாகக் கலெக்டர் போர்டு துரையவர்கள் வேண்டுகோட்கிணங்கி அவ்வமயம், அலகபாத் நகர பரிபாலனக் கழகத்தின் உபஅக்கிராசனாதிபதியாயிருந்த மாளவ்யா அவர்கள் அந்நோயினின்றும் மக்களைக் காப்பாற்ற அரும்பாடுபட்டார். அவர் தாமே பிளேக் நோய்கண்ட வீடுதொறுஞ் சென்று வியாதியஸ்தருக்கு மருந்துகொடுத்து ஹிதவசனம் பேசிவருவார். அந்நோய் கூற்றுவனை அக்நகரிற் குடிபுக வைத்தது; 'கோ' வென்ற கூக்குரல் நகரெங்கணும் கேட்க, மனிதருயிரைக் கொள்ளைகொண்டது. மாளவ்யா அவர்களே இவ்விதம் தொண்டியற்றுவதுகண்டு பிற நகரபரிபாலன கழக அங்கத்தினர்களும், அவரைப்போலவே வீடுகள் தோறுஞ்சென்று மக்களைத் தேற்றி அவர்களுக் குதவிபுரிந்து வந்தனர். மேற்கூறியவர்கள், 'சோபாதியா பாகம்' என்ற ஒரு சுகாதார தாத்காலிக வாஸஸ்தலத்தை நிர்மாணித்து அதில் ஜனங்

**துண பாவங்கள்**

கள் சௌகரியமாய்க்குடியிருக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். ஆங்கு அவர்களால் ஆடை யற்றவருக்கு உடையும், உணவற்றவருக் குண்டியும் இனு மாகவே வழங்கப்பெற்றன. அதில் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் இரட்சிக்கப்பெற்றன. அவ்விடத்திற்கு மாளவ்யா அனுதினமும் காலையிலும் மாலையிலுஞ் சென்று ஜனங்களுடைய யோகக்ஷேமங்களை விசாரித்து வருவது வழக்கம். இதுவன்றிப் பிளேக் வைத்தியசாலை யொன்று அவருடைய பெருமுயற்சியால் ஏற்படுத்தப்பெற்றது. அதற்கடுத்த ஆண்டில் சுமார் 3000 குடும்பங்கள் சகல சௌகரியங்களுடன் அப்புதிய நகரில் வசித்து வந்தனர்.

மாகாண சட்டசபையில் அவர் சுகாதார முறைகளுக் கேற்ப, மக்கள் வசித்தற்குரிய வீடுகளை அமைத்துக் தரும்படி அரசாங்கத்தாருடன் மன்றாடினார். அதனால், 'ஹூகர்கஞ்ஜ்' எனும் அழகிய இல்லங்கள் அரசாங்கத்தாரால் அமைக்கப்பெற்றன. மிகவும் நெருக்கடியான நகரங்களில் போதிய காற்

**முடிவுரை.**

ரோட்டமின்றி ஜனங்கள் சுவாசாஸயத்தைப்பற்றிய நோய்களால் பீடிக்கப்படுவது கண்டு, விசாலமான கட்டிடங்களைக் கட்ட அரசாங்கத்தார் உதவிசெய்யவேண்டுமென்று அவர் பிரேரபித்தார். அதன்படி அலகபாத்திலும், கான்பூரிலும் இப்பொழுது வீடுகள் கட்டப்படுகின்றன. ஆகவேதான் சுகாதார மகாநாட்டில் அவர் ஓர் விசேட உறுப்பினராயு மிருந்தார். இப்பெரியாருடைய உண்மையான தொண்டின் பயனாக இரண்டு பெரிய நன்மைகள் விளைந்தன. அவை அகில ஹிந்து மகா சபை, ஸ்ரீ காசி விசுவா விவாஹ சபை ஆகியவைகளாம். அவருடைய பெருமையை நன்கு கண்டுகொண்ட அரசாங்கத்தார் அவரை டில்லி சட்டசபையின் உறுப்பினராக்கி மேன்மேலும் உயர்ந்த பதவிகளை அவருக்களித்து, அவர் அபிப்பிராயத்தை ஒருவாறு தழுவி—ஆதரித்து வருகின்றனர். அவரும் இப்பொழுது எழுபதாமாண்டை எய்தவிருப்பினும், சிறிதும் தளர்ச்சியடையாமல் தாய்நாட்டின் தொண்டில் ஈடுபட்டுழைத்து வருகின்றார். இப்பெரியார் இன்னும் பலகால மிருந்து நமது தேசத்தின் சமயப்பற்றையும், ஆசார ஒழுக்கங்களையும் வளர்த்துவர இறைவன் அருள்பாலிப்பானாக.

ஸ்ரீ லக்ஷ்மீகாந்தன்.

---

## ஆனந்தபோதினியின் நல்வரவு வேண்டல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

1. சீரோங்க வறமோங்கச் செயமோங்கச் செந்தமிழுந் திகழ்ந்தே யோங்கப்
பாரோங்கச் சைவநெறி பரந்தோங்க வெத்தொழிலும் பலித்தே யோங்க
வேரோங்கு புகழ்ச்சென்னை நகரிலிருந் தலகெங்கு மேகுந் தாயே
நேரோங்கு மானந்த போதினியே கைமாறென் னினக்கே செய்வேம்.

2. மன்னரிய தந்தைதாய் மாட்சியுறுஞ் சோதரர்கள் மனையாள் மிக்க
வுன்னரிய மித்திரர்கள் சற்குருவே முதலியபே ருவந்தே செய்யும்
பன்னரிய வுதவிபுரி பண்புடையாய் தெள்ளுதமிழ் பகருஞ் சீராய்
என்னரிய வானந்த போதினியென் றெவர்களுமே யேத்தும் நல்லாய்.

3. பத்தொடுமூன் றுண்டரிய பண்பாருங் கடன்புரிந்தே பகரு ஞாலத்
தெத்திசையு மிரவுபக லோயாத வறிவொளிசெய் திருக்குந் தாயே
சித்தமுடனேழிரண்டா மாண்டினுக்குஞ் செம்மைநெறி திகழப்பெற்றுப்
பத்திநெறி யானந்த போதினியே வருகவெனப் பரவி னேமே.

வி. வேலுப்பிள்ளை.

## லோக்கல் போர்டுகளும் ஆசிரியர்களும்.

1925—26-ம் வருஷத்தின் கணக்கின்படி சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பப்பாடசாலைகளின் மொத்தம் 44-ஆயிரம் என்பது தெரிகிறது. இவற்றுள் 30-ஆயிரம் பாடசாலைகள் கிராண்டு பெறும் எயிடெட் பாடசாலைகளும், 14-ஆயிரம் பாடசாலைகள் சர்க்கார் லோக்கல் போர்டு பாடசாலைகளுமாகும். எயிடெட் பாடசாலைகளின் செலவு ஏறக்குறைய 29-இலட்சமும், லோக்கல்போர்டு பாடசாலைகளின் செலவு 71 இலட்சமுமாம். இவற்றை ஆராய்ந்து பார்க்கின், 3-ல் 2-பங்கு பாடசாலைகட்கு 29-லட்சமும், 3-ல் 1-பங்கு பாடசாலைகட்கு 71-லட்சமும் செலவாகின்றனவென்பது விளங்கும். இவற்றை இன்னுஞ் சற்று நுட்பமாக ஆராய்ந்து பார்க்கின், எயிடெட் பாடசாலைகளைவிட லோக்கல்போர்டு பாடசாலைகட்கு ஏறக்குறைய 5-பங்கு அதிகச் செலவு ஏற்படுகிறது.

ஆனால், உபாத்தியாயர்களின் சம்பளமோ, போர்டு பாடசாலைகளில் வருடாந்தரம் ரூ. 57 வீதமும், எயிடெட் பாடசாலைகளில் ரூ. 260-வீதமும் செலவாகின்றன. இவற்றைக் கவனித்தால், லோக்கல் போர்டு பாடசாலைகளின் பணம் எவ்விதத்தில் செலவாகிறதென்பது நன்கு விளங்கும். ஆவெனத் திறந்த வாயோடு ஆவியைப் போக்கிக்கொண்டு, முழுஆயுளும் அரைஆயுளாகச் சிறு குழந்தைகளோடு கத்திக் கத்திச் சிரமப்படும் ஆரம்ப ஆசிரியர்களைக் கவனிக்கும் தன்மை இவ்விதமாயின், ஆரம்பக்கல்வியின் விருத்தியைக்கருதியும், வயிற்றுப் பிழைப்பிற்கென்றே இத்தொழிலிலமர்ந்து உழைத்தும், வரும்படியின் குறைவை யுத்தேசித்து வருந்தினும் இதிற் பழகிவிட்டு இதைத்தவிர்த்து வேறு தொழிலுக்கு எப்படிச் செல்கிறது என்று இத்தொழிலிலேயே அமர்ந்தும், குறைந்த வருமானத்தை உத்தேசித்து ஏக்கமும் துக்கமும் கவலையும் அடைந்தும், சிற்சில சமயங்களில் ஏழ்மைக் கண்ணீர்விட்டும் பரிதாபநிலையிலிருக்கும் ஆரம்ப ஆசிரியர்களின்கதி என்னாகும்? "ஏழையழுத கண்ணீர் கூரியவாளொக்கும்" என்பதை இதன் நிர்வாகிகள் உணர்ந்து ஏற்றது செய்யாதது மிகவும் வருந்தத்தக்கது.

உபாத்தியாயர்களின் சம்பளப்பேச்சுவந்தால்தான் போர்டில் பணமில்லாமற் போய்விடும். மற்ற அத்தியாவசியமான செலவெல்லாம கவனித்துவிட்டுத் தானே, அத்தியாவசியமல்லாத இக்கல்விச் செலவை—அதிலும் உபாத்திமார்களின் சம்பளத்தைக் கவனிக்கவேண்டி யிருக்கிறது. காலையில் காப்பி சாப்பிடாமல் 10-மணிவரையில் எவராவது எந்தத் தொழிலாவது களைப்படையாமல் வேலைசெய்ய முன் வருவாரா? உபாத்திமார்களின் வயிறும் உடலின் வன்மையும் அப்படித்தானே யிருக்கும். இவற்றிற்குத் தக்கபடி அவர்களுக்கு ஊதியம் உதவவேண்டாமா? இதைத்தான் இக்கால நிர்வாகிகளிற் பெரும்பான்மையோர் கவனிப்பதில்லை. சிறுபான்மையோர் என் செய்வர்?

ஆரம்ப ஆசிரியர் இதைப்பற்றி நிர்வாகிகளிடம் வாய்திறந்து கேட்டுவிட்டாலோ, அவர்கள், ஆரம்பக்கல்வியின் விருத்தியில் ஆரம்ப ஆசிரியர்கள் யாதொரு பலனையும் எதிர் பாராமல் வேலைசெய்யவேண்டு மென்பர். பலனை எதிர்பாராமல் வேலைசெய்வது துறவறத்தார்க்கன்றோ அமையும்; இல்லறத்தாராகிய ஆரம்ப ஆசிரியர்க்கு எவ்வாறு பொருந்தும்?

ஆனால், ஆடம்பரமான பெஞ்சு முதலியவற்றின் விஷயங்களும், கட்டிட விஷயங்களும் அவர்களால் முதன்மையாகக் கவனிக்கப் பெறுகின்றன,

ஆசிரியர்களுக்கு அன்னத்தைப் போட்டு வேலையை வாங்கவேண்டுவதே உசிதமானதாகும்.

இது, இவர்களின் மனதில் என்றைக்கு ஏற்படுகிறதோ அந்நாள்தான் ஆரம்பக்கல்வியின் பூரண அபிவிருத்திக்காலமென்போம். தம்மனத்தை ஒரு நிலைப்படுத்தி ஊன்றிக் கவனிப்போர்க்கு இவ்வபிப்பிராயம் முரணாகத் தோன்று தென்பது திண்ணம். துனிப்புல் மேய்வோர்க்கு இது முரணாக அபிப்பிராய பேதமாகத்தான் தோன்றக்கூடும்.

P. பரிமணப்பல்லவராயர்.

## மோட்டார்க் கண்ணி.

1. நாட்டி லெமன் போற் புகுந்து நாடோறும் பல்லுயிரை
வாட்டி வதைத்திடவே வந்ததந்தோ ! மோட்டாரே.
2. ஆண்டுக்குக் கோடிபணம் அள்ளியள்ளி அன்னியர்க்கு
வேண்டியே தள்ளிவிட மேவியது மோட்டாரே.
3. தெருப்புழுதி யள்ளித் தினந்தலையில் போடுதற்கு
செருக்கமுடன் வந்து நிறைந்த தெங்கும் மோட்டாரே.
4. வீதியிற்செல் வாரை விரைந்தேதகை கால்முரித்து
வாதனைக்குள் ளாக்க மலிந்ததந்தோ! மோட்டாரே.
5. மோசம்விப சாரம் முழுத்திருட்டுச் செய்வதற்குக்
காசினியில் வந்து கலந்ததந்தோ! மோட்டாரே.
6. வேகமாச் செல்ல விரும்புநமக் கெத்தினமும்
சோகமே செய்யவந்து சூழ்ந்ததந்தோ! மோட்டாரே.
7. வெள்ளிப் பணம்பறித்து வீணிரும்பிங் கேநிரப்பிக்
கொள்ளைகொண்டு செல்வதற்குக் கூடியது மோட்டாரே.
8. மங்கையரைத் தூக்கி மறைந்துடனே செல்வதற்கு
இங்குத் துணையா யிசைந்ததென்று மோட்டாரே.
9. சேற்றையெல்லாம் வாரிவழிச் செல்வார்மேல் வீசிவிட்டுக்
காற்றைப்போ லோடிக் கனைப்பதிங்கு மோட்டாரே.
10. நாய் நரிபேய் போற்கதறி நாளுந் தெருக்களிலே
சேய்கள் பயங்கொள்ளத் திரிவதையோ! மோட்டாரே.
11. வண்டிகளில் மோதி மனிதர் தமைநசுக்கி
மண்டையுடைத்துச் சிதறும் வன்கொடிய மோட்டாரே.
12. நலமிகவே செய்வதுபோல் நம்நாட்டார் பாற்றோன்றி
பலகொடுமை செய்து பரவியது மோட்டாரே.
13. பள்ளத்தில் வேகமொடு பாய்ந்தே பலமனிதர்
வெள்ளத்தில் மாண்டொழிய வீழ்த்துவது மோட்டாரே
14. வந்தேறு வாரை மயங்குமிருட் காட்டில்விட்டு
எந்திரங்கெட் டோடா திருந்திடுமே மோட்டாரே.
15. இத்தகைய மோட்டாரால் இவ்வுலகில் துன்பமின்றி
சித்தமகிழ் விக்குஞ் செயலேது மீங்கிலையே.

செம்பூர். வீ. ஆறுமுகச் சேர்வை.

## மாணவர் பகுதி.

### ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(506-ம் பக்கத் தொடர்ச்சி.)

### " சீர்மை மறவேல் "

"சீர்மை-ஒழுங்கை, மறவேல்-(நீ) மறந்துவிடாதே" என்பது இதன் பொருள்.

மனிதர் எப்பொழுதும் நன்னடக்கையை மறவாது கைக்கொள்ள வேண்டும்; அவ்வாறு கொண்டிருப்பவர்க்கு இவ்வுலகத்தில் மிகுந்த புகழுண்டாகும்; பல நன்மைகளு முண்டாகும். நன்னடக்கையை மறந்து கெட்ட காரியங்களைச் செய்வார்க்கு நலமுண்டாகாது; எப்பொழுதும் உலகத்தார் அவர்களை நிந்திப்பார்கள். இவ்வுண்மையை இதனடியில் வரும் கதை விளக்கும் :—

பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாண்டிநாட்டில் ஒரு சிற்றரசர் இருந்தார். அவரிடத்தில் தங்கையா பிள்ளை யென்பவர் காரியம் பார்த்து வந்தார். இவர் மகா வஞ்சக சித்தமுடையவர்; சுயநலப் பிரிய முடையவர்; சிநேகிதரிடத்திலும் உண்மையான அன்பில்லாமல் மேலுக்கு மாத்திரம் மிகுந்த நட்புடையவரைப்போல நடித்துப் பேசிக்கொண்டே அவர்களுக்குக் கெடுதி செய்பவர்; இவர், மிகுந்த பேராசை யுடையவராயிருந்தாலும், எல்லோரிடத்திலும் நீதி தவறாத உத்தமரைப்போலவே நடித்துக் கொண்டிருப்பார். உலக உண்மையைத் தெரிந்துகொள்ளும் பேரறிவில்லாத பேதை மனிதர்களெல்லோரும், இவருடைய வஞ்சகத்தை யுணராமல் இவரைத் தருமகுணசீலரென்றே கருதுவார்கள். இவர், நல்லவரைப்போல நடிப்பதால் அந்தச் சிற்றரசரும் இவரிடத்தில் மிக்க பிரியமும், நம்பிக்கையு முடையவராயிருந்தார்.

இப்படியிருக்கும்போது அந்தத் தங்கையா பிள்ளைக்குப் பழக்கமான சாரங்கபாணி யென்னும் வியாபாரி யொருவன், நெடுந்தூரத்திலுள்ள ஓர் ஊருக்கு வியாபாரத்தின் பொருட்டு ஒருதினம் பிரயாணமானான். அப்போது தன்னிடமிருந்த சில பொருள்களை நம்பிக்கையான ஒருவரிடம் கொடுத்து வைத்துவிட்டுப் போகவேண்டுமென்று ஆலோசித்து அதற்குத் தங்கையா பிள்ளையே தகுதியானவர் என்று தீர்மானித்தான். அவ்வாறு முடிவு செய்துகொண்டபின் சில நகைகளையும், பணத்தையும் ஒரு பெட்டியில் வைத்துப்பூட்டி அப்பெட்டியைக் கொண்டுபோய்த் தங்கையா பிள்ளையிடம் கொடுத்து, "நான் வெளியூருக்குப் போகிறேன்; போய்த் திரும்பும் வரையில் இந்தப்பெட்டி உங்களிட மிருக்கட்டும்; இதிற் சில நகைகளும், பணமு மிருக்கின்றன; நான் திரும்பி வந்தவுடன் பெட்டியை வாங்கிக் கொள்வேன்" என்று சொன்னான். தங்கையா பிள்ளை அதை வாங்கி வைத்துக்கொண்டு, "அப்படியே செய்; பெட்டியைப்பற்றி நீ கவலை கொள்ள வேண்டிய தில்லை; அது நீ திரும்பி வரும்வரை, வைத்தபடியே இருக்கும்" என்று அவனை அனுப்பிவிட்டார். அவன்போய் மறுநாள் வேற்றூர்க்குச் செல்லப் பிரயாணமானான். அப்போது அவனுக்குச் சகுனத்தடை யுண்டாயிற்று. அதனால் அவன் பயணத்தை நிறுத்திவிட்டுத் திரும்பி வீட்டிற்கு வந்து தங்கியிருந்து இரண்டு தினங்கள் சென்றபின் தங்கையா பிள்ளையிடம் போய், "நான் ஊர்ப்பயணத்தை நிறுத்திவிட்டேன்; ஆதலால் உங்களிடம் கொடுத்த பெட்டியைக் கொடுங்கள்" என்று கேட்டான்,

அவர், "இப்போது நான் மிகுந்த வேலையிலிருக்கிறேன்; என்றால் எழுந்திருப்பது முடியாது; நாளைக்கு வா, நான் அதை யெடுத்துத் தருகிறேன்" என்றார். அவன் வீட்டிற்குப்போய் அவர் சொன்னபடியே மறுநாள் வந்தான். அன்றைக்கும் அவர் முதல்நாள் கூறியபடியே, 'நாளைக்கு வா' என்றார். அவன் அப்படியே மறுதினம் வந்தான். அன்றும் அவர், 'நாளைக்கு வா' என்றார். அதன்மேல் சாரங்கபாணிக்கு வெறுப்புண்டாகி விட்டது. அதனால் அவன், "இவர் என்ன! இப்படி நாளைக் கடத்துகிறார்; பெட்டியை அபகரித்துக்கொள்ள எண்ணங் கொண்டுவிட்டாரோ" என்று சந்தேகங் கொண்டு அவரை நோக்கி, "என்ன! இப்படி என்னை அலையவிடுகிறீர்கள்? 'நாளையென்பது இல்லை யென்பதற் கடையாளமல்லவோ'? என் பெட்டியை எடுத்துக் கொடுப்பதற்கு இத்தனை கெடுவா?" என்றான்.

இதைக் கேட்டவுடன் தங்கையா பிள்ளைக்கு மிகுந்த கோபமுண்டாகி விட்டது. அவர், "நீ எப்போது என்னிடம் பெட்டியைக் கொடுத்தாய்? பொய்கூறி என்னிடம் பணம் வாங்கலாமென்று இந்தத் தந்திர மெடுத்தாயோ; சீ இங்கே நில்லாதே போ" என்றார். சாரங்கபாணிக்குப் பெருந் திகிலுண்டாகி விட்டது. அவன், "ஐயோ! இஃதென்ன அனியாயமா யிருக்கிறது? என்னிடம் நீங்கள் பெட்டியை வாங்கிக்கொண்டு இப்படி வாங்கவில்லை யென்று சொல்லலாமா?" என்று கூவினான். தங்கையாபிள்ளை அவனை வெளியே தள்ளும்படி சேவகனுக்குக் கட்டளையிட்டார். சேவகன் அப்படியே அவனைத் தள்ளிவிட்டான்.

அதன்மேல் சாரங்கபாணி, தங்கையா பிள்ளையை வேலைக்கு வைத்திருந்த சிற்றரசரிடம் போய்த் தன் குறையைச் சொல்லி முறையிட்டான். அவர், "அந்தப் பெட்டியில் என்ன என்ன இருந்தன?" என்று அவனிடம் கேட்டார். அவன், அதிலிருந்த நகைகளையும், ரூபாயையும் விவரமாகத் தெரிவித்தான். பிறகு அரசர், தங்கையா பிள்ளையிடம் அப்பெட்டியைப் பற்றிய செய்தியை விசாரித்தார். அவர், "இவனை எப்பொழுதுமே நான் அறியமாட்டேன்; இவன் என்னிடம் பெட்டி கொடுத்ததாகப் பொய்கூறிப் பொருள்பறிக்க இவ்வாறு தந்திரம் செய்கிறான்" என்றார். அவர் சத்தியந் தவறாத உத்தமர்போல் நடித்துக்கொண்டிருந்தபடியால் சிற்றரசர் அவர் பேச்சை மெய்யென்று நம்பிச் சாரங்கபாணியைக் கண்டித்துத் துரத்தி விட்டார். சாரங்கபாணி இந்த அனியாயத்தைத் தெய்வத்தினிடம் கூறி முறையிட்டுக் கொண்டு திரிந்தான்.

தங்கையா பிள்ளை, சாரங்கபாணியின் கூக்குரல் ஒடுங்கின பிறகு அந்தப் பெட்டியிலுள்ளவற்றை எடுத்து உபயோகிக்க வேண்டுமென்று அப்பெட்டியை இரகசியமாக மறைத்து வைத்திருந்தார். அப்படி யிருக்கும்போது ஒருநாள் இரவு சில திருடர்கள் தங்கையாபிள்ளை வீட்டில் கன்னம் வைத்து நுழைந்து அந்தப் பெட்டியையும், வேறுசில பொருள்களையும் திருடிக் கொண்டு வெளி யேறினார்கள். அப்படி வெளி யேறும்போது காவலர் அத்திருடர்களைக் கண்டுபிடித்து அரசர் முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அரசர் அவர்கள் திருடியிருந்த பொருள்களைப் பரிசோதித்துப் பார்த்தார். அவற்றோடு சாரங்கபாணியின் பெட்டியும், பொருள்களு மிருந்தன. அரசர் அவற்றைப் பார்த்து அதிசயித்து, "இவைகள் எங்கே திருடப்பட்டவை?" என்று காவற்காரரை விசாரித்தார். அவர்கள், "இப்பொருள்கள் தங்கையா பிள்ளை அவர்கள் வீட்டில் எடுக்கப்பட்டவை" என்று சொன்னார்கள். தங்கையாபிள்ளை, சாரங்கபாணியை உண்மையில் மோசஞ் செய்திருக்கிறார் என்பதை அரசர் தெரிந்து கொண்டார். உடனே தங்கையா



பிள்ளையை வரவழைத்து அவருக்கு அப்பொருள்களைக் காட்டி, "இவற்றை நீர் சாரங்கபாணியிடம் வாங்கவில்லை யென்று சொன்னீரே; இவைகள் உம்முடைய வீட்டில் எப்படிச் சேர்ந்தன?" என்று அவரிடம் விசாரித்தார். அவர், ஒன்றும் சொல்லமுடியாமல் விழித்துக்கொண்டு நின்றார். அதன்மேல் அரசர் கோபித்து அவருக்குத் தகுதியான தண்டனை கொடுத்துச் சாரங்கபாணியிடம் அப்பொருள்களைச் சேர்ப்பித்தார். ஊரார் தங்கையா பிள்ளையை மிகவும் நிந்தித்தார்கள்.

செம்பூர், வீ. ஆறுமுகஞ் சேர்வை.

---

## சன்மார்க்க சற்போத ஞானக் கும்மி.

(521-ம் பக்கத் தொடர்ச்சி.)

### காப்பு.

23. பொன்னுடன் பூமியும் புன்னெறி மாதரும்
பூதலத்தோர் தமைப் பொல்லா வழியில்விட்
டின்னலுறச் செய்த லெப்போதுங் கண்டும்பின்
நன்னெறி நாடாயோ ஞானப்பெண்ணே.

24. சிந்தையி லீசனைச் சொந்தமா யெண்ணினோர்
சீருறும் முத்தியைச் சேர்ந்ததை யோர்ந்துநாம்
இந்த உலகி லிருக்கும்வரையென்றும்
ஈசனை யெண்ணுவோம் ஞானப்பெண்ணே.

25. ஆலயந்தன்னில் நாம் அல்லும்பகலுஞ் சென்
றன்புட னீசனை யண்டித் தொழுதிடல்
மேலாம் பதவிக்கு மேவிடும் வித்தென்று
மேலோ ரறிந்தனர் ஞானப்பெண்ணே.

26. ஆணவர் கன்ம மதனுடன் மாயையாம்
அல்லல் தரும்பாசத் தாசைவைத்தே நாமும்
நாணம தின்றியிங் காட்டி லிருப்பது
நன்மையோ சொல்லடி ஞானப்பெண்ணே.

27. எந்த நேரம்வந் தெமனழைத்தாலும் நாம்
ஏதும் சாட்டின்றியே யேகுதற் காகவோர்
பந்தமு மின்றி யிப்பாரி லிருக்கின்ற
பாக்கியம் தேடுவோம் ஞானப்பெண்ணே.

28. மாடுகன் றோடுநன் மக்களுண் டென்றுமே
மாந்தர் பலரதில் மாழுதல் மாபெரும்
கேடு வருதற்கோர் கிட்டிய பாதைநீ
கேட்டு மறியாயோ ஞானப்பெண்ணே.

29. செல்வம் செல்வாக்கென்று சொல்பவை யெல்லாமித்
தேசத்தி லெப்போதும் தேங்கிடா தாதலால்
கல்வி கசடறக் கற்றுமுன் மாதிரி
காட்டுவோ மெல்லோர்க்கும் ஞானப்பெண்ணே.

30. சிற்றின்பச் சேற்றிலே சிக்கி மயங்குதல்
சீரியர் யார்க்குந் தெரியாத காரியம்
பெற்றுப்பின் பேணுவர் பேதமை யின்றியே
பேரின்பம் முற்றையும் ஞானப்பெண்ணே.

31. வேண்டாம் விருப்பும் வெறுப்பு மெமக்கென்று
மேலோர் பலர் சொன்னார் மேன்மை யுறும்படி
தீண்டா திருப்போரைச் சர்ப்பமுஞ் சாராது
திண்ணமி தல்லவோ ஞானப்பெண்ணே.

32. கட்டி யணைத்திடும் பெண்டிரும் மக்களும்
கால னெமைவந்து கட்டி யடும்போது
கிட்ட வருவரோ கெட்டித் தனங் காட்டக்
கேட்டுநீ சொல்லடி ஞானப்பெண்ணே.

33. ஆசையை நீத்தோ ரழியும் பிறவியை
அற்பமா யெண்ணுவா ராதலா லொன்றிலும்
நேச மதின்றிநாம் நித்திய ரைத்தொழும்
நிர்ணயஞ் செய்வோமே ஞானப்பெண்ணே.

34. இன்னும் பிறவியி லெம்மை விடாதீரென்
றீவில்லா அன்புவைத் தீசனை வேண்டிடில்
அன்னை பிதாவினு மன்புமிகுத்த வவ்
வண்ண லெமைக் காப்பர் ஞானப்பெண்ணே.

35. சைவர் நாமென்று தருக்கித் திரிபவர்
தாரணி மீதினி லேபல தந்தரம்
மெய்வரம் பெற்றவர் போலவே காட்டிடல்
வேடிக்கை தானடி ஞானப்பெண்ணே.

36. தன்னய மற்றவர் தக்க பெருமையைத்
தானடைவர் வெறுந் தந்தர மாகத்தம்
நன்மையை மாத்திரம் நாடுவோர் தங்கட்கு
நாணம துண்டோ சொல் ஞானப்பெண்ணே.

37. மெய்யாம் துறவறம் பூண்டுமே மேலோர்கள்
மேன்மை யுறச்சிவன் பாதத்தை மேவினர்
செய்யுந் தவம்முற்றும் தேடி யடைதற்கே
தேருவோ மித்தையே ஞானப்பெண்ணே.

38. எந்த நாளு மிறைவன் பதந்தன்னை
ஏத்தித் தொழுதிடு மெண்ணத்தை நாமெங்கள்
சிந்தையி லெண்ணித் தியானிக்க மாபெரும்
திவ்ய கதிசேரும் ஞானப்பெண்ணே.

39. தன்னை யறியு மறிவினை நாம் பெறல்
தக்கது வன்றி மற்றுள்ள தெல்லாம்
முன்னை வினையின் பயனாக வெங்களை
மூடு மிருளன்றோ ஞானப்பெண்ணே.

40. எம்மதத் தாருக்கும் சம்மத மாயுள்ள
எத்தனையோ பெருஞ் சன்மார்க்க போதத்தைத்
தம்மு ளடக்கிச் சனங்கட்குப் போதித்தார்
தற்போத மற்றவர் ஞானப்பெண்ணே.

41. உண்மையும் நேர்மையு முள்ள மனுஷர்கள்
ஊரவர் மெச்சவே வாழ்வ ரதுவன்றி
மண்ணி லுதித்திடும் மாந்தர்க்கு நல்லமுன்
மாதிரி காட்டுவார் ஞானப்பெண்ணே.



42. கோபத்தைச் சற்றுங் குறைக்காத மானிடர்
கூறரு மாபத்துக் கானாய் வருந்திப்பல்
பாவத்தைத் தேடிப்பின் பங்கப்படுவதைப்
பார்த்து மறியாயோ ஞானப்பெண்ணே.

43. பொறுமையைப் பூஷண மாகவே பூண்டிடில்
பொல்லாதவ ரென்று பூதலத்தோ ரெண்ணுஞ்
சிறுமையுஞ் சாராத சேவியஞ் செய்திடத்
திவ்ய வழியிது ஞானப்பெண்ணே.

44. முன்னை வினையின் வலியினை யோர்ந்தவர்
முற்றுக வீசன்றன் பாதத்தைப் பற்றியே
நன்மை பெறநிற்பர் நாமு மதன்வழி
நாடியே நிற்போமே ஞானப்பெண்ணே.

45. எழுதா விதிக்கு அழுதாலுந் தானென்ன
ஏதும் பயன்பெற வில்லையே யாதலால்
தொழுவோஞ் சிவன்பதம் தோத்திரஞ் செய்து
சுகம்பெற வேண்டிடில் ஞானப்பெண்ணே.

46. மௌனங் கலகத்தை மாற்றிடு மாதலால்
மாண்புள்ள வாழ்வெய்தி மண்மீ திருந்திடில்
கவனமா யெம்பேச்சைக் காத்துக் குறைத்திடல்
கற்றோர்க் கவசியம் ஞானப்பெண்ணே.

47. எண்ணப்படி நாமு மெல்லா வகையான
இன்ப சுகம்பெற்று இங்கே யிருந்திடல்
திண்ணம தல்லப்பின் சேருங் கதிமுற்றும்
செய்ததின் பேறுமே ஞானப்பெண்ணே.

48. உண்மையைப் பேசி உறுதியாய் நிற்பவர்
ஊரார் நகைக்க உலகினி லோர் போதும்
கண்ணியமற்ற கனவு பொய் சூதைக்
கனவிலு மெண்ணாரே ஞானப்பெண்ணே.

49. எல்லாப் பிணியிலும் பொல்லாத தீதென்றே
யெல்லாருங் கூறும் பிறவிப் பிணியினை
நல்லோ ரொருபோதும் நாடா ரிதனுண்மை
நான்கூற வேண்டுமோ ஞானப்பெண்ணே.

50. கொலைபுலை கோளுட னேபுறங் கூறுதல்
குற்றம் நிறைந்த செயல்களென்றே மேலோர்
மலையா திவற்றை மறுத்துமே சீவித்தார்
மாட்சி யிதல்லவோ ஞானப்பெண்ணே.

51. எல்லாரும் மானிட ரென்றோநா மெண்ணிடில்
எத்தனையோ பெரும் பேதங்களை யிங்கு
கல்லாத மானிடர் கற்பித் திடாரிது
கட்டுக் கதையல்ல ஞானப்பெண்ணே.

52. ஊரவ ரெல்லோரு முய்திட வேண்டுமென்
றுண்மையா யெண்ணி யு[illegible]ல்லாம்
பாரிலே பற்பல பா[illegible]பெறல்
பார்த்துப் புகழடி [illegible]பெண்ணே.

கா. [illegible]ப்பா, அளவெட்டி, யா[illegible]ணம்,

187488




## மாதரும் குடும்பமும்.

(508-ம் பக்கத் தொடர்ச்சி.)

புருஷர்கள் வியபிசாரம் செய்யலாம் என்பதற்கு எங்கும் எள்ளளவும் ஆதாரம் கிடையாது. ஆதாரம் இருப்பினும் அது ஒப்புக்கொள்ளப் படத்தகாத அசட்டுத்தனமான ஆதாரமேயாகும்.

“ வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென் றிவற்றை
நம்பினா ரிறந்தால் நமன்தமர் பற்றி எற்றிவைத் தெரியெழு கின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவி தழுவென மொழிவதற் கஞ்சி
நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன் நைமிசா ரணியத்து ளெந்தாய்.”

என்னும் பெரியார் வாக்கின் பொருளை நோக்குமிடத்து, “எவனொருவன் தனக்குரியவளாயுள்ள மனைவியைக் கைவிட்டு வேறு மாதரை யடைய விரும்புகின்றானோ அவனை எமதூதர்கள் எமலோகத்தில் செம்பினால் செய்யப்பட்ட பெண்பதுமையை நன்றாக நெருப்பிலிட்டுக் காய்ச்சி அது செக்கச் செவேலென்று காய்ந்து எரிந்துகொண்டிருக்கும்பொழுது அதனருகில் அவனை யழைத்துப்போய் ‘அடே! பாவிப்பயலே! நீ விருப்பங்கொண்ட பெண்ணுருவம் இதோ இருக்கின்றது பார்; உன் ஆசைதீர இதைத்தழுவுகின்றனையா? இல்லையா? இல்லாவிட்டால் இந்தச் சவுக்கினா லடித்துத் தோலையுரித்துவிடுவோ’ மென்று பயமுறுத்தித் தழுவும்படி செய்வார்கள்” என்பது நன்கு விளங்குகின்றதே. மேலும் தமிழ்வேதமாகிய குறள், ‘பகை பாவம் அச்சம் பழி என்னும் இந்நான்கும் அன்னியமாதரை விரும்புவோனைவிட்டு நீங்கா’ எனக் கூறுகின்றதே. இவற்றையெல்லாம் உற்றுநோக்குமிடத்து வியபசாரம் என்பது ஸ்திரீகளுக்குமட்டுமல்ல, புருஷர்க்கும் உண்டு என்பது நன்கு புலனாகின்றதே. அதாவது ஸ்திரீகள் தம் கணவரையன்றிப் பிறரைக் கருத்திலும் கொள்ளுதல் கூடாது. அப்படிச்செய்வது மகாபாதகம் என்று கொள்ளப்படுதல்போலவே, புருடரும் அன்னியமாதரை அணுவளவும் அகத்தில் கொள்ளலாகாது. அப்படிக்கொண்டால் அது மகாபாதகச் செயலாகவே கொள்ளப்படும் என்பது விளங்குகிறது.

அன்பர்களே! இதுகாறும் கூறியவற்றால் ஸ்திரீகளும் புருடரும் ஆகிய இருவகுப்பினரும் பரஸ்பரம் (ஒருவர்க்கொருவர்) அன்புள்ளவர்களாயும் நல்லொழுக்க முடையவர்களாயு மிருந்து குடும்பத்தை நடத்துவதே இல்லறத்திற்கு அழகாகும் என்பது பெறப்பட்டது. அதுவே நல்ல குடும்பவாழ்க்கை. அத்தகைய இன்பகரமான—சதிபதிகளிருவரும் ஒற்றுமையான மனமுடையவர்களாய்வாழும்-வாழ்க்கையே-குடும்பவாழ்க்கையே-அறமெனப்படுவதாகும். தன்னைத்தானறிந்து ததாகாரமாய்ப் பேரானந்தப்பேற்றைப் பெறுதற்குரிய துறவறத்திலும் இல்லறமே சிறப்புடையதென்றும், அறமென்று சொல்லப்படுவது துறவறமேயென்றும் நூல்கள் நுவலும். இவ்வில்லறத்தால்வரும் இன்பத்தைத்தான் சிறந்த இன்பமாகப் பெரியோர் இயம்பியுள்ளார். “இல்லறத்திற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள மார்க்கத்தின்படி இல்லறம் நடக்குமானால் அதுவே போதும், அதுவே எல்லாச் சிறப்புக்களையும் தரும். இதைக் காட்டிலும் அதிகமாக அடையக்கூடியது துறவறத்தில் என்ன இருக்கின்



றது? ஒன்றுமில்லை.” யென்று ஆன்றோர் அருளியிருக்கின்றனர். ஆகையால் துறவறத்திலும் இல்லறமே சிறந்ததென்பது நன்றாக விளங்குகின்றதே. ஆனால், எப்படியிருந்தால் நல்லது என்று பார்க்கவேண்டாமா? செய்ய வேண்டிய ஒழுங்கின்படி செய்தால் எதுவும் நல்லதே. ஒருவனிடத்தில் பணமிருப்பது நல்லதே. ஆனால் எப்படியிருந்தால் நல்லது? நன்மார்க்கத்தில் செலவுசெய்வதாயிருந்தால் — ஏழை எளியவர்க்கு உபயோகப்படுவதாயிருந்தால்—நல்லதே. அவ்வாறின்றிச் சூதாட்டத்திலும்—மதுபானத்திலும்-வியபிசாரத்திலும் செலவிடப்படுமானால் அத்தகைய செல்வம் ஒருவனுக்கு இருப்பதைவிட இல்லாமலிருப்பதே நல்லதல்லவா? அதுபோல கிருகதர்மத்தின் தன்மையை யறிந்து அதற்கேற்றபடி ஒழுகினால் மாத்திரமே இல்லறம் நல்லறமாகக் காணப்படுமேயன்றி இல்லாவிடின் அதைக்காட்டிலும் வெவ்விய நரகமே செவ்விதாம் என்னும்படி துன்பவடிவாகவே யிருக்கும்.

தற்காலத்தில் பெரும்பாலான குடும்பங்களில் மனைவியர் விஷயத்தில் கணவர் எவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பதைப்பற்றிச் சிறிது கூறுதல் பொருத்தமுடையதாகும்.

(1) ஒரு சாரார் மனைவியர் தமக்கு அடங்கினவர்கள்—அடிமைகளை யொத்தவர்கள்—தம் சொற்படி—(அது சரியோ, தப்போ அதைப்பற்றிக் கவலையில்லை.) நடக்கக் கடமைப்பட்டவர்கள் என்று எண்ணுகின்றவர்களாய் இருக்கின்றனர். இவ்வகுப்பினர் தம் கருத்தின்படி—சொற்படி-அவர்கள் (மனைவியர்) நடக்கத் தவறினாலும், அல்லது மறுத்துப் பேசினாலும் மிகுந்த கோபங்கொண்டு கண்கள் சிவக்க உதடு துடிக்க உடலெல்லாம் நடுங்க, நாவடி கோல் போன்ற ஓர் தடியை யெடுத்துக்கொண்டு வாயில் வந்தபடி வம்பும் தும்புமாகப் பேசி மாட்டை யடிப்பதுபோல் அடிக்கின்றார்கள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! என்னகொடுமை! என்னகொடுமை!! அன்பர்களே! இவ்வியாசத்தை எழுதிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் துரதிருஷ்டவசமாக இதேவிஷயமான ஓர் விவகாரம் நம்மிடம் வந்தது. தங்கள் பெண்ணை அவள் கணவன் அடித்து இம்சிக்கிறானென்று அப்பெண்ணின் பெற்றோர் வந்து முறையிட்டனர்.

இரண்டு மூன்று நாட்களாக இப்படியே அடிப்பதும் உதைப்பதுமாயிருக்கிறான் என்று தெரியவந்தது. அப்பெண் பூரண கர்ப்பவதியா யிருக்கிறாள். வயது பதினாறே யிருக்கும். அப்புருஷனை அழைத்து விசாரிக்கிறபொழுது அவன் ஏதோ சில காரணங்கள் கூறுகிறான். காரணங்கள் அற்பமானவைகளே. இவ்வற்ப காரணங்களுக்காக பதினாறு வயதுடையவளும் கர்ப்பவதியுமான அப்பெண்ணைக் கண்டபடி அடிப்பது எவ்வளவு புத்திசாலித்தனம் என்பதைப் பாருங்கள்! மனைவியர் குற்றம் செய்யலாம். அதற்காக அவர்களை அடிப்பது மிருகத்தன்மையேயன்றி வேறல்ல. அத்தவறுகள் மீண்டும் அவர்களிடம் நிகழாதபடி மாற்றுதற்கு வேறு மார்க்கமில்லைபோலும். சாந்தமாக—வேடிக்கையாக—சொன்னால் அவர்கள் தம் பிரியம்போல் நடப்பார்களே. “இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்சொலாலென்றும் மகிழாதே.” என்பது ஆன்றோர் மொழியல்லவா. நல் வார்த்தையால் எத்தகைக் காரியத்தையும் சாதித்துக்கொள்ளலாமே. இதை யுணராமல் அநியாயமாய்ப் பெண்களை அடிப்பதும் உதைப்பதும் வைவதும் எவ்வளவு தகாத காரியங்கள். அப்படிச் செய்வதால்—அடிப்பதால் பெண்கள் நல்வழிப்பட்டு விடுவார்களா? அப்படி நல்வழிப்பட்டிருக்கிறார்க ளென்பதற்கு யாவரேனும் திருஷ்டாந்தம் காட்டமுடியுமா?

(தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப்பண்டிதர், செத்தூர்.




## இந்தியக் காப்பி உற்பத்தி.

(511-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிலுள்ள செங்கிறமான தோலுக்கும், உட்தோலுக்கும் இடையில் பிசுபிசுப்புள்ள ஒருவித பதார்த்த மிருக்கும். அதனை நன்றாகப் போக்கிச் சுத்தஞ் செய்துவிட வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் காப்பிக் கொட்டைகள் சரியாகக் காயாமல் கெட்டுப்போம். ஆதலால், அவற்றை, ஒரு கொள்கலத்திலிட்டுச் சுமார் 24 மணி நேரம் வரையில் ஒருவித வேக் காட்டில் வைத்திருக்க வேண்டும். இக்காலம் சீதோஷ்ண மாறுபாடுடையதா யிருப்பினும் பாதகமில்லை. திரவக வேக்காடு காப்பிக் கொட்டையின் மேலுள்ள அப்பிசுபிசுப்பான வஸ்துவை நீர்த் தன்மையானதாக்கிச் சுத்தப்படுத்தி விடுகிறது.

**பூர்த்தியான முறை.**

இப்படிச் சுத்தப்படுத்தியபின், கொட்டைகள், 3 அடி சதுரமும் 3 அங்குல உயரமுமுள்ள மின்சார முலாம் பூசப்பெற்ற கம்பிகளால், வேயப்பெற்ற வலைபோன்ற சல்லடையாலோ, அல்லது சிறு புள்ளித்துவா ரங்களிடப் பெற்ற துத்தநாகத் தகட்டாலோ அமைக்கப்பெற்ற அடிப்பா கத்தையுடையதான 'டிரே' என்ற தட்டிலிடப்படும். அத்தட்டு மூன்றடி யுயரமுள்ள கழுமரத்தில் பொருத்தப் பெற்றிருக்கும். கொட்டைகளை ஒரு அடி கனத்திற்கு (உயரத்திற்கு) மேற்படாமல் 'செமண்ட்' தரையில் பரப்பி வைத்தல் அல்பமான-இலேசான முறையாகும். அக் கொட்டைகள் சரியாக உலர்ந்து விட்டனவா வென்று ஒன்றிரண்டு கொட்டைகளைக் கட்டை விர லால் அழுத்தியோ, ஒரு ஆணியைக் கொண்டு நசுக்கியோ, அல்லது முன் பற்களால் கடித்துப்பார்த்தோ பரீக்ஷிக்க வேண்டும். சாதாரணமாக அவை நன்றாகக் காய்ந்து பதப்பட சுமார் ஆறு அல்லது ஏழு நாட்கள் வெயிலில் உலர்த்தப்பட்டுத் தினசரி மூன்று தடவை புரட்டிப்புரட்டி வைக்கப்பட வேண்டும்.

கொட்டைகளை விற்பனைக்குத் தயாராக்கும் பூர்ணமான முறையாவது: அப்பசை போன்றதையும், வெள்ளை நிறமான உட்தோலையும் போக்குதலே யாம். அந்த இலேசான வெள்ளைத் தோல், கொட்டைக்கும் அப்பிசுபிசுப் புள்ள பதார்த்தத்திற்கும் இடையே யுள்ளது. இதனைச் செய்வதிற் பல முறைகளிருப்பினும் சணல் சாக்கினடியிற் போட்டு நெரித்தலே சுலப மானது. அப்படி நெரிக்கும்போது பதரானது நீங்கிவிடுகிறது. முடிவாக, அக் கொட்டைகள் உருவுக் கேற்றவாறு மூன்று வகையாகப் பிரிக்கப்படும். உருண்டைக் கொட்டைகள் தட்டைக் கொட்டையிலிருந்து வேறுபடுத்தப் படும். உடைந்ததும் சொத்தையுமான கொட்டைகள் தனியே யொதுக்கி



வைக்கப்படும். அப்பால், தொழிலாளர் அவற்றைத் தனியே மூட்டை மூட்டையாகக்கட்டி வியாபார ஸ்தலங்களுக்கு அனுப்பிவிடுவார்கள்.

காப்பித்தூள் செய்வது ஒரு தனிக் கைத்தொழில். காப்பிக் கொட்டை களை ஒரு இருப்பு ஏனத்திலிட்டுச் சிறிது நெய்விட்டு, அடுப்பிலேற்றி வறுத் துக் கருப்பாக வறுபட்டபின் கீழே இறக்கிவிட வேண்டும். வறுபட்ட கொட்டைகள் சூடு மாறுதிருக்கும் பொழுதே அவற்றின்மீது சிறிது சருக் கரையைத் தூவி அவற்றைப் புரட்டிவிட்டு மேலுங் கொஞ்சம் சருக்கரையைத் தூவ வேண்டும். இப்படிச் செய்வதால் காப்பி ஒருவித மணத்தோடும் நல்ல நிறத்தோடு மிருப்பதன்றி, வெகு நேரம் வைத்திருந்தாலும் கெடாமலிருக்கும்.

**காப்பித்தூள்.**

இவ்விதம் வறுத்த கொட்டைகளைக் காப்பிக்கொட்டை யரைக்கும் இயந்திரவாயிலாக வோ, அல்லது சாதாரண உரலிலிட்டோ தூள் செய்து விடலாம். இவ் வியந்திரம் மூன்று வகைப்படும். பெரிது சுமார் ரூபா 10 விலையுள்ளது. அதில் ஒரு பவுண்டு கொட்டைகள் நிரப்பலாம். இந்த இயந்திரத்தை ஒரு மேஜைப்பலகை முதலியவற்றிற் பொருத்திக் கொட்டையைத் தூள் செய்ய லாம். இவ்வியந்திரத்தில் இணைக்கப்பெற்ற கைபிடியைப் பிடித்துச் சுழற்றத் தூளானது அடியில் விழுந்து கொண்டே யிருக்கும்.

பொதுவாக, இக்காப்பிக் கைத்தொழில் முறையில் பற்பல இடங்களில் வேறுபாடுகளுண்டு. மண்ணுரம், பயிரிடும் வகை, முதலியவற்றுள் பலர் பற்பலவாறு அபிப்பிராயப்படுவர். ஆனால், நமது நாடெங்கணும், பொது வில், பயிரிடும் முறையும், கொட்டைகளைச் சுத்தஞ்செய்யும் வகையும் அநேக மாக ஒன்றாகவே யிருக்கும். இந்தியக் காப்பித் தொழில் ஏற்றுமதிக்காகவே நடைபெறுகின்றது. வருடாவருடம் சராசரி 2,30,800 'cwt.' அந்தர்வெயிட் காப்பிக் கொட்டை வெளி நாடுக ளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

**முடிவுரை.**

ஐக்கிய அரசாங் கத்தாரும், பிரஞ்சுக்காரர்களுமே பெரும்பாலும் இந்தியாவிலிருந்து ஏற்று மதியாகும் காப்பிக் கொட்டைகளை வாங்குபவர்கள். சொற்ப முதலாளிக ளும், இத்தொழிலில் முயற்சி யெடுத்தால் பெரும்பயன் அடையலாமென் பதை யுணர்த்தவே இக்கட்டுரை வரையப் பெற்றது. இரண்டு மூன்று ஏக்கர் நிலத்தை இதற்கெனவிட்டு அதில் பயிர்செய்து பார்க்கலாம். அல்லது புறம்போக்கு நிலங்கள் கிடைக்குமானால் அவற்றில் காப்பியைப் பயிர்செய்து பலனடையலாம். இதனால் வேலை கிடைக்காமல் வருந்தும் பெண்டிர், சிறு வர்களுக்கு நல்ல பிழைப்பேற்படுவதுமன்றி, முதலாளிகளுக்கு யதேஷ்ட மான இலாபமும் கிடைக்கும்.

S. V. வரதராஜையங்கார், உறையூர், திருச்சி.

---

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாதமாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.




## முடிந்த ஞானம்.

(501-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாசையுள்ளவன், மூர்க்கமுள்ளவன், கொடும்சொல் பேசுகிறவன், அலப்புகிறவன், கோபத்துக்கிடங் கொடுக்கிறவன், தற்புகழ்ச்சி செய்கிறவன், இந்த ஆறுபேரும் துஷ்டர்களாம். இவர்கள் ஐசுவரியத்தை அடைந்தால் பிறரை மதிக்கமாட்டார்கள். ஜீவித்திருப்பதற்குப் பயன் சிற்றின்பமே என்று எண்ணுகிறவன், வஞ்சகன், தானம் கொடுத்தபின் தன்னைத்தானே புகழ்ந்து பேசுகிறவன், லோபி, மனத்திடமில்லாதவன், தன்னை மெச்சுகிறவன், தன் மனைவியைப் பகைக்கிறவன் இந்த எழுவரும் பாப ஒழுக்கமுள்ளவர்களாம். தர்மம், சத்தியம், தவம், தன்னடக்கம், திருப்தி, மரியாதை, துறவு, பிறரை நேசித்தல், தானம், அத்தியயனம், பொறுமை, சாந்தம், இந்தப் பன்னிரண்டும் பிராமணர்களால் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந்தப் பன்னிரண்டையும் தவறாமல் அனுஷ்டிக்கிறவன் உலகம் முழுவதையும் ஆள்வான். இவற்றுள் இரண்டொன்றையாவது உடையவன் பிறர்பொருளைத் தனதென்று நினைக்கமாட்டான். தன்னடக்கம், துறவு, ஞானம் இந்த மூன்றிலேயே மோட்சம் நிலைபெறுகின்றது. இவை ஞானத்தையும் பிரமத்தையும் எல்லாவற்றுக்கும் மேலான பொருளென்று எண்ணுகிற பிராமணருக்குரிய இலக்கணங்களாம். உண்மையாயிருந்தாலும் பொய்யாயிருந்தாலும், பிறர் குற்றத்தைச் சொல்வது புகழாகாது. இப்படித் தூஷிக்கிறவர்கள் நரகத்தையே அடைவார்கள். மதம் பதினெட்டுக் குற்றங்களை யுடையது.

அவையாவன.—பிறரைப் பகைத்தல், தர்மவிரோதம் செய்தல், அருவருப்பு, பொய் சொல்லுதல், காமம், கோபம், பிறரை அனுசரித்தல், பிறர் குற்றங்கூறல், பிறர் குற்றத்தையே நாடுதல், வீண்செலவு செய்தல், சண்டையிடல், இறுமாப்பு, ஜீவஇம்சை, தீமைகளை அறியும்தன்மை இல்லாமை, பிறருக்குத் துன்பம் செய்வதையே எண்ணுதல் என்பவைகளாம்.

ஆகையால் அறிவுள்ளவன் மதத்துக் கிடங்கொடுக்கக் கூடாது. இடங்கொடுத்தால் தோஷமுண்டாகும். சினேகிதத்துக்கு ஆறு அடையாளங்கள் உண்டென்று சொல்லப்படுகிறது. முதலாவது சினேகிதர்களுடைய வாழ்வில் மகிழ்ச்சியடைதல், இரண்டாவது சினேகிதர்கள் கஷ்டப்படும்போது வருத்தப்படுதல், மூன்றாவது தன் நண்பன் கேட்டாலும் கேளாவிட்டாலும் அவன் விருப்பம் அறிந்து கொடுத்தல். நல்ல எண்ணமுள்ள சினேகிதன் தன் சொத்து, புத்திரன், மனைவி எல்லாவற்றையும் கொடுத்துவிடுவான். இது நாலாவது. ஐந்தாவது, தன்னால் உதவிசெய்யப்படுகிற சினேகிதனுடைய வீட்டில் வசியாமல் தானே சம்பாதிக்கிறதைக்கொண்டு ஜீவனம் செய்தல். ஆறாவது தன் சினேகிதன் நிமித்தமாகத் தன்னுடைய நன்மைகளையும் இழந்துவிடுதல். ஐசுவரியத்தையும் இந்த நல்ல குணங்களையும் அடைய விரும்புகிறவனும், தர்மம் செய்கிறவனும், நீதிமானயிருக்க விரும்புகிறவனும், ஐம்புலன்களையும் தத்தம் விஷயங்களிற் செல்லாமல் அடக்கிக்கொள்ளவேண்டும். அப்படிப் புலன்களை அடக்குவதே தவமாம். இந்தக் குணம் விருத்தியானால் அவன் மறுமையில் நல்ல குணங்களை அடைவான். சாந்தமில்லாதவன் ஞானத்தை அடையான். அவன் பரலோகவாழ்வை விரும்பித் தவஞ்செய்ய வேண்டும். யாக உற்பத்திக்கு மூலமான பிரமத்தை அறியும் வல்லமை யுள்ளவன் யோகி. அவன் மனதினாலே யாகம் செய்வான். சிலர் ஜபத்தினாலே யாகம் செய்வார்கள். வேறு சிலர் கர்மத்தினாலே யாகம் செய்வார்கள். பிரமத்தின் இலக்கணங்களை அறிகிறவனிடத்தில் சத்தியம் விளங்குகிறது. பிரமத்தை இலக்ஷண சூனியமென்று அறிகிறவனிடத்தில் அதிகமாய் விளங்கும். இன்னும் சிலவற்றைக் கேளும்.



சிறந்ததும் பெருமையுள்ளதுமான இந்தச் சாஸ்திரமே அனுஷ்டிக்கத் தக்கது. மற்ற சாஸ்திரங்களெல்லாம் சொற்கூட்டங்களேயாம். யோக சாஸ்திரத்திலேயே எல்லாம் நிலைபெறுகின்றன. யோகத்தை அப்பியாசித்தவர்கள் மரணம் அடைவதில்லை. அரசனே! கர்மத்தால் பிரமத்தை அடைய முடியாது. ஞானமில்லாதவன் யாகங்களையும் ஓமங்களையும் செய்தாலும் அவன் நித்தியத்துவத்தை அடையமாட்டான். அவன் பேரின்பத்தையும் அடையமாட்டான். பஞ்சேந்திரியங்களை அடக்கியே பிரமத்தைத் தேட வேண்டும். புகழ்ச்சியால் மகிழ்ச்சியையும் இகழ்ச்சியால் கோபத்தையும் அடையப்படாது. வேதத்தில் சோபான முறைப்படி நடப்பானானல் அவன் இவ்வுலகத்திலேயே அடையவும் கூடும். கற்றறிந்த உமக்கு இதுதான் நான் சொல்லத்தக்கது.

பிரபஞ்சத்துக்கு மூலகாரணமான விதையானது மஹாயசவஸு என்று சொல்லப்படுகிறது. அது கண்டமில்லாதது. பரிசுத்தஞானமாயுள்ளது. சுயமாகவே பிரகாசிக்கிறது. அதனாலேதான் சூரியன் பிரகாசிக்கிறது. அந்தந்த தெய்வத்தன்மையுள்ள ஜோதியை யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். அதனாலேயே பிரமமானது சிருஷ்டியைச் செய்கிறது. அதனாலேயே பரவுகிறது. அதுவே ஜோதிரூபங்களுக்குள்ளிருந்து அவற்றுக்கும் ஒளியையும் வெப்பத்தையுந் தருகிறது. தான் மற்றெதனிடத்திலிருந்தும் ஒளியைப் பெறாமல் சுயம்ஜோதியாய் ஒளிகளுக்கெல்லாம் அச்சத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நித்தியவஸ்துவையே யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். சூட்சுமபூதங்களினின்றும் உண்டான ஐந்து மஹாபூதங்களினாலே சரீரமுண்டாயிற்று. சூட்சுமபூதங்களோ ஒரே சுபாவமான பிரமத்திலிருந்து உண்டாயின. அந்தப் பிரமத்தினின்று ஜீவாத்மா ஈசுவரன் என்கிற இரண்டு சைதன்னியங்களுண்டாகின்றன. இவ்விரண்டும் நித்திரை மஹாலயம் இரண்டிலும் உணர்ச்சியற்றிருக்கின்றன. எப்போதும் அறிவுடனிருக்கிற பிரமமானது இவ்விரண்டுடன் ஆகாசம் பூமிகளையும் தாங்கிக்கொண்டிருக்கிறது. அது சூரியனுக்குச் சூரியனாயும் இருக்கிறது. அந்தப் பிரமத்தையே யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். அந்தக் காரணவஸ்துவே பூமி ஆகாசமாகிய இரண்டு தெய்வங்களையும் தரிக்கிறது. திசைகளையும் விசுவத்தையும் தாங்குகின்றது. அந்தக் காரணவஸ்துவிலிருந்தே திசைகளும் நதிகளும், பெரிய கடலும் உண்டாகின்றன. அந்த நித்தியப் பொருளையே யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். இந்தச் சரீரமானது மரணத்தை நோக்கிச் செல்கிற ஒரு இரதத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதனுடைய செய்கை அழியாமல் இருக்கிறது. அந்தத் தேர்ச்சக்கரங்களில் கட்டப்பட்ட இந்திரியங்களாகிற குதிரைகளினாலே அறிவுள்ள மனிதன் கனவுலகங்களின் வழியாக விகாரமற்ற பரம்பொருளினிடம் செல்கிறான். அந்தப் பரம்பொருளையே யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்

கள். அந்தப் பரம்பொருளின் சொரூபமானது எவ்வகைப்பட்ட திருஷ்டாந்தங்களினாலும் அறிவிக்க முடியாது. அதை ஒருவனும் ஒருபோதும் கண்ணாற் கண்டதில்லை. அந்தக்கரணங்கள் பரவசமடைவதாலும், மனதாலும், இருதயத்தாலும் கண்டு மரணத்தைக் கடக்கிறார்கள். அதையே யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். மாயையாகிய நதியானது பயங்கரமானது. அது தேவர்களால் பாதுகாக்கப்படுகிறது. அது பன்னிரண்டு பலன்களை யுடையதா யிருக்கிறது. அந்த நதியின் நீரைப் பானம்செய்து கொண்டும் அதன் நடுவிலுள்ள பலவகையான வஸ்துக்களைப் பார்த்துக் கொண்டும் மனிதன் அதில் முன்னும் பின்னுமாக நீந்திக்கொண்டிருக்கிறான். இந்த நதியானது அந்த மூலகாரண வஸ்துவிலிருந்தே பெருகுகிறது. அந்தப் பரம்பொருளையே ஞானிகள் ஞானக்கண்களால் காண்கிறார்கள். போக்குவரவு செய்யும்படி நியமிக்கப்பட்ட ஜீவாத்மாவானது தன் கர்மத்தின் பலனில் பாதியை அனுபவிக்கிறது. நியமிக்கிறவன் ஈசுவரன் என்று சொல்லப்படுகிறான். அவன் பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களிலும் வியாபித்திருக்கிறான். அவனே யாகங்களை விதிக்கிறான். இத்தன்மையான பிரமசொரூபத்தை யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். ஜீவாத்மாவானது சகல குணங்களையும் விட்டொழிந்து சொர்ண இலைகளுடன்கூடின விருட்சத்தைப்போலிருக்கிற அவித்தையினின்று குணங்களைப்பெற்று, அந்தக் குணங்களுக் கேற்றபடி பிறப்பை அடைகின்றது. இதற்கு ஆதாரமாயிருக்கிற பரம்பொருளையே ஞானிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். பூர்ணமான பிரமத்தினிடத்திலுள்ள குணங்களே பூர்ணமான பிரபஞ்சத்தை உண்டாகச் செய்கின்றன. அந்தப் பரம்பொருளே தெய்வம். அதையே யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். அந்த மூலகாரணமான வித்திலிருந்தே பஞ்சபூதங்களும் உதித்தன. அவற்றை அடக்கியாளும் சக்தி அந்தப் பிரமத்திலிருக்கின்றது. அந்த வித்திலிருந்தே அக்கினியும் ஸோமனும் உண்டாயின. அதனிடத்திலேயே ஜீவகருவிகளிருக்கின்றன. சகல வஸ்துக்களும் அதனிடத்திலிருந்தே வருகின்றனவென்று கருதவேண்டும். அந்த வித்தைத்தான் வேதம் அது (தத்) என்று கூறுகின்றது. அதை ஒருவராலும் விரித்துச் சொல்ல முடியாது. அந்த நித்தியவஸ்துவையே ஞானிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள்.

பிராணவாயு அபானவாயுவை விழுங்குகிறது. அறிவு மனதை விழுங்குகிறது. அறிவு பிரமத்தில் ஒடுங்குகிறது. பிரமத்துக்கு ஜாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியமென்று நான்கு பாதங்களுண்டு. அன்னம்போன்ற அந்தப் பிரமம் துரியம் என்கிற பாதத்தைக் கீழேவையாமல் மூன்றுபாதங்களால் மேலே நின்றுகொண்டிருக்கிறது. மற்ற மூன்றையும் நடத்தும் நிமித்தம் அந்தப்பாதத்தைத் தூக்கிக்கொண்டிருப்பதினால் மரணம் மோட்சங்களுண்டாகின்றன. அந்தப் பரம்பொருளையே ஞானிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். அது அங்குஷ்டப்பிரமாணமாயுள்ளது. பூரணமாயிருக்கிறது. அது பிராணவாயுவுடன் சேர்ந்து மனம், புத்தி, தசேந்திரியங்கள் இவைகளை நடத்துகின்றது. வேதத்துக்குரியதும், குணங்களற்றதுமான அந்தப் பிரமமே சகலத்துக்கும் மூலகாரணமாயிருப்பது. ஆத்மாக்களில் அறிவாய் விளங்கும் அந்தப்பிரமமே. அதையே யோகிகள் ஞானக்கண்ணால் காண்கிறார்கள். மனதை அடக்கிக்கொண்டவர்களிடத்திலும் அடக்காதவர்களிடத்திலும் உள்ளது. ஆகையால் எல்லா மனிதர்களிடத்திலும் அந்தப் பரம்பொருள் சமமாயிருக்கக் காணலாம். பந்தன் முத்தன் இருவரிடத்திலும் சமனாயிருந்தாலும் முக்தன் அதிலிருந்து பெருகுகிற தேனை அருந்துகிறான்;



பந்தன் அருந்துவதில்லை. இதுதான் வித்தியாசம். அந்தப் பிரமத்தையே யோகிகள் ஞானக்கண்ணால் தரிசிக்கிறார்கள். ஆத்மாநாத்மா விவேகத்தை அடைந்து ஜீவனை நிலைபெறச்செய்தபின், அக்கினிஹோத்திரம் செய்தாலும் செய்யாவிட்டாலும் சமனேயாம்.

(தொடரும்) சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

உ

சிவமயம்




## வாதவூரடிகள் ஞானோபதேசம் பெற்ற வரலாறு.

(503-ம் பக்கத் தொடர்ச்சி.)

### தந்தைதாயர்.

80. இந்தநக ரகம்வாழு மிருபிறப்போர் தங்குழுவு
வந்தமிலாப் புகழ்பெறுமா மாத்தியர்தங் குலத்துதித்தார்
சந்தமிகு மறையொழுக்கந் தலைநின்ற பெருங்குணத்தார்
பந்தமகற் றிடுஞ்சைவப் பற்றுவழி வழியமைந்தார்.
(திருப்பெருந்துறை-திருவவதா-16.)

81. தன்னமுமா தில்லாதார் சம்புபா தாசிருத
ரென்னநவி லுமத்தா ரெல்லாருந் தொழப்பொலிவா
ரன்னவரில் லறக்கிழமை யமைந்தொழுகு கடன்பூண்டார்
மின்னவிருஞ் சிவஞான வதியெனும்பேர் மேவினார். (ஷை - ஷை 17.)

82. இத்தகைய மனையாரோ டியைந்துவாழ் தருமறையோ
ருத்தமர்வெம் பரசமயக் குறும்பொழிக்கு மொருமதலை
யத்தரரு ளாற்பெறுவா னுதரித்த கருத்தினராய்ச்
சித்தமொரு வார்தினமுஞ் சிவாலயத்தில் வழிபடுவார். (ஷை - ஷை 18.)

83. கதிருதய மெழுமுனமைங் கடிகையெனத் துயிலொருவி
யதிர்புனலின் மூழ்குபுநீ றணிந்துவிழி மணிபூண்டு
சதிருறுமைந் தெழுத்தெண்ணித் தழைதருநந் தனம்புகுந்து
பிதிர்தலிலா மலர்குற்றுப் பிறங்குதொடை தொடுத்தணிந்தும்.
(ஷை - ஷை 19.)

[illegible] செய்வாக்கித் திருவிளக்கு நனியமைத்து
[illegible] னிக்காணின் முந்துபுசென் றுபசரித்து
மா[illegible]யுமவ் வாதனு ரிறைவர்விழா
[illegible]றச் சிறப்பி[illegible]மினும்பலசெய் தியலுநாள். (ஷை - ஷை 20)

35. அதுதெரிமா முனிவரரு மமருமற் றவர்க்கிறையுஞ்
சதுமுகனு நெடுமாலுந் தாங்கரிய கவலையராய்
முதுபுகழ்சா றிருக்கயிலை முன்னுபுநந் திமையணங்கிக்
கதுமெனயா மிறையவன்பொற் கழறொழவந் தனமென்றார்.

(திருப்பெருந்-திருவவதா-22.

36. நந்தி புகுந்திடப்புகுந்து நம்பெருமான் கழல்வணங்கிப்
பந்தியினின் றனர்வந்த கருமமெவன் பகர்மினென
வந்திமதி முடித்தபிரா னருளுதலு மாறெழுது
முந்திமொழி குவன்பிடகர் முயன்றுசெய்தி வினையனைத்தும்.

(ஷை - ஷை 23.

37. நிரைக்கடல்சூ ழுலகமெலாஞ் சிவரப்போர் வையரடர்ந்து
வரைக்கரும்வை திகசைவ மார்க்கமொழித் தனரதனு
லுரைக்கருந்தீக் கருமமிலை யும்பர்பசித் தனர்மெலிந்தார்
அரைக்கலைதிக் காகவுளா யடியேங்கள் செய்வதெவன்.

(ஷை - ஷை 24.

38. என்றுகுழைந் திஃதடியேம் விண்ணப்ப மென்றிசைப்பக்
குன்றுகவித் தவன்முதலீர் கொடியராக் கியர்வலியை
வென்றுகளை குவநீவிர் போதிரென விடைகொடுத்து
மன்றுநடிப் பவனவர்கோண் மாற்றன்மனங் கொண்டிருந்தான்.

(ஷை - ஷை 25.

39. அதுகருதி யமர்தருநா ளாயிரவர் கணநாதர்
சதுமறையும் புகழ்காலாஞ் சத்திபதிந் தவர்குழுமிப்
புதுமதிய முடித்தபிரான் பொன்னடிதாழ்ந் தனரெழுந்தார்
முதுபுகழா கமத்துண்மை மொழிந்தருள வேண்டுமென.

(ஷை - ஷை 26.)

40. எழுகணநா யகர்தமையோ ரிடத்திருத்தித் தானுமிருந்
தழுபமரம் பசியவிய வொழுக்குங்கொன் றையினன்
முழுவலுடை மற்றவர்தம் முகநோக்கி யாகமத்தின்
செழுமயமா முண்மைசொல வுபக்கிரமஞ் செயல் குறித்தான்.

(ஷை - ஷை 31.)

41. வெள்ளியமா மலைமேலோர் மின்னலொடோர் கருமேகம்
வள்ளியசெந் தாமரையா யிரம்பூத்து வைகுதல்போற்
றெள்ளியவெள் ளானையின்மே றிகழ்புலோ மசையினொடு
முள்ளியவா யிரங்கண்மலர்த் தறுவராக் கம்புகல.

(ஷை - ஷை 36.)

42. வெளியாய நடவையிடை விளங்கவரு மிந்திரனைக்
களியாய கருதிநெடுங் கண்டுவந்தொல் லையின்மறந்தார்
தெளியாய கணநாத ராயிருட்டே சொருவர்
வளியாய வுணவுணும்பூண் மாதேவ னஃதுணர்ந்து. (ஷை - ஷை 37.)

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், வாலையாநந்தம்.

---




## ஸ்ரீ ஆண்டாள்.

(261-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிரதிதினமும் விஷ்ணு சித்தர் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்து தற்காகக் கட்டிவைக்கும் மாலையை அவரில்லாத சமயத்தில் எடுத்துத் தன் குழலிலே தரித்துக்கொண்டு 'அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனே' என்று அழகுபார்த்துவந்த சூடிக்கொடுத்தாளாகிய ஆண்டாள் நோன்பு நோற்கலானுள் என்று கூறினோமல்லவா? அந்த நோன்பின் விளக்கம் வருமாறு:—இந்த நோன்பே திருப்பாவை என்று வழங்கப்பெற்று வருகிறது. பாவை என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லானாலும் இந்த இடத்தில் நோன்பு என்னும் பொருளையே தருவதாம்.

ஆண்டாள், பூர்வம் ஆயர்மாதர் கண்ணனெம்பெருமானை முன்னிட்டு நோற்ற நோன்பைத் தானும் பாவனார்த்தமாக அனுஷ்டித்துய்யவேண்டி "நாமும் நம் பாவைக்குச் செய்யுங் கிரிசைகள் கேளீரோ" என்று சொல்லி அதற்குரித்தான அம்சங்களை ஒழுங்குபடவைத்துப் பேசலுற்றாள்.

பகவான், இந்த நிலவுலகைத் திருத்தி யாட்கொள்ள, திருவாய்ப் பாடியில் கண்ணபிரானாக அவதரித்து, தனது கிகரற்ற கல்யாணகுணங்களாலும், அதிரூப சௌந்தரியத்தாலும் அப்பாடியின்கணுள்ள ஐந்துலக்ஷம் குடியிற் பிறந்த பெண்களையும் தன் வசப்படுத்தித் தன்னோடொத்த பருவத்தினரான அப்பெண்களுந் தானுமாய் வாழ்ந்துவருங்காலத்தில், ஆயர்களின் தலைவர்கள் தங்கள் பெண்களையும் கிருஷ்ணனையும் ஒன்றுசேரவொட்டாதபடி பிரித்துவைத்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் மழை பெய்யாமற் போயிற்று. "கோவலர்க்குக் கோநிரையே சீரிய செல்வ" மாதலால் அச்செல்வம் குறைவின்றி வாழ்வதற்கு மழையே ஏதுவாம்; ஆகவே மழைபெய்யும் வண்ணம் நோன்பு நோற்குமாறு அவர்கள் தங்கள் பெண்மக்களுக்கு உத்தரவளித்து, கண்ணபிரானை அந்த நோன்புக்குத் துணைசெய்யுந் தலைவனாக நியமித்தார்கள். பெண்களும் கிருஷ்ணனும் "மாதங்களிற் சிறந்த மார்கழி மாதமும் மதிநிறைந்த நாள்களும் நமது நோன்பிற்கு அனுகூலமாக ஏற்பட்டது கொண்டாடத் தக்கதே. நாளைக்காலையில் ஒன்றுகூடி நீராடப் போகலாம்" என்று முடிவுசெய்துகொண்டு தத்தமது வீடுபோய்ச் சேர்ந்தனர். அடுத்த நாள் "கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே" என்கிறபடி கண்துஞ்சப் பெறுமையால் மூர்த்துற உணர்ந்தவர்கள், கண்ணபிரானது குணசேஷ்டிதாதிகளை 'நினைந்து நைந்துள் கரைந்துருகி' எழுந்திருக்கமாட்டாமல் படுக்கையில் கிடக்கிறவர்களைத் தனித்

தனியே சென்றுணர்த்திப் பின்பு எல்லோருமாய்த் திரண்டு சென்று கண்ணனை எழுப்பி அவன்பக்கல் தங்கள் மனோரதத்தை யறிவித்துக் காரிய சித்தி யடைந்து, தாங்களும், தங்கள் தலைவர்களும், ஆனிரைகளுடன் சுக ஜீவியரானார்கள்.

"இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக
அன்றோவிங் காண்டா ளவதரித்தாள்—குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந் தன்னையிகழ்ந்
தாழ்வார் திருமகளா ராய்."

"பெரியாழ்வார் பெண்பிள்ளையா யாண்டாள் பிறந்த
திருவாடிப் பூரத்தின் சீர்மை—ஒருநாளைக்
குண்டோ மனமே யுணர்ந்துபா ராண்டாளுக்
குண்டாகி லொப்பிதற்கு முண்டு."

"அஞ்சு குடிக்கொரு சந்ததியா யாழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மையளாய்ப்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை யாண்டாளைப் பத்தியுட னாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து."

என்று உபதேச ரத்தினமாலையிற் புகழப்படும் ஸ்ரீ ஆண்டாள், பொங்கித் ததும்பப்பெற்ற பகவத் பிரேமாதிசயத்தால், ஆயர் மாதர்கள் இழைத்த மேற்கூறிய நோன்பை யனுஷ்டித்து நலனடைய வெண்ணினாள்.

அந்த எண்ணத்தை நிறைவேற்ற ஆண்டாள், விப்ரோத்தமரான பெரியாழ்வாரின் பெண்மகளாயிருந்தும், யாகம் செய்யத் தொடங்கியவர்கள் தங்கள் உண்மைப் பெயர்களை விடுத்து, யாகம் பூர்த்தியாகுமளவும் 'யஜமானன்', 'அத்வர்யூ', 'ஹோதா' என்பவைபோன்ற நாமதேயங்களை வைத்துக் கொள்ளுகிறபடி, தன்னுடைய ஜன்மபூமியாகிய ஸ்ரீ வில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள ஸ்திரீகளை இடைப்பெண்களாகவும், தன்னையவர்களுள் ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலை ஸ்ரீ நந்தகோபரின் திருமாளிகையாகவும், அக்கோயிலில் எழுந்தருளியுள்ள பகவானையே கண்ணபிரானாகவும் பாவனைசெய்து, அந்தப் பாவனையின் முதிர்ச்சியால் அநுராகம் பெருகி, இடை நடையும், இடை முடியும், இடைப் பேச்சும், முடை நாற்றமும் கொண்டு நோன்பு நோற்கப் புகுந்தாள். இந்நோன்பின் விருத்தாந்தத்தையே திருப்பாவையென்னும் திவ்விய பிரபந்தம் விசதமாக வெளியிடுகின்றது.

சம்ஸாரிகளைப் பார்க்கிலும் முனிவர்கள் சிறந்தவர்கள்; முனிவரைவிட ஆழ்வார்கள் சிறந்தவர்கள்; ஆழ்வார்களினும் ஆண்டாள் உத்கிருஷ்டமானவள். சம்ஸாரத்திற்கிடந் துறங்காநின்ற ஆழ்வார்களைப் பகவான் தானாகவே சென்று எழுப்ப அவர்கள் விழித்துக்கொண்டார்கள். ஆண்டாளோ அவ்வாறின்றி மணத்துடன் முளைக்கும் திருத்துழாயைப்போல பகவான் விஷயத்தில் ஆராவியர்வை யவாவுடையவளாய் உதித்து, தானே அவனது சந்நிதானத்தை யடைந்து "உம்பர் கோமானே உறங்கா தெழுந்திராய்" என்று திருப்பள்ளி யுணர்த்தினளாதலால் இவள் மேம்பாடு கருதற்பாலதே. புருஷரைப் புருஷர் கண்டு இச்சிப்பதினும், புருஷரைப் பெண்கள் கண்டு இச்சிப்பது விசேஷமன்றோ?

ஆண்டாள் ஒரு கொள்கொம்புடன் கூடி வாழவேண்டிய பருவத்தைப் பெற்றதும், ஞானபக்தி வைராக்கியங்களில் தலையெடுத்து, "மானிடவர்க்



கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று மானுஷ நாற்றத்தில் விருப்பமில்லாமல் ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்ரீ வடபெருங்கோயிலுடையானுடன் கலந்து வாழும் பாக்கியத்தையே போக்கியமாக நினைத்தாள். ஆனால் அந்நினைவுக்கு அப்பெருமான் முகங் கொடுக்கவில்லை, பின்னர் ஆண்டாள் "இவ் வெம்பெருமானுடன் கலந்தின்ப மெய்தினவரார்?" என்றாராய்ந்து பார்த்தாள். ஆய்ப்பாடியிலிருக்கும் அஞ்சுலக்ஷம் குடிகளான ஆயர் மங்கையர் அனைவரும் அப் பகவானுடன் கூடி யானந்த முற்றார்களென்றறிந்து, 'அச் சம்பந்தம் காலாந்தரத்தில் நடந்ததொன்றாதலின் அதில் நமக்கந்வயம் இல்லை; இனி அவன் உலாவிய அடிச்சுவடும், அவனும் கோபியருமாகத் திளைத்த யமுனா நதியும், ஆனிரைக்காக அவன் எடுத்த கோவர்த்தனகிரியும் கிடந்தனவாகில் அவற்றைக் கண்டாயினும் உயிர் தரிப்போமென்ற துணிகரத்தைக் கொண்டாள். அத்துணிவை நிறைவேற்றத் தான் அசக்தி யுள்ளவளாயிருப்பது நோக்கி "அந்தோ! ஜனகராஜன் தன்மகள் சீதாபிராட்டியின் திருக்கல்யாணத்தை யுத்தேசித்து 'வில்முறி' என்றும், கும்பர் தம்மகள் நப்பின்னைப் பிராட்டியின் திருமணத்தை நாடி 'ஏறு தழுவுதல்' என்றும் அவதி வைத்ததுபோல் நமது தந்தை நமக்கோர் அவதியும் கற்பிக்கவில்லையே. இனி நாம் உய்வ தெங்ஙனம்?" என்று வாட்டமுற்றிருக்கையில், 'ஆயர் மங்கையருடன் கண்ணபிரான் ஆடிய குரவைக் கூத்தால் அம்மங்கையர் பெருமகிழ் வெய்தியபோது அப்பிரான் அந்த மகிழ்ச்சி ரஸத்தை மாற்றத் தான் மறைந்தருளினன். அப்போது கண்ணபிரானைக் காணப்பெறாத அந்த ஸ்திரீகள் அவன் செய்தருளிய பூதனை வதம், காளிங்க நர்த்தனம், தேனுகாசுர வதம் முதலான செயல்களை அவனைப்போல் நடித்துக்காட்டி ஒருவாறு துயரம் மறந்திருந்தார்கள்' என்று சிலர் சொல்லக் கேட்டு அவைபோன்ற பாவனா செயல்களைத் தானுஞ் செய்து சுகமடைந்த விஷயத்தைக் கூறுவது திருப்பாவை எனும் பிரபந்தம். 'வேத மனைத்திற்கும் வித்தாகும் கோதை தமிழ் ஐயைந்தும் ஐந்தும்" என்கிறபடி இப்பிரபந்தம் முப்பது பாசுரங்களையுடையது; பல படித்திறங்களான வியாக்கியானங்களைக் கொண்டது; 'பகவானுக்கு ஆட் செய்வதே பரமபுருஷார்த்தம்' என அறுதியிடுதல் இதன் உள்ளுறை.

இப்படி ஆண்டாள் தன் மனோபாவத்தைத் தனக்குகந்த காதலனான கடல்வண்ணன் விஷயத்தில் செலுத்தி, அவனை ஒரு நொடிப் பொழுதும் கூடாதிருக்கப் பொறாதவளாய், அவன் பிரிவையாற்றாத ஆயர்மங்கைகளைப் போல் தானும் நோன்புநோற்று உயிர்வாழ்பவளாய், அந்த அபிப்பிராயத்தைத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னுந் திவ்ய பிரபந்தங்களின் மூலமாகப் பகவத் ஸந்நிதியிலே விண்ணப்பித்துக் கொண்டு வாழ்ந்திருந்தாள்.

இவளது நோக்கத்தை யறிந்த விஷ்ணுசித்தர் நூற்றெட்டுத் திருப்பதிகளிலுமுள்ள எம்பெருமான்களுடைய பிரபாவத்தை ஆண்டாளுக் கெடுத்துரைத்து இவர்களில் எந்த மூர்த்தியின்மீது பிரியம் என்று கேட்க, ஆண்டாள் வடமதுரைக் கண்ணபிரானது வரலாற்றைக் கேட்டு மயிர் சிலிர்ப்பும், திருவேங்கட முடையானது வரன்முறையைச் செவியேற்று முகமலர்ச்சியும், திருமாலிருஞ்சோலை மலையழகரின் வடிவழகையறிந்து மனமகிழ்ச்சியும் கொண்டு, ஸ்ரீரங்கநாதனது மகிமை செவிப்பட்டவுடனே அளவற்ற ஆனந்தமடைந்து நின்றாள். அப்பொழுது அத்திருப்பதிகளின் எம்பெருமான்களெல்லோரும் இவளுடைய ஞானக் கண்ணுக்கு விஷயமாக, இவள் ஸ்ரீ ரங்கநாதனிடத்தே மனதைச் செலுத்தி அவனுக்கே தான் மணமகளாக விரும்புங் குறிப்பை வெளிப்படுத்தினாள்.

இதனையுணர்ந்த பெரியாழ்வார் 'இவளை நம்பெருமான் கடிமணம் புரிதல் கைகூடுமோ ?' என்று சிந்தித்திருக்க, திருவரங்கச் செல்வன் அவ்வாழ்வாருடைய ஸ்வப்பனத்தில் எழுந்தருளி 'உமது திருமகளைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு வாரும்; அவளை நாம் அங்கீகரிப்போம்' என்றும், கோயில் ஸ்தானிகர் முதலிய பரிஜனங்களுடைய கனவில் தோன்றி 'நீங்கள் சகல மங்கள வாத்தியங்களோடும் சத்திரசாமராதிகளோடும் நவரத்தினப் பல்லக்கையும் உடன்கொண்டு வில்லிபுத்தூருக்குச் சென்று ஆண்டாளை அழைத்துவாருங்கள்' என்றும் அருளிச்செய்தனன். இச்செய்தியைக் கேள்வியுற்ற ஸ்ரீ வல்லபதேவன் என்னும் அக்காலத்திருந்த அரசனும் ஆழ்வாருடனிருந்து வேண்டியவற்றைக் குறைவற நடத்திவைத்தனன்.

அனந்தரம் பட்டர்பிரான் ஸ்ரீ ஆண்டாள் நாயகியை மணிச்சிவிகையில் எழுந்தருளப்பண்ணி, மங்கலவாத்திய கோஷத்துடனே 'ஆண்டாள் வந்தாள்!,' 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்!,' 'சுரும்பார் குழற்கோதை வந்தாள்!,' 'திருப்பாவை பாடிய செல்வி வந்தாள்!,' 'பட்டர்பிரான் புதல்வி வந்தாள்!,' 'வேயர்குல விளக்கு வந்தாள்' என்று பல சின்னங்கள் பணிமாற, மெய்காப்பாளர் உடன்சூழ்ந்து வர, தாமும் அரசனுமாக இருபுறத்தும் இடைவிடாதிருந்து அழைத்துவந்து திருவரங்கம் பெரிய கோயிலை யடைந்து பெருமான் முன் மண்டபத்தில் அப்பிராட்டியை நிறுத்திப் பெருமாளைச் சேவிக்கப் பண்ணுவிக்கையில் அத்திருமாலின் திவ்ய சௌந்தரியம் இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல் ஆண்டாளைக் கவரத் தொடங்கியது.

சூடிக்கொடுத்தநாச்சியார், சிலம்பார்க்கச் சீரார்வளை யொலிப்பக், கொடியேரிடையாடக் காதளவுமோடிக் கயல்போல் மிளிரும் கடைக்கண்பிறழ அன்னமென்னடைகொண்டு பெருமாளருகிற்சென்று ஆனந்தக்கடலில் ஆழ்ந்து திருவரங்கன் திருவடிவருடக் கருதி நாகபரியங்கத்தை மிதித்தேறி நம்பெருமான் திருமேனியிலே அந்தர்ப்பவித்து அவனை என்றும் பிரியாதிருப்பவளாயினள்.

பெருமான், ஆழ்வாரை அர்ச்சகர் முகமாக அழைத்து 'க்ஷீரசமுத்திரராஜன்போல நீரும் நமக்கு மாமனாராய்விட்டீர்' என்று முகமன்கூறி, தீர்த்தம், திருப்பரியட்டம், மாலை, ஸ்ரீ சடகோபன் முதலியவற்றை யளித்து 'வில்லிபுத்தூருறைவானுக்கே தொண்டுபூண்டிரும்' என்று திருவாய்மலர்ந்து விடைகொடுத்தருளினார்.

ஆழ்வார், "ஒருமகள் தன்னை யுடையேன் உலகம் நிறைந்த புகழால், திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனான், பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும் பிள்ளை பெற்ற வசோதை, மருமகளைக் கண்டுகந்து மணாட்டுப் புறஞ்செய்யுங்கொலோ"—(பெரியாழ்வார் திருமொழி ௩-அ-ச) என்று மிகவுமுகந்து ஸ்ரீ வில்லிபுத்தூர்க்குச் சென்று வழக்கம்போல் கைங்கரிய நிரதராயிருந்தார்.

இப்படி ஸ்ரீ ஆண்டாள் வைபவத்தைப் பெரியோர்கள் வியந்து கூறுகின்றனர்.

"பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்து மறியாத மானிடரை
வையஞ் சுமப்பதும் வம்பு."

சுபம்! சுபம்!! சுபம்!!! ஓரன்பன்.

## நமது நாட்டின் தௌர்ப்பாக்கிய நிலைமை.

நமது தாய் நாடாமிப் பாரத நாடு மிக மிகச் சீரும் சிறப்பும் வாய்ந்து திகழ்ந்த தெய்விக நாடென்று பெரியோர் பலர் பேசியிருக்கின்றனர். ஒருகாலத்தில் மிக்க உயர்வுபெற்று விளங்கியது இந்த நாடு. அரசாட்சி முறையிலும், வியாபாரத்துறையிலும், வேளாண்மைத் தொழிலிலும், தெய்வபக்தியிலும், தத்துவஞானத்திலும், கல்வி யறிவிலும், சௌரியத்திலும், போர்த்திறமையிலும், ஜீவகாருண்யத்திலும், சகோதரத்துவத்திலும், ஒற்றுமையிலும் இது ஒப்பற்று விளங்கியதென்பது பண்டைய நூல்களாலும், அக்காலங்களில் யாத்திரீகர்களாகவந்த அன்னிய நாட்டினர்களெழுதிவைத்துள்ள திருபங்களாலும் விளங்குகின்றது. தற்போது கண்கூடாகக் காணக்கூடிய சிற்சிலவற்றைக் கொண்டும் நம்நாடு பண்டைக்காலத்தில் இப்படித்தான் இருந்திருக்கவேண்டுமென்று அனுமானித்தறியவும் இடமுண்டு. ஆயினும் பண்டைக்கால நிலைமையைப்பற்றிப் பேசிப் பயன் யாது? அவ்வாறு உன்னத நிலையிலிருந்த நாடு—நமது தாய்நாடு—நமது நன்னாடு—பொன்னாடு—பொன்னாட்டினும் சிறந்த இந் நாடு—'நான் இந்தியாவில் இந்தியனாகப் பிறந்ததற்காக உண்மையிலேயே மிகப் பெருமை யடைகிறேன்' எனப் பெரியோர் பலராலும் பேசப்பெற்ற நாடு—சகோதரர்களே! சகோதரிகளே! தற்போது எந்நிலைமையி லிருக்கின்றதென்று சிந்தித்துப் பாருங்கள். அந்தோ! நினைத்தால் நெஞ்சம் கலங்குகின்றது. எழுதுவோமெனில் கை நடுங்குகின்றது, இறகும் நடுங்குகின்றது. 'வாழ்ந்தவன் கெட்டால் வறக்கும் சட்டிக்கும் உதவான்' என்று ஓர் பழமொழியுண்டு. அது நம் நாட்டளவில் பலித்துவிட்டது.

இந்நிலைமையில் இதன் பூர்வ ஸ்திதியைப்பற்றிப் பேசிப் பெருமை பாராட்டுவோமானால் அது பரிகாசத்திற்கே யிடமாகும். "என் தகப்பனார் தாசில்தாராயிருந்தார், என் பாட்டன் உயர்தர நீதிமன்றத்தில் நியாயாதிபதியாகவிருந்தார், என் பூட்டன் பெரிய ஜமீன்தாராக விருந்தான். இத்தகைய சிறந்த குடும்பம் எனது குடும்பம். ஐயா! பசி பிராணனை வாட்டுகிறது. ஒரு காலணா பிச்சை கொடுங்கள். பட்டாணி வாங்கித் தின்று பசியாறுகிறேன்" என்று ஒருவன் கேட்டதாக ஓர் கதை யுண்டு. இக்கதையையே ஒக்கும் பண்டைய நிலைமையைப் பேசுவது.

நமது வியாபாரமெங்கே? வேளாண்மை யெங்கே? மாதமும்மாரி எங்கே? தெய்வபக்தி எங்கே? வேதாந்த விசாரணை யெங்கே? மதாசாரியர்கள் எங்கே? நல்லொழுக்க மெங்கே? ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஜீவகாருண்யமு மெங்கே? ஒன்றுங் காணோமே! எல்லாம் சூனியமாய் விட்டனவே! அந்தோ! இவைகளுக்குப் பதிலாக பஞ்சமும் பசியும் தரித்திரமும் நாஸ்திகமும் வேற்றுமையும் துவேஷமும் தீயொழுக்கும் தலைவிரித்துத் தாண்டவம் புரிகின்றனவே. நம் தாய் தவிக்கிறாள். கண்ணீருங் கம்பலையுமாய்க் கதறுகின்றாள். உண்ண வுணவும் உடுக்க உடையுமின்றி வாடுகிறாள்.

தன் மக்களின் பரிதாபநிலையைக் கண்டு பரிதபிக்கிறாள். தன் முன்னைய உன்னதத்தை யெண்ணி யெண்ணி யேங்குகின்றாள். என் செய்வாள், காலசக்கரம் அவளை இக்கோலத்திற் குள்ளாக்கிவிட்டது. அவள் சுதந்தரமற்றாள். அடிமைவாழ்க்கையில் ஆழ்ந்து கிடக்கிறாள். தன் தாய்க்குத் துன்பமுண்டாக்கியதினிமித்தம் சத்திரியர்களைக் கருவறுத்த பரசுராமன்போலத் தனது சேமத்தினிமித்தம் பிராணனையும் விடத்தக்க—தன் சுகத்தின்பொருட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தஞ் செய்யத்தக்க—'மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்றபடி மானத்தையே பெரிதாக்கொண்ட—உத்தமபுத்திர ரத்தினங்களால் சிறப்புற்றிருந்தாள். எல்லோரையு மிழந்தாள். இப்பொழுதும் அத்தகைய புத்திரர்களை அவள் பெறாமலில்லை. பெற்றிருக்கின்றாள். அவர்களும் தம் தாயின் நன்மையையே தம் நன்மையாகக்கொண்டு உழைத்தார்கள்; உழைத்துக்கொண்டு மிருக்கின்றனர். எனினும், அந்தோ! அவர்கள் முயற்சிகள் யாவும் அவலமாயின. ஆற்றிற் கரைத்த புளியாயின. மற்றைப் பிள்ளைகள்—பெருந்தொகையினராகவுள்ள பிள்ளைகள் ஒற்றுமையில்லாமல்—சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமையென்பதை யுணராமல்—சண்டையிட்டுக்கொண்டு திரிகின்றனர். இதுவே அவளது அகத்தைப் பெரிதும் அலைக்கழிக்கின்றது. தன் பிள்ளைகள் ஒற்றுமையில்லாதவர்களாய் ஒருவர்மீதொருவர் பகைமைகொண்டு போராடிக்கொண்டிருப்பார்களாயின், அதைக்கண்டு எந்தத் தாய்தான் சிந்தை கலங்காதிருப்பாள். ஐயோ! எனக்கு உணவும் வேண்டா. உடையும் வேண்டா. சீரும் சிறப்பும் வேண்டா. அடிமை வாழ்க்கையைப்பற்றிக்கூட எனக்கு அக்கரையில்லை. என்மக்கள் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தால் அதுவே எனக்குச் சகலபாக்கியங்களும் என்பதே அவளது தற்கால முறையீடு.

ஒரு நாட்டின் மேன்மைக்கு முக்கிய சாதனங்களாக விருப்பவை வேளாண்மை கைத்தொழில் வியாபாரம் ஆகிய இம்மூன்றுமேயாம். இம்மூன்றும் எந்நாட்டில் செவ்விதின் நடைபெறுமோ அந்நாடே நன்னாடாம். நம் நாட்டில் இவை மூன்றும் ஓங்கியிருந்தவரையில் நாடும் ஓங்கியிருந்தது. இவை தாழ்ந்துவிட்டதே நாட்டின் தாழ்மைக்கு — தரித்திரநிலைமைக்குக் காரணமாயிற்று.

வேளாண்மை:—'மேழிச் செல்வம் கோழைபடாது' 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்பவை ஆன்றோர் அனுபவமொழிகள். சீரைத்தேடின் ஏரையே தேடவேண்டும். இப்பயிர்த்தொழிலுக்கு, மழை—காலமழை—அதிவிருஷ்டி அனாவிருஷ்டி என்னும் தோஷங்களின்றி சமவிருஷ்டி—அத்தியாவசியம். மழையின்றி மாநிலத்தார்க்கில்லை. மாரியல்லது காரியமில்லை. இத்தகைய சிறப்புடையதாகிய மழையில்லை. மாரிவளங் குன்றிவிட்டது. பயிர்கள் வானம் பார்த்த பயிர்களாய் வாடுகின்றன. வேளாண்டொழிலினர் அப்பயிரைப்போலிருக்கின்றனர். காலமழை கிடையாது. அகாலத்தில் பெய்கிறது. அதை நம்பிக் கடன்பட்டு உழுது விதைத்துவிட்டால் பின்பு, ஆகாயத்தை அண்ணாந்துபார்த்துத் தலைமேல் கைவைத்துக்கொண்டு 'முறையோ வானதேவுடா' என்று கதறவேண்டியதாய்விடுகிறது. மக்கள் தண்ணீர் தண்ணீர் என்று (குடி தண்ணீர்க்கும்) தவிக்கின்றனர். இந்த நிலைமையில் வேளாண்மை எப்படி விருத்தியாகும்? குடிகள் குடிக்கக் கூழின்றி வாடுகின்றனர். நிலமதிப்பு குறைந்துவிட்டது. பொருளுற்பத்தி பூச்சியமாய்விட்டது. ரூபாய் ஒன்றுக்குப் பதினாங்கு பதினைந்துபடியாக விற்ற அரிசி மூன்றுபடிக்கு வந்துவிட்டது. ஒரு வீசை மூன்றணாவாக விருந்த மிளகாய் ஒரு ரூபாயாய்விட்டது. இப்படியே



எல்லாப் பொருள்களும் ஒன்றுக்கு நான்குமடங்கு ஐந்துமடங்கு விலையேறிவிட்டன. ஏழைகள் எப்படி சீவிப்பார்கள். பெண்டுபிள்ளைகளுடன் கப்பலேறுகிறார்கள். பினாங்கு சிங்கப்பூர் சிலோன் முதலிய நாடுகளில் சென்று பாழும் வயிற்றின் கொடுமையால் படாதபாடு படுகின்றனர். கூலிக்கார நாடு என்னும் பட்டம் நம் நாட்டிற்குக் கிடைத்துவிட்டது. பிச்சைக்காரர் பெருகிவிட்டனர். தெருப்பிச்சை, கடைப்பிச்சை, ரயில்வண்டிப்பிச்சை, கோயில்பிச்சை, திருவிழாப்பிச்சை, அங்கும் பிச்சை, இங்கும் பிச்சை, எங்கும் பிச்சை மயமாய்விட்டது. ஏற்பதிகழ்ச்சி என்பது ஏட்டளவில் நின்றுவிட்டது.

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப் பண்டிதர், சித்தூர்.

## ஊக்கத்தால் உயர்வு பெற்றவன்.

பாண்டிவள நாட்டில் கோவலூர் என்னும் பதியிற் சேவலன் என்பவன் ஒருவன் இருந்தான். இவன் ஏழைக் குடியிற் பிறந்தவன்; சிறு வயதில் தாயையும் தகப்பனையு மிழந்தவன். இவன் வீதிகள் தோறும் ஆடையில்லாது அலைந்து குடிகள் சொல்லுவதைக்கேட்டு யாவரேனும் அன்னமிட்டால் அதைத் தான் உண்டு பிறர்க்கும் கொடுத்து வயிறு வளர்த்து வந்தான். இவன் வீதிகள் தோறும் திரிந்திடினும் அவ்வூர் முத்தமிழ்ப் பாவலர் வீட்டிலேயே கிடப்பானாயினன். அவர் என்ன சொல்லினும் அதை ஆவலாய்க்கேட்பான். ஒருநாள் பாவலருக்கு அழைப்பு வர, அயலூருக்குப் பிரசங்கம் செய்வதற்காக அவர் புறப்பட்டார். அப்போது சேவலன், "நானும் வருகிறேன்" என்று ஆவலாய்ச் செப்பினான்; நாவலரும் அவனைத் தம்முடன் அழைத்துக் கொண்டுபோனார். அங்குப் பலர் பல விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவு செய்தார்கள். ஞானியார் மடத்து மாணவர் ஒருவர், கல்வியைப்பற்றிப் பேசினார். உபந்நியாசிக்கையில் அவர், "கர்கை நன்றே, கர்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே," என்ற வெற்றி வேற்கைப் பாவினைக் கூறினார். சேவலன் அதனைத் தன் மனதில் பதிய வைத்துக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தான். நாளடைவில் அவன் மனதில் இவ்வாசகம் வேரூன்றி விட்டது; அவன் பாவலரைப் பின் தொடர்ந்து செல்லும்போதெல்லாம், "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சைபுகினும் கற்கை நன்றே," என்று சொல்லிக்கொண்டே போவான். பாவலர் அவனது ஆவலை அறிந்து, "சேவல! நீ அதிகாலையி லெழுந்து தினந்தோறும் எனது இருப்பிடம் வந்து சேருவாயாயின் உனக்கு நான் கல்வி போதிப்பேன்" என்றார். அப்படியே அவன் அவர் இல்லம் வகி நாள் தவறாது கல்விகற்று மிகத் தேர்ந்தவனானான்; ஊராரும் அவனது திறமையை வியந்து கொண்டாடினார்கள். கல்வியை இளமையிற கற்காதுபோயின் தாழ்வு உண்டாகும் என்றுதான் ஔவைப் பிராட்டியாரும், "இளமையிற் கல்," என்றும், இளமையிற் கற்காது போயினும் கேட்டாவது தெளியவேண்டுமென்று "கேள்விமுயல்" என்றும் எடுத்தோதியுள்ளார்கள். ஐயன்மீர்! பிற்காலத்தில் உங்களுடைய மக்கள்,

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையும் ஆதரித்துக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் வாரிக் கொடுத்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேஎன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே."

என்று கூறி உங்களைக் குறை கூறாதபடி அவர்களுக்கு இளமையிற் கல்வி புகட்டுங்கள்.

சின்னையா செட்டியார், டவுங்கி.

## பிரார்த்தனை செய்து கொள்ளுதல்.

மனிதர்களுக்கு நோய் ஏற்படுவது சகஜமே. நோய், குணப்படுத்தக்கூடிய நோய், குணப்படுத்தமுடியாத நோய் என இருவகைப்படும். ஒருவருக்கு ஏதோ ஒருவிதமான குணப்படுத்தக்கூடிய நோய் ஏற்பட்டால் அவருக்குத் தக்க வைத்தியம் செய்தால் அவர் குணப்படுவாரென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. இந்துக்களாகிய நம்மவர்களில் சிலர், தங்கள் குடும்பத்தாரில் எவருக்காவது இத்தகைய நோய் ஏற்பட்டால் அவருக்கு மருந்து கொடுப்பதுடன் முருகரோ அல்லது ஏழுமலையாரோ தங்கள் குடும்பத்தார்பால் கோபங் கொண்டதனால்தான் அவருக்கு நோய் ஏற்பட்டது என்று நினைத்து, அந்த ஆண்டவனைத் துதித்து, "மலையைப்போல் வந்த பிணி பனியைப்போல் நீங்கிவிட்டால் உன் உருவம்போல் உருவம் செய்து போடுகிறேன்" என்றாவது, "தாலியைக் கழற்றிப் போடுகிறேன்" என்றாவது பிரார்த்தனை செய்து கொள்ளுகின்றனர்; சிலர், அம்மனோ, அண்ணன்மாரோ, முனீஸ்வரரோ அல்லது காட்டேறியோ தங்கள் குடும்பத்தார்மேல் கோபங் கொண்டதனால்தான் தம் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு நோய் ஏற்பட்டது என்று நினைத்து அந்தத் தேவதைகளை வணங்கி, பிணியாளி குணமடைந்து விட்டால் பொங்கலிட்டு ஆட்டையோ அல்லது கோழியையோ பலியிடுவதாகப் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறார்கள். இவர்கள், பிணியாளி குணப்பட்டபின், பிரார்த்தனை செய்து கொண்டபடி காரியம் நடத்துகின்றனர். பரமாத்மாவினால் சிருஷ்டிக்கப்பட்ட ஆட்டைக் கதறக் கதற இழுத்து அதை வெட்டுவதும், அதை வெட்டும்படி ஒருவரை ஏவுவதும் கொடுஞ்செயல்களாகும். உலகில் இத்தென்னாட்டில் வசிக்கும் இந்துக்களாகிய நாம் இவ்வாறு பிரார்த்தனை செய்துகொண்டு கொடுஞ்செயல் புரிகின்றோம். இந்தப் பிரபஞ்சத்தில் வேறே எந்த மதஸ்தினரும் இவ்வாறு செய்வதில்லை. நமக்கு நோய் ஏற்படுவதுபோல் மற்ற மதஸ்தினருக்கும் நோய் ஏற்படுகிறது. அவர்கள், நம்மைப்போல் பிரார்த்தனை செய்துகொள்ளாமலே குணமடைகிறார்கள். அவர்கள் குணமடைவதுபோல் நாமும் குணப்படக்கூடும்.

நம் குடும்பத்தாரில் ஒருவருக்கு நோய் ஏற்படுகையில் நாம் அவருக்குத் தக்க வைத்தியம் செய்தால் அவர் குணப்பட்டுவிடுவார்; மேற்கூறப்பட்டபடி நாம் பிரார்த்தனை செய்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. மடாதிபதிகளும் பணக்காரர்களும் தின்று வயிறு வளர்க்கும்படி நாம் நமது ஆபரணங்களையும் பணத்தையும் ஆலய உண்டியில் போடும் வழக்கத்தை விட்டுவிட வேண்டும். இந்த உண்டியில் நாம் போடும் நகைகளையும் திரவியத்தையும் அனுபவிப்பவர் யார்? நமது ஆண்டவனா அல்லது மடாதிபதியா? நமது எம்பெருமானார் அவைகளை அனுபவிக்கிறாரா? இல்லை, இல்லை. மடாதிபதிகளும் பணக்காரர்களும்தாம் அவைகளை அனுபவித்து ஏகபோகமாக வசிக்கிறார்கள். அவர்கள் ஏகபோகத்துடன் உல்லாசமாக வசிப்பதற்கு நாம் என் நம் ஆபரணங்களையும் பொருளையும் உண்டியில் போடவேண்டும். மடாதிபதிகளும் ஆலய தர்மகர்த்தாக்களும் நாம் உண்டியில் கொட்டும் நகைகளை விற்றுப் பணமாக்கிவிடுகிறார்கள். பின்னர் அந்தப் பணத்தை அவர்கள் பல வகைகளில் விரயஞ் செய்கிறார்கள். நம் ஆபரணமும் பணமும் இவ்வாறு விரயமாகின்றன. இந்த அற்பப் பொருள்களுக்கும் கடவுளுக்கும் சம்பந்தமுண்டா? அவருக்கு இவைகள் வேண்டுமா? அவர் இவைகளைக் கோருகிறாரா? இல்லை, இல்லை. அவர் நமக்கு அளிக்கும் கர்த்தா. அவர் நம்மிடமிருந்து இந்த அற்பப் பொருள்களை எதிர் பார்ப்பதில்லை; அவருக்கு இப் பொருள்கள் தேவையில்லை.



பிரார்த்தனை செய்துகொள்வதில் ஆண்மக்கள் பெண்மக்களையும், பெண்மக்கள் ஆண்மக்களையும், கற்றோர் கல்லாதாரையும் பின்பற்றுகின்றனர். இந்தவிஷயத்தில் ஆண்மக்கள் பெண்மக்களையாவது, பெண்மக்கள் ஆண்மக்களையாவது, கற்றோர் கல்லாதாரையாவது திருத்தாமலேயே இருக்கிறார்கள். பிரார்த்தனை செய்துகொள்வதை நாம் விட்டுவிடவேண்டும். பிரார்த்தனை செய்துகொள்பவர்களுக்கு நாம் தக்க ஏற்பாடு செய்து அவர்களை நல்வழியில் திருப்பவேண்டும்.

மா. மகேஸ்வரி அம்மாள், வேப்பேரி, சென்னை.

## தீங்கைத் துட்டுக் கொடுத்து வாங்குவதா?

சில சமயங்களில் மனிதர் தெரிந்தும், தெரியாமலும் தீங்குக்கே பணம் செலவு செய்கிறார்கள். சிலர், தீங்கினைத் தீங்கென்று அறிந்தும் அதற்குப் பணம் செலவு செய்கிறார்கள். நமது தாய் நாடாகிய பரதகண்டத்தில் ஏராளமாயும் தாராளமாயும் கெட்ட காரியங்களிலேயே பணம் செலவாகிவிடுகிறது:—கள், சாராயம், பிராந்தி, ஒயின் ஆகிய பானங்களில் ஆல்கஹால் என்னும் ஒருவிதமான வஸ்து கலந்திருக்கிறது. அதில் தீபட்டால் அது தானாகவே எரியும். பிராந்தியிலும், சாராயத்திலும் நூற்றுக்கு 50 பாகமும், ஒயினில் 15 பாகமும், கள்ளில் 8 பாகமும் ஆல்கஹால் கலந்திருக்கிறது. நம்முடைய தேகத்தில் உள்ள சதை, தோல், எலும்பு ஆகிய இவைகள் ஆகாரம் ஜீவாணுக்களால் ஆகியனவாகும். ஆல்கஹால் இவைகளை நாசப்படுத்திவிடுகிறது; இரைப் பையில் புண்ணை உண்டாக்குகிறது; மூளையைக் கெடுத்துவிடுகிறது. இப்பானங்களை உட்கொண்டால் தொற்று வியாதிகள் ஏற்படும். தேகம் சீக்கிரத்தில் மெலிந்துவிடும்; நரம்புகள் தளர்ச்சி அடைந்து, கை, கால் சோர்ந்துவிடும்.

நாம் நாடகம், சினிமா காட்சி ஹாலில் சென்றவுடன் கெட்ட காற்றை உட்கொள்கிறோம்; தூக்கத்தைக் கெடுத்துக் கொள்கிறோம்; தூக்கம் கெட்டால் நோய் வரும்; கண் பார்வைக்கு ஊனம் ஏற்படும்.

காப்பிக் கிளப்புகள் பெரும்பாலும் பார்ப்பனர்களாலேயே நடத்தப்படுகின்றன. அங்குச் சகலரும் உட்கார்ந்து சிற்றுண்டி உண்கிறார்கள். பீங்கான் பாத்திரத்தில் எல்லாரும் சாப்பிடுகிறார்கள். அதனால் சகலவிதமான தொற்று வியாதிகளும் நேரிடுகின்றன; ஆசாரம் கெட்டுவிடுகிறது; வியாதி ஏற்படுகிறது.

பீடி, சிகரெட்டு, கஞ்சா இவைகளைக் குடித்தால் நம் வயிற்றிலிருக்கும் ஈரல் கெட்டுவிடுகிறது; கோழை உண்டாகி இருமல் ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் ஜனங்கள் பணம் கொடுத்தே விலைக்கு வாங்குகிறார்கள். இப்பழக்கங்கள் மிக்க தீங்குள்ளனவாம். ஆதலின், நம் நாட்டினர் சௌக்கியமடைய வேண்டுமானால் இத்தூர்ப் பழக்கங்களை ஒழித்து நன் மார்க்கங்களில் பணத்தைச் செலவிட்டு வரவேண்டும்; நலமுண்டாகும்.

பண்டி. B. K. ராமானுஜம், விருதுநகர்.

# அறிஞரின் அமுதமொழிகள்.

(522-ம் பக்கத் தொடர்ச்சி.)

28. மனச் சஞ்சலம் வாழ்க்கையைக் குலைத்துவிடும்.
I am sure care's an enemy to life.

29. அட்டாலும் பால் சுவையில் குன்றாது (ஔவை.)
Though milk be boiled, its flavour does not diminish.

30. வெள்ளம் வருமுன்னே அணை போடவேண்டும்.
Before the flood comes and the water rise, we must cast up the dam.

31. அண்டத்திலுள்ளது பிண்டத்தில் உண்டு.
What is in the world is also in the human body.

32. ஆசை யுண்டாகாதாகில் அழுகையு மண்டாது.
If free from desire (if it approach thee not) thou wilt be free from sorrow.

33. அண்டையிற் சமர்த்தனில்லாத ராஜாவுக்கு அபகீர்த்தி வரும்.
Disgrace will happen to the King who has not a competent person near him.

34. அரங்கின்றி வட்டாடலும் அறிவின்றிப் பேசலு மொன்று.
To attempt playing draughts without squares, and a fool speaking of things which he does not understand, are the same.

35. தம்மினத்தாரை விழுதுபோல் தாங்குவது பெரியோர் கடன்.
Great men should maintain their relations as the banyan its desceuding roots.

36. வீரன் கேண்மை கூரம் பாகும்.
The friendship of a hero may become a sharp arrow.

37. வெறும் நாய் சந்தைக்குப் போனால் வெள்ளிக்கோலால் அடிபட்டு வரும்.
A dog which goes alone to the market will be beaten with a steel-rod.

38. வேடிக்கைக்கு விலையில்லை கதைக்குக் காலில்லை.
There is no (fixed) price for a show, no limit to a story.

39. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவிக்கும்.
The turkey seeing the peacock's gait may strut and imitate it.

A. P. இராமன், B. A,




மதுபானத்தை உடனே விட்டவன்:—குடிகாரன் ஒருவனிடத்தில், அவனுடைய சிநேகிதன், மதுபானம் செய்யக் கூடாதென்று வற்புறுத்தினான். அவன் அப்படியே குடியை விட்டுவிடுவதாக வாக்குறுதி சொன்னான். அவ்வாறு கூறிவிட்டுப் பின்னரும் கள்ளும் சாராயமும் கலந்து குடித்துக்கொண்டே வந்தான். அவன் ஒருநாள் ஒரு சாராயப் புட்டியைக் கையில் வைத்துக்கொண்டு தன் சிநேகிதனிடம் போனான். சிநேகிதன், "நான் எவ்வளவோ சொல்லியும் நீ மதுபானத்தை விடாமலிருக்கிறாயே" என்று அவனை வெறுத்துப் பேசினான். குடிகாரன், "நான் சாராயத்தையும் கள்ளையும் விட்டுக் கொண்டுதான் வருகிறேன்; இப்பொழுதும் உன் கண்முன்பாகவே விட்டுவிடுகிறேன் பார்" என்று சாராயப் புட்டியைத் திறந்து சாராய முழுவதையும் வாயில் விட்டுவிட்டான். செம்பியன்.

பாடம் நோக்கிற்கொரு விதமாக மாறியது:—ஒரு பாடசாலையில் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் பூகோள பாடம் போதித்துக்கொண்டிருக்கும்போது பூமி உருண்டை வடிவமானது என்று போதித்துக் கொடுத்தார். அதிலொரு மாணவன் அன்றிரவில் தன்வீட்டில் பூகோள பாடத்தை வாசிக்கும்போது பூமி உருண்டை வடிவமானது என்று வாசித்துக்கொண்டிருந்தான். அப்போது அவனுடைய தகப்பனார் அவனைப்பார்த்து, "அடா பயலே! பூமி தட்டை வடிவமாயிருக்க, உருண்டை வடிவமென்று யாரடா உனக்குப் போதித்தவர்?" என்று கோபத்துடன் சொன்னார். அது முதற்கொண்டு அம்மாணவன் வீட்டில், பூமி உருண்டை வடிவமாயிருக்கும் என்று வாசித்தால், தகப்பனார் அடித்து விடுவாரென்று பூமி தட்டையாயிருக்கு மென்றும், பாடசாலைக்குப்போனால் பூமி தட்டை வடிவமென்று வாசித்தால் உபாத்தியாயர் அடித்துவிடுவாரென்று பூமி உருண்டை வடிவமானது என்றும் வாசித்து வந்தான். இப்படியிருக்கும்போது அப்பாடசாலையில் ஒருதினத்தில் பரீக்ஷாதிகாரி வந்து பரீக்ஷை செய்தார். பரீக்ஷை நடக்கும் சமயத்தில் ஷை மாணவனின் தகப்பனும் பாடசாலைக்கு வந்திருந்தார். பரீக்ஷாதிகாரி பூகோளபாடத்தில் பரீக்ஷை செய்யும்போது ஷை மாணவனையே பார்த்து, "பூமி என்ன வடிவமானது?" என்று கேட்டார். அதற்கு அம்மாணவன், "பூமியானது பாடசாலையில் உருண்டை வடிவமாயும், வீட்டில் தட்டை வடிவமாயும் இருக்கிறது" என்று பதில் கூறினான். அப்போது பரீக்ஷாதிகாரி அவனைப்பார்த்து, "எக்காரணத்தைக்கொண்டு இவ்விடையைச் சொன்னாய்?" என்று கேட்க, அம்மாணவன் நடந்தவற்றைக் கூறினான். பிறகு பரீக்ஷாதிகாரியும், மற்றவர்களும் நகைத்து உபாத்தியாயர் இப்பாடத்தை நன்றாக விளக்கிப் போதிக்காததினால்தான் இக்குற்றம் ஏற்பட்டதென்று சொன்னார்கள்.

R. V. தேவராஜ பிள்ளை, உபாத்தியாயர், பாலக்கோட்டைப் பட்டி.




## கிருஷ்ணலிங் அல்லது துப்பறியும் சீடன்.

(524-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதன்பின் ஆனந்தலிங் சாளரத்தின் வழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்து தன் தந்தை வாலிபன்போல் சுறு சுறுப்பாய்ச் செல்வதையும் தன் பின்னால் வந்த மனிதன் தன் தந்தையின் காலடியைப்பற்றிச் செல்வதையும் கண்டு, "அவன் மோகூலிருக்கத் தகுதியுடையவனே. ஆனால் தன் ஜாக்கிரதையில் கொஞ்சம் அளவுமீறிப் போய்விடுகிறான். இனி நாம் சென்று அக்கன்னிகையிருக்கும் வீட்டைக் கவனிப்போம்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு உடனே வீட்டைவிட்டுப் புறப்பட்டான்.

ஆனந்தலிங் அவ்வீட்டிற்குச் சென்றதும் கீழ்க்கட்டிலிருக்கும் மணியடிக்கும் கயிற்றை யிழுத்தான். உடனே கதவு முரட்டுத்தனமாய்த் திறக்கப்பட்டதும் ஒரு தடித்த மாது வாசற்படியில் வந்துநின்றாள்.

அவள் பெண்ரூபமாயிருக்கும் ஆனந்தலிங்கை நோக்கி, "நீயா கதவைத் தட்டினாய்?" என்று படபடப்போடு கேட்டாள்.

ஆனந்தலிங் தன் வேடத்திற்குத்தக்க அன்னியநாட்டுப் பாஷையில் கபடற்ற மாதைப்போல், "நான் கதவைத் தட்டியது உனக்குக் கேட்கவில்லையா?" என்றான்.

அம்மாது:—கேட்காவிட்டால் எப்படி இங்கு வருவேன். நீ என்ன வேண்டி யிங்குவந்தாய்?

ஆனந்:—இங்குச் சில அறைகள் வாடகைக்கு விடப்படுகின்றனவென்று கேள்விப்பட்டுப் பார்க்கவந்தேன்.

அம்மாது:—"வெளியே தொங்கும் விளம்பரப் பலகையை நீ பார்க்கவில்லையோ. இங்கே காலி அறை கிடையாது. பக்கத்துவீட்டின் மேல் மாடியில் இடம் இருக்கிறது." என்றாள்.

ஆனந்:—"இருந்தாலும் உன்னைக் கண்டபிறகு நீ மிக்க நல்லமாதென்று தெரிவதால் எனக்கு இங்கு வசிக்கவே ஆசையாயிருக்கிறது." என்றான்.

அம்மாது மனங்கனிந்து, "இந்த வீட்டின் மேல்மாடியில் காலியறையிருந்தாலும் வீட்டுக்காரன் எக்காரணத்தாலோ அதை யாருக்கும் விடமாட்டேனென்கிறான்" என்றாள்.

ஆனந்:—ஓகோ, யாருக்கும் விடுகிறதில்லையோ?

அம்மாது:—இல்லை. கொடுக்கிறதில்லை. அடுத்த வீட்டில் மேல் மாடியில் அறைகள் காலியாயிருக்கின்றன.

ஆனந்:—"மிக்க வந்தனம். அண்டை வீட்டிலேயே போய்ப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

வழியில் "ஆனவரையில் மனோன்மணியிருக்குமிடத்திலே வேறு யாருக்கும் இடங்கொடுக்கப்படுவதில்லையென்பது தெரிந்தது ஒரு விசேஷமே," என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.



ஆனந்தலிங் அடுத்தவீட்டின் உச்சிமாடிக்குச் சென்று கதவைத் தட்டினான். ஒரு நடுவயதுள்ள அழகிய மாது வந்து கதவைத் திறந்தாள். அவள் பார்வைமட்டும் கடினப்பார்வையா யிருந்தது.

ஆனந்தலிங் அவளைநோக்கி, "இங்குக் காலியறைக ளிருக்கின்றனவென்று கேள்விப்பட்டேன்" என்றான்.

அம்மாது:—"ஆம் பின்பக்கம் கீழ்மாடியிலிருக்கின்றன. பார்வையிடவேண்டுமோ?" என்றாள்.

ஆனந்:—"தயவு செய்து காட்டு," என்றான். அம்மாது ஆனந்த லிங்கை யிதுவரையில் கூடத்திலேயே நிற்கவைத்துப் பேசிக்கொண்டிருந்தாள். அங்கிருந்த கதவு பாதி திறக்கப்பட்டிருந்தது. அம்மாது சாவி யெடுத்துக் கொண்டுவரச் செல்லும்போது அக்கதவை இன்னும் அதிகமாய் மூடிக்கொண்டு சென்றாள்.

ஆனந்த லிங்குக்கு அது சற்றும் சரிப்படவில்லை. ஆயினும் அந்த அறையை யெப்படியாயினும் பார்க்க வேண்டும் என்று தனக்குள் நிர்மானித்துக் கொண்டான்.

(தொடரும்)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

## மதிப்புரை.

"ஸைவ தந்திர ஸித்தாந்த பதார்த்த லக்ஷண ஸங்கிரஹம்":—

ஸ்ரீயுதபிக்ஷு சௌரீ சங்கரர் அவர்களால் ஸம்ஸ்கிருத பாஷையில் இயற்றப்பட்டது. 252. பக்கங்களை யுடையது. விலை ரூ. 2—0—0.

"மான்பரி தேவி, புதி கிராமம், ஜமல்பூர் போஸ்டு, இஸ்லார் ஜில்லா, பஞ்சாப் மாகாணம்" என்ற விலாசமுள்ள இடத்தில் கிடைக்கும்.

வேதம், வேதாங்கம், தர்சனம், ஸ்மிருதி, புராணம், காவியம், ஸாம்பிரதாயிக கிரந்தம் முதலியவற்றில் சொல்லப்படும் பதார்த்த லக்ஷணங்கள் முழுவதும் இதில் மிக்க விளக்கமாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. பல புத்தகங்களால் அடைய வேண்டிய பதார்த்த இலக்ஷணங்களை யெல்லாம் இந்த ஒரே புத்தகத்தால் அடையலாம். காசி, கல்கத்தா, மைசூர், காஞ்சிபுரம், நேப்பாளம், காச்மீரம், யூரோப் முதலிய தேசங்களில் வசிக்கும் பண்டித சிகாமணிகளால் இந்நூல் நன்கு மதிக்கப் பெற்றிருக்கிறது. 2700 இலக்ஷணங்களுள்ளது. மாணாக்கர்களுக்கும், மற்றையர்க்கும் மிகுதியும் பயனளிக்கத் தக்கது.

***

சத்திய விரதன்:—

[இஃதோர் தமிழ் நாவல்; திருச்சி, திருவானர்-ஸ்ரீ. பார்த்தஸகன் என்பவரால் இயற்றப் பெற்றது. இதன் விலை அணா-8.]

இக் கதையில், பதிவிரதையின் இலக்கணமும், உத்தம நேயரின் உயர்வும், தீநட்பாளரின் கொடுஞ்செயல்களும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்நூல் மக்கட்கறிவுறுத்தக் கூடியதே. எனினும் இதில் இலக்கணப் பிழைகளும், எழுத்துப் பிழைகளும், சொற் பிழைகளும் மலிந்து கிடக்கின்றன. சில பக்கங்களில் மட்டும் அடியிற் குறிப்பிடப் பட்டிருக்கும் வழுக்கள் காணப்படுகின்றன:—

"சுவற்றில், பகன்றனன், அறையன், செய்ய வியலும், ஜாக்கிறதை, (செவ்வரி) பறந்த, உத்தம யியல்,

பயிர்ச்சி, (இரங்) இறங்கா திருத்தல், திரவாமலே, (மரி) மறிப்பது, பூருவும், கிருதாவாக, பட்டியிழுதியில், தருவாயில், குளரி, நேருமோயென்று, ஒருக்காலும், பிரண்டு, (கூரி) கூறிய, (பறி) பரித்த, மனயியல்பு மேற்புரம், துண்பங்களில், கட்டடத்தின், கண்டிருத, சும்மாயிருந்தனர், பிறிந்தவர், மனவி, கிணற்தும்படி, உனரும், தலைக்கு யேறி, சேற்கிலே, பொருக்கமுடியாத."

இவையன்றி சற்றில் உள்ள ஒரு செய்யுள் யாப்பிலக்கணப் பொருத்தம் சிறிதுமின்றி நிறைந்த வழுக்களோடு கூடியிருக்கின்றது. புத்தகங்கள் இத்தகைய வழுக்களுடன் வெளிவருவதால் உலகில் பிழைத்தமிழே பரவுவதற்கிடனுகும். நண்பர், கல்வி மான்களிடம் காட்டியாவது இவ் வழுக்களைக் களைந்து வெளியிடாதது தமிழறிஞர் விசனிக்கத்தக்கது.

***

தடும்ப விநோதக் கதைகள்:—

[குடும்பங்களைப் பற்றிய பல அற்புதக் கதைகள் அடங்கிய ஓர் அரிய நூல்; உயர்ந்த காலிகோ பைண்டுள்ளது. சென்னை, பிராட்வே 149. நாவல் டிபோ சொந்தக்காரரால் வெளியிடப் பெற்றது. இதன் விலை ரூ. 2—0—0.]

இதில் 23. விநோதக் கதைகள் அடங்கியிருக்கின்றன. இக்கதைகளை விளக்கக்கூடிய பல பிளாக்குப் படங்களும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. இதிலுள்ள கதைகள் உலக அனுபவங்களையும் குடும்பங்களில் நடக்கும் பலவகைப்பட்ட செயல்களையும் தழுவி யெழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கதையும் சிறுவரும் வாசித்துணரும்படி தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட் டிருக்கிறது. இக் கதைகள் படிப்பார்க்கு ஆனந்தத்தையும், அறிவையும் அளிக்கத் தக்கன. இவ்விநோதக் கதைகளடங்கிய இப்புத்தகம் நற்பயன்தரக் கூடியதாதலின் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கத் தக்கது. தமிழ் மக்களனைவரும் போற்றத்தக்கது.

இது, நம் ஆனந்தபோதினி ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும்.

***

கமலாசனி:—

[இந்நூல், குறும்பலாப் பேரி, சி. எம். எஸ். நார்மல் ஸ்கூல் தமிழாசிரியர், திருவாளர், பண்டித ஆ. ஜெயரத்தினம் அவர்களால் இயற்றப் பெற்றது. இதன் விலை அணா 10.]

இது சிறந்த தமிழ் நடையில் அமைந்த நாவல். நம் செந்தமிழ் நாட்டுப் பண்டைய வொழுக்கங்களெல்லாம் இதில் நன்கு விளக்கிக் காட்டப்பட் டிருக்கின்றன. மேன்மக்களின் குணங்களும், நன்னட்பின் உயர்வும், தீநட்பின் இழிவும், பொய் கூறல், கள்ளுண்ணல் முதலியவற்றின் தாழ்வும், பிறநீதிகளும் ஆங்காங்கே கூறப்பட் டிருக்கின்றன. இன்னும் இதில் பண்டைய தமிழ் நூல்களிற் கூறப்பட்டிருக்கும் மடலூர்தல் கூறப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. இக்காலத்தில் தமிழ் நாவல்கள் எழுதுவோரிற் பெரும்பான்மையோர் எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை முதலியவற்றை நிரப்பித் தமிழ் இலக்கண வரம்பைச் சிறிதும் கவனியாமல் எழுதிவருவது வழக்கமாயிருந்தும், இந்நண்பர் தமிழ் இலக்கண முறை பிறழாது உயர்ந்த தமிழ் நடையில் இதனை யெழுதியிருப்பது கல்விமான்கள் பலர்க்கும் மனமகிழ்ச்சியை விளைவிக்கத் தக்கது. இது பிழையற்ற தமிழில் எழுதப்பட்டுள்ள தாதலின், இதனைத் தமிழர் எல்லோரும் வாங்கிப் படித்தின்புறலாம்.

# வர்த்தமானப்பகுதி

இங்கிலாந்து தேசத்தில் ரன்கிமான் என்பவரும் அவருடைய மனைவியும் சட்டசபை அங்கத்தினர்களாயிருக்கிறார்கள்; ஆண்டர்சன் என்பவரும் அவருடைய இரண்டு புத்திரர்களும் இச்சபை அங்கத்தினர்களாயிருக்கிறார்கள்; பிரதம மந்திரியாயிருக்கும் மிஸ்டர் பால்ட்வினின் புத்திரரும் இச்சபை அங்கத்தினராயிருக்கிறார். மிஸ்டர் பால்ட்வின் கான்சர்வடிவ் கட்சியாருடன் சேர்ந்திருக்கிறார்; அவருடைய புத்திரன் தொழிலாளர் கட்சியாருடன் சேர்ந்திருக்கிறார். மொத்தம் 615 அங்கத்தினர்களில் எட்டுப்பேர்கள் பெண்களாவர். அவர்களில் மூவரின் புருஷன்மார் உயர்தர சட்டசபை (லார்ட் சபை) அங்கத்தினரா யிருக்கிறார்கள்.

***

போர்வீரர்கள் விஷயமாக இங்கிலாந்து அரசாங்கத்தார், ஜனங்கள் செலுத்தும் வரிப்பணத்தில் 100-க்குப் 14-வீதமும், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் அரசாங்கத்தார்கள் 10-வீதமும், ஜெர்மனி அரசாங்கத்தார் 5-வீதமும் செலவிடுகையில் நம் நாட்டு அரசாங்கத்தார் 42 வீதம் செலவழிக்கின்றார்கள். அவர்கள், 15,000 இந்திய குதிரைப் போர்வீரர்கள் விஷயமாக 8-லட்சம் ரூபா செலவழிக்கையில் 4,000 வெள்ளைக்கார குதிரைப் போர்வீரர்கள் விஷயமாக 15-லட்சம் ரூபாவும், 90,000 இந்திய தரைப் போர்வீரர்கள் விஷயமாக 6-லட்சம் ரூபா செலவிடுகையில் 45,000 வெள்ளைக்கார தரைப்போர் வீரர்கள் விஷயமாக 16-லட்சம் ரூபாவும் செலவழிக்கிறார்கள்.

***

அமெரிக்காவில் மது ஒழிந்ததற்கு மூலப்புருஷரா யிருந்தவரும் இதர நாடுகளிலிருந்தும் அதை ஒழிக்க அரும் பாடுபட்டு வருபவருமாகிய ஜான்சன் என்பவர் இவ்வாண்டு முடிவில் நம் நாட்டுக்கு வந்து பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய சில நகரங்களில் உபந்நியாசம் செய்வார்.

***

தேகப் பயிற்சிக்குரிய விஷயங்களடங்கிய "பிசிகல் கல்சர்" என்னும் பத்திரிகை அமெரிக்காவில் வெளியிடப்படுகிறது. அதை 50 லட்சம் பேர்கள் தருவிக்கிறார்கள்.

"சைகிலிங்" என்னும் வாரப் பத்திரிகை இங்கிலாந்தில் வெளியிடப்படுகிறது. அதை அனேகர் தருவிக்கிறார்கள். அதில், சைகில் பந்தயங்களைப்பற்றியும், நாட்டில் ஆங்காங்குள்ள காட்சிகளைப்பற்றியும், அக்காட்சிகளைப்பார்ப்பதற்கு சைகிலில் செல்வதைப்பற்றியும் பல விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. சைகிலில் செல்வதைப்பற்றி இங்கிலாந்தில் இங்கிலீஷ் மொழியில் 113-பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமும் வெளியிடப்பட் டிருக்கிறது. அதன் விலை, தபால்கூலி உள்பட சுமார் 13 அணா வாகும்.

***

விளையாட்டுக்குரிய விஷயங்களடங்கிய "ஸ்போர்டிங் லைவ்" என்னும் பத்திரிகை இங்கிலாந்தில் வெளியாகிறது. அதன் சொந்தக்காரர்கள் 500-பவுன் வெகுமதி வைத்து வின்ட்சர் நகரிலிருந்து லண்டன் நகருக்கு (26 மைல் 385 கெஜம் தூரம்) ஓடும் பந்தயம் சென்ற மாதத்தில் நடத்தினார்கள். இந்தப் பந்தயத்தில் 86 பேர்கள் ஓடினர். அவர்களில், ஆகாயப் போர்வீரராகிய மிஸ்டர் பெர்ரிஸ் என்பவர் 2 மணி 41 நிமிடத்தில் ஓடி முதலில் கெலித்தார். இவர் சென்ற மூன்று ஆண்டுகளிலும் முதலில் கெலித்தார்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

விபவ௵ ஆடி௴—கலியுகாதி 5030, சாலிவாகனம் 1851,
பசலி 1337-38—கோல்லமாண்டு 1103—ஹஜரி 1346-47,
இங்கிலீஷ் 1928௵ ஜூலை௴—ஆகஸ்டு௴

| ஆடி | ஜூலை | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | திங் | ச●17-10 | திரு22-15 | சி22-15அ | சர்வத்திர அமாவாசை |
| 2 | 17 | செவ் | அ10-28 | புன17-43 | சித்60 | சரிதான், 6-க்குள் மழை |
| 3 | 18 | புத | பிர4-48 | பூசம்14-3 | சித்60 | அதிக சிராவணசுத்தம் |
| 4 | 19 | வியா | துதி0-18 | ஆயி11-35 | சி11-35அ | அவமாகம், நவக்கிரக |
| | | | திரி57-8 | | | சாந்திசெய்ய [ஆடிப்பூரம் |
| 5 | 20 | வெ | சது55-50 | மக10-45 | ம10-45சி | மாச சதுர்த்தி விரதம், |
| 6 | 21 | சனி | பஞ்56-25 | பூரம்11-45 | சி11-45ம | சித்திரம்எழுத மாடுவாங்க |
| 7 | 22 | ஞா | சஷ்58-5 | உத்14-35 | அமி60 | சஷ்டி, பும்சவனம் |
| 8 | 23 | திங் | சப்60-0 | அஸ்19-10 | சி19-10பி | திருதினஸ்பிருக் |
| 9 | 24 | செவ் | சப்3-5 | சித்25-20 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 10 | 25 | புத | அஷ்8-25 | சுவா32-33 | சித்60 | தானியம் செலவிட |
| 11 | 26 | வியா | நவ12-8 | விசா40-15 | சித்60 | சுபகாரியங்கள் விலக்க |
| 12 | 27 | வெ | தச20-45 | அனு47-50 | சி47-50ம | வித்தியாரம்பம் |
| 13 | 28 | சனி | ஏகா26-40 | கேட்51-45 | சித்60 | சர்வ மத்வ ஏகாதசி |
| 14 | 29 | ஞா | து31-23 | மூல60-0 | அமி-60 | திருதினஸ்பிருக் |
| 15 | 30 | திங் | திர35-5 | மூல0-30 | சி0-30ம | பிரதோஷம் |
| 16 | 31 | செவ் | சது36-55 | பூரா4-58 | சி4-58அ | வியாதியஸ்தர் குளிக்க |
| 17 | 1 | புத | ○37-35 | உத்7-55 | அ7-55சி | பௌர்ணமி |
| 18 | 2 | வியா | பிர36-50 | திரு9-35 | சித்60 | |
| 19 | 3 | வெ | துதி34-58 | அவி9-58 | சித்60 | |
| 20 | 4 | சனி | திரி32-8 | சதை9-23 | அ9-23ம | |
| 21 | 5 | ஞா | சது28-35 | பூரட்8-0 | சி8-0அ | |
| 22 | ஆகஸ்டு 6 | திங் | பஞ்24-23 | உத்5-55 | சித்60 | |
| 23 | 7 | செவ் | சஷ்19-48 | ரேவ3-23 | சித்60 | |
| 24 | 8 | புத | சப்14-50 | அஸ்0-25 | ய0-25சி | |
| | | | | பர57-13 | | |
| 25 | 9 | வியா | அ9-35 | கி×53-43 | மா60 | கிருத்திகை |
| 26 | 10 | வெ | நவ4-8 | ரோ50-3 | ம50-3சி | அவமாகம் |
| | | | தச58-33 | | | |
| 27 | 11 | சனி | ஏகா52-53 | மிரு46-18 | சித்60 | ஸ்மார்த்த ஏகாதசி |
| 28 | 12 | ஞா | து47-18 | திரு42-40 | சித்60 | வைஷ்ணவ மத்வ ஏகாதசி |
| 29 | 13 | திங் | திர42-0 | புன39-1[illegible] | அ39-15சி | மாச சிவராத்திரி |
| 30 | 14 | செ | சது37-15 | பூசம்36-28 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 31 | 15 | புத | ●38-18 | ஆயி34-28 | சித்60 | சர்வத்திர அமாவாசை |

| | | | |
|---|---|---|---|
| | குரு செ | ராகு | புத |
| | 14-ரிஷ-செவ் 16-கடக-புத 21-சிம்ம-சுக் | | சூரி சுக் |
| | சனி கே | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.


### வேதநாயகம் பிள்ளை அவர்கள்

## சர்வசமய சமரச கீர்த்தனைகள்.

மாயவரம் முன்சீப் ஸ்ரீமத் வேதநாயகம் பிள்ளை அவர்களைப்பற்றியும், மனிதர்க் கறிவுறுத்தும்பொருட்டு அவர்கள் இயற்றிய நூல்களைப்பற்றியும் அறியாதவர்கள் நம் தமிழ் நாட்டில் எவருமேயிரார். அவர்களால் இயற்றப்பட்ட நூல்களில் இந்நூலானது எந்நாட்டினர்க்கும், எச்சமயத்தார்க்கும், எப்பாலார்க்கும், எப்பருவத்தினர்க்கும் பற்பல நீதிகளை வற்புறுத்தி விளக்கிக் காட்டக்கூடியது. இதில் கடவுளைத் தியானிக்கும்படி வற்புறுத்தல், துர்க்குணங்களை வெளியிடல், மனமயக்கம் தவிர்த்தல், நற்புத்திகூறல், நித்தியானந்தந் தேடல், கள்ளஞானம், பொருளாசை யொழித்தல், செல்வச் செருக்கு, உலகவாழ்வை வெறுத்தல், உடலை வெறுத்தல், பணதூஷணை, பரஸ்திரீகமனம் விலக்கல், உய்யும்வழி, நெஞ்சொடு பிணங்கல், துர்க்குணம் போன்ற நற்குணங்கள், மன வஞ்சகம், மனமயக்கம், காலதூஷணை, நியாய பரிபாலனம் செய்ய வரம்வேண்டல், துர்வழக்காளிகள், உத்தியோக சங்கடம், 'பெரிய துரையாகிய கடவுளுக்கும் மனுஷத்துரைகளுக்கும் உள்ள பேதம், கோள்சொல்லும் உத்தியோகஸ்தர்கள் சாமியை நினைக்க நேரமில்லையென்று முறையிடல், உத்தியோகத்தை வெறுத்தல், துன்பத்துக்கஞ்சாமை, பிறர்மேற் குறை கூறுமை, பரிதான கண்டனம், பிரபுத்துவ தூஷணை, தாய் தந்தையரை நமஸ்கரித்தல், தகப்பன் மகனுக்குப் புத்திகூறல், மகளுக்குப் புத்திகூறல், உத்தம ஸ்திரீயின் இலக்ஷணம், பெண் பார்க்கத் தூதனுப்புதல், தூதன் பெண் பார்த்து வந்து சொல்லல், தலைவியிடத்து வைக்கவேண்டிய நேசத்தைப் பற்றித் தலைவன் கூறுதல், தலைவனுடைய மேன்மையைத் தலைவி தோழிக்குக்கூறுதல், துன்பஞ் செய்தாலும் தலைவனே கதியென்று தலைவி தோழிக்குச் சொல்லல், தலைவன் செய்த நன்மையைத் தலைவி கூறல், மாமி நாத்தி முதலானவர்களின் கொடுமையைப்பற்றி ஒரு ஸ்திரீ முறையிடுதல், கணவனைப் பகைத்த ஸ்திரீயை அவள் தாய் கண்டித்தல், தங்களுக்குப் படிப்பிக்கும்படி ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல், மூடனை விவாகஞ் செய்யாதபடி ஒரு ஸ்திரீயைத் தடுத்தல், மைத்துனர் கலியாணத்திற் பாடும் பரிகாசக் கீர்த்தனை, மைத்துனருக்குப் புத்திபோதித்தல் ஆகிய விவேகம் நிறைந்த விஷயங்கள் அடங்கியிருக்கின்றன; மொத்தம் 192 கீர்த்தனங்கள் உள்ளன. அவை எவர்க்கும் தெளிவாக விளங்கக்கூடியவை; இனிய வர்ண மெட்டுகளால் அமைந்தவை; படிக்கப் படிக்கப் பரமானந்தத்தைத் தருபவை.

இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினிச் சந்தாநேயர்களுக்கு 30-6-28 வரையில் விலை அணா 8.

### சம்பூர்ண மகா பாரதம் அல்லது

## பாண்டவ சரித்திரம் [டிராமா]

பஞ்ச பாண்டவர்களின் சரித்திரங்களையும், துரியோதனாதியர்களுடைய வஞ்சகச் செயல்களையும், இன்னும் பல அரிய நீதிகளையும் விளக்கிக்காட்டக் கூடிய திவ்ய நாடகம் இது. சி. வெங்கடாசல முதலியாரவர்களின் ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமாடிக் கம்பெனியிலுள்ள முக்கிய ஆக்டர்களாகிய மனமோகன ரஞ்சித எம். அரங்கசாமி நாயுடு முதலிய பல சிறந்த நடிகர்களால் பாடப்படும் உயர்ந்த வர்ணமெட்டுகளோடு கூடிய பாடல்களும், வசனங்களும் பொருந்தியது. படிப்போர், கேட்போர் மனத்தை உரிக்கிவிடக் கூடியது. நாடக ஆக்டர்களுக்குக் கண்போன்றது. புதிதாக நாடகம் பயில்வோருக்கு மிகத் துணைபுரிவது. இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினிச் சந்தாநேயர்களுக்கு 30-6-28 வரையில் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## மதனம்பாள் அல்லது மகா மாயக் களவு,

இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பெற்ற மிக்க அற்புதம் பொருந்திய நாவல்களில் முதன்மை பெற்றதாகும். இதில் முதலியாரவர்களின் முழு ஆற்றலையும் நன்குணரலாம். இந்நாவல் படிப்போர் மனதைக் கவர்ந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கச் செல்யுமென்பதில் ஐயமில்லை. இதில், காளிங்கனுகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும், இன்னும் அந்த லோகநாதன், பொருளாசையால் தன் தமையனாகிய கஜேந்திரம் பிரபுவை விஷமிட்டுக் கொல்வதும், விமலாபாயைத் தீராத் துயரத்திற் குள்ளாக்குவதும், முடிவில், வரதராஜுலு என்னும் துப்பறியும் நிபுணனால், அந்தச்சண்டாள லோகநாதன் குற்றங்கள் வெளியாக்கப்பட்டு அவன் தீயாந்தரவாச தண்டனை யடைவதும், மேலும் இடையிடையே வரும் மகர மோசதந்திர அற்புதச் செயல்களும் படிப்போர்க்கு மேலும் மேலும் அளவற்ற ஆச்சரியத்தை விளைவிக்கும்.

இரண்டு பாகமும் விலை ரூபா 3.

ஆனந்தபோதினிச் சந்தாநேயர்களுக்கு 30-6-28 வரையில் ரூ. 2-4-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.




## A. S. சுகந்த மூக்குத்தூள்.

இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்து உபயோகித்தால் இன்பமான சுகந்த வாசனையைத் தருவதோடு கண்டத்திற்கு மேற்பட்ட சகலவியாதிகளையும் கண்டிக்கும். வாங்குபவர்கள் A. S. மார்க் பார்த்து வாங்கவும்

| A. S. சுகந்த மூக்குத்தூள். | | M. J. பரிமள மூக்குத்தூள். |
|---|---|---|
| புட்டி 1-க்கு 0-4-0 | சேர் 1-க்கு | சேர் 1-க்கு 1—8—0 |
| டஜன் 1-க்கு 2-4-0 | 3—0—0 | டஜன் 1-க்கு 2—0—0 |

## A.S. பட்டணம் பொடி.

சேர் 1-க்கு ரூ. 0—12—0.
வீசை 1-க்கு 3— 4—0.

ஏ. எஸ். மகம்மது ஷம்சுத்தீன் சாயபு,
106, தங்கசாலை வீதி, சௌகார்பேட்டை, சென்னை. (A. B.)

இதில் கொழுப்பு கலக்கப்படவில்லை.




இது தோலைப் பற்றிய வியாதிக்கு

## கைகண்ட மருந்து.

பச்சிலை மூலிகைகளைக்கொண்டு செய்யப்பட்டிருக்கும் இந்த ஜாம்பெக் தைலத்தைத் தடவுவதனால் தோலைபற்றிய எல்லா நோய்களும் சீக்கிரத்தில் விலகிவிடும்; இதைப்பற்றி வைத்தியர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.

சொறி, இரணம், புண் இவைகளின்மேல் ஜாம்பெக்கைத் தடவினால் சீக்கிரத்தில் அவை ஆறிவரும், வேதனை சீக்கிரத்தில் ஒழிந்துவிடும்; விஷப்பூச்சிகள் செத்துவிடும்; புதிதாகத் தோல் வளரும்.

தோலைப்பற்றிய எல்லா ரோகங்களுக்கும் ஜாம்பெக்கைத் தடவுங்கள்.

## ஜாம்பெக்
## Zam-Buk : Zam-Buk

ஒரு டப்பி தைலம் 1 ரூபா; பெரிய டப்பி தைலம் 2¼ ரூபா;
எல்லா மருந்து வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.
ஏஜெண்டுகள்:—மெஸர்ஸ் தாதா அண்டுகோ, எஸ்பிலனேட், மதராஸ்.

# வீரநாதன்

தேவராஜு, அவன் மனைவி இவர்களின் செய்கைகள், காணாமற்போன குழந்தை சிக்கினது, மலைமேல் நடக்கும் அதிசயங்கள், வீரநாதன் கன்னி இவர்களின் செய்கை, இரண்டாவது கலியாண முடிவு, மலைநாட்டுப் பாடசாலை விநோதம் முதலிய அற்புத விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 12.

# பத்மாஸனி

இதில் கூறப்பட்ட திருடர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண்பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டு பிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறைமீட்பதும் படிக்கப் படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும்.

இதன் விலை அணா 14.

# பூங்கோதை

இதில், பூங்கோதையின் கற்புள்ள நடக்கையும், பிதாபக்தியும் எல்லாப் பெண்களுக்கும் நற்புத்தி புகட்டும். அக்கிரமஸ்தரைக் கடவுள் எப்படியும் தண்டிக்கிறார் என்பதும், உத்தமர்க்கு ஆச்சரியமான விதமாய் நல்ல க்ஷேமத்தை யளிக்கிறார் என்பதும் இக்கதையால் நன்கு நிரூபிக்கப்படுகின்றன.

இதன் விலை அணா 10.

விலாசம்:—

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167,
மதராஸ்.

# பெப்ச்




இந்த மாத்திரையினால், இருமல், சளிப்பு, சீதளம் முதலியவைகள் சீக்கிரத்தில் விலகிவிடுகின்றன.

ஒரு புட்டி மாத்திரைகள் ரூபா 1.

எல்லா மருந்து வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

இன்றைக்கே பெப்ஸ் மாத்திரையை வாங்குங்கள்.

## காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்.

## சதிபதிகளின் மர்மம் அல்லது

# மானிடரகசிய சாஸ்திரம்

பெண்களைச் சந்தோஷிக்கச்செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்ன ஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யவேண்டும் என்ற விவரமும், போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், சுகிக்கவேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும், மாதர்களுக்கு அமிர்தநிலை இருக்கும் விவரமும் அதை இன்ன விதமாய் நிலைபெயர்க்கலாம் என்பதும் அகாலசேர்க்கையால் வரும் கெடுதியும் இன்னும் பல அறிய விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. கண்களைக் கவரும் அழகிய சித்திரப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்பவாழ்க்கையின் இரகசியங்கள் | 2 | 0 | 0 | ரதி சாஸ்திரம் | 1 | 4 | 0 |
| | | | | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் | 2 | 0 | 0 | மதனாதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| | | | | ரதிமதனசிருங்காரரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | 2 | 4 | 0 | மாயாஜால விநோதம் | 1 | 0 | 0 |
| | | | | மனோவசிய சாஸ்திரம் | 1 | 8 | 0 |
| மாதர் நீதி | 1 | 0 | 0 | ஸ்திரீ புருஷ ரகசியம் | 1 | 8 | 0 |

ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# கடைக் கணக்கு நூல்.

இங்கிலீஷ் எண்ணை லெழுதப்பட்டது. பிறரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் தாமே வியாபாரத்திற்குரிய யெவ்விதமான கணக்குகளையும், ரூபா. அணா. பை. வகுத்தலினாலேயே, சூட்சமாய், போர்ட் பாடசாலைகளில் பயிலும் சிறுவர் சிறுமிகளும், வியாபாரத்திற் பயிலும் சிறுவர்களும் உயர்தர கலாசாலை மாணவர்களும், சுலபமாய் மனதினாலேயே கணக்குகளை விடை கூறும் வண்ணம் எழுதியுள்ளது. புத்தகம் 1-க்கு விலை 8 அணா.

தபாற் சார்ஜு பிரத்தியேகம். ரா. இராஜு முதலியார்,
திருமணித்தாங்கல், கீழ்வெள்ளியூர்-மதுரா,
தேசூர்போஸ்டு, வந்தவாசி தாலுக்கா, வடஆற்காடு ஜில்லா.

# கபாலாம்ருதம்.

ஆயுர்வேத முறையில் செய்யப்பட்ட இத்திரவத்தை எந்த எண்ணெயிலாவது சில துளிகளைவிட்டால் உடனே பால் போன்ற நிறமாறிவிடும்.

அதை கூந்தல் வாரவும் தலைக்கு தேய்த்து ஸ்நானம் செய்யவும் உபயோகித்தால், கபாலத்தில் மூளையையும், கண்களையும் சுத்திசெய்து இன்னும் அனேக மண்டை வியாதிகளையும் போக்கி குளிர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் செய்வதை, உபயோகித்த அன்றே காணலம்.

4-அவுன்ச புட்டி 1-க்கு விலை அணா 12.

இரண்டணா தபால் ஸ்டாம்பு அனுப்புவோருக்கு சாம்பில் புட்டி இனாமாக அனுப்பப்படும்.

கபாலாம்ருதம் கம்பெனி, 232, தங்கசாலை வீதி, ஜி. டி. மதராஸ்.

## ஞானசவுந்தரி சரித்திரம். [டிராமா]

இது, மாற்றாந்தாயின் கொடுமைகளையும், பதிவிரதையின் இலக்ஷணங்களையும், தெய்வபக்தியுடையவர்கள், எத்தகைய ஆபத்தினின்றும் நீங்கிக் கடவுளால் காப்பாற்றப்படுவோர்கள் என்பதையும் விளக்கிக்காட்டும் மிக்க உருக்கமான நாடகமென்பது உலகறிந்த விஷயம்; ஆலந்தூர் நாடகக் கம்பெனியாரால் பாடப்பட்டு வந்த நூதன வர்ணமெட்டுக்களில் அமைந்த பாடல்களெல்லாம் இதில் அடங்கியிருக்கின்றன. அவை, படிப்போர் மனதையும், கேட்போர் நெஞ்சத்தையும் உருக்கிவிடத் தக்கவை. இது, பொதுவாகத் தமிழ்தெரிந்த எல்லோருக்கும், சிறப்பாகக் கிறிஸ்தவர்களுக்கும், நாடகக்காரர்களுக்கும் உபயோகமானது. இதனைப் படிப்பார்க்கும், கேட்பாருக்கும் உயர்ந்த பல நீதிகள் புலப்படும். இதனை வாங்கிப் படிக்கும் நாடகக்காரர்கள் வேறு ஆசிரியர்களின் உதவியின்றியே இந்நாடகத்தை ஆடத் தொடங்கி விடலாம். இது நல்ல கிளேஸ் கடிதத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி சந்தாநேயர்களுக்கு 30-6-28 வரையில் விலை அணா 6.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


---


**உண்ணும் உணவிற்கு ஜீரணாதாரமாயுள்ளது எது?**

முதல்தரமான—A Quality

## பெருங்காயம்

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததை தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்தப் பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சாசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும்.

வேண்டுவோர்கள் தெரிவித்து வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுன்ட் ரூ. 2. }
½-இராத்தல் ரூபா 1-1-0. } தபாற்கூலி வேறு.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


---





### மதன காமேஸ்வர லேக்கியம்.

இது விலை உயர்ந்த சாலாமிசிரி முதலாகிய மூலிகைகளால் செய்யப்பட்டது. பலமும், வீரிய விர்த்தியையும் உண்டாக்குவதில் அதிமேன்மை பொருந்தியது. மேகம், வெட்டைச்சூடு, நித்தாரணை, சுக்கில நஷ்டம், அதிமூத்திரம், சுரம் முதலியவைகளை நீக்கி மிகுந்தபலத்தையும், யௌவனமும் உண்டாக்குவதில் அமோகமானது. இரண்டு டின்கள் போதுமான 20 துலாம் டின் 1-க்கு ரூ. 1-4-0 வி. பி. சார்ஜு அணா 8.

பி. சி. ஏ. அண்டு கோ.

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.



### நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் என் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிச வாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனி போல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகரற்றதான

# Amrutanjan

## அமிருதாஞ்சன்

**ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்**




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்திரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 துலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிருதாஞ்சன் டிப்போ,**

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

# புத்திர சந்தான எண்ணெய்.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிருந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கைசெய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதைவளர்ந்து சொறிபற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச்சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கரு தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

# மலச்சிக்கல்

## நீங்கக்கூடிய திராட்சைப்பழ லேகியம்.

எல்லா வியாதிகளுக்கும் மலச்சிக்கலே காரணம் என்பது சுருதி யுக்தி அனுபவங்களால் தெரிந்துகொண்ட விஷயம். தினந்தோறும் மலம் தாராளமாய்க் கழிந்துவிட்டால் வாத பித்த சிலேஷ்மங்கள் தத்தம் நிலையில் நிற்கும். சில தினங்களில் நீங்கள் மிக ஆரோக்கியமாய் இருப்பீர்கள். அதற்குக் காரணம் என்னவென்று யோசித்திருப்பீர்களானால் மலம் தாராளமாய்க் கழிந்ததனாலேயென்று தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆகையால் நோயுள்ளவர்களும் நோய் இல்லாதவர்களும் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

நமது திராட்சைப்பழ லேகியமானது மலத்தைத் தாராளமாய்க்கழித்து சகல நோய்களையும் கண்டித்து திரேகத்தை ஆரோக்யமாய் வைத்திருக்கும்.

முழுவதும் பச்சிலை, புஷ்பம், பழம், தேன் இவைகளைக்கொண்டு பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. குமட்டல் வாந்தி காகரப்பு முதலிய கெட்ட செய்கைகள் ஒன்றும் கிடையாது. வாளம் முதலிய பேதியாகும் மருந்துகள் கண்டிப்பாய்ச் சேர்க்கப்படவில்லையென்பதற்கு உத்தரவாதம் செய்கிறோம். சாப்பிட மிக இனிப்பாய் இருக்கும்.

டப்பி 1-க்கு ரூ. 1—4—0 4-டப்பி ரூ. 4—8—0

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?



முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம்வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தாக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய செந்தூரங்களால்

## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரிப்படத்தக்கவிதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரத்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன்மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்றதைப்பற்றி ஜவாப்தாரியராயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துர்ப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக டை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்டகுப்பு, நெய் இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவரவேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் மறைந்த, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். அவரும் அகக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1-4-0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம் :—லேகியம் டிபோ,**
**தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.)

**பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நான்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், கட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால்சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு ரூபா 5. ஏககாலத்தில் 8-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

**விலாசம்-: தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

# நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது இதில் சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீக்கிக் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



## ஜி. கியூர் வெள்ளை என்னும்
## கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

ஆடவர், பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், தூயாத சிற்றின்ப வனுபோகத்தில் பிரவேசிப்பதாலும் மூலத்தில் அக்கினிகொண்டு, தாது கெட்டு, பிரமேகங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் அவர்க்கு உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அநுபோகமான மருந்து என்பது உண்மை. இதில் பேதி முதலிய கெட்ட குணங்கள் இல்லை. பத்தியமில்லை. இதை உபயோகிக்கும் விபரப் பத்திரிகை மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு ரூபா 1.

## கண்நோய் மருந்து.

இது கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.



விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# கஸ்தூரி மாத்திரை.



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாக வாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசவகாலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4-மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

## காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான கழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்குய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.

## சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணு நோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அநுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை யுண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1-8-0.




விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.



## சீதபேதி (டிசென்டரி) பவுடர்.

இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமுங் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல்,மூலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும்,

ஒரு புட்டியின் விலை அணா 8.



## கர்ண பிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டால், காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோ லீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து




இதற்கு நிகரான சுகந்த மணமுடைய சென்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.

கிரயம் புட்டி 1-க்கு அணா 10. டை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில்பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும். வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.



## சோடாவாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதிருப்பவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை சோடாவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். அதை உடனே சாப்பிடவும் ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோவு நின்றுவிடும். புட்டி 1-க்கு அணா 6.




## யூகலிப்டஸ் ஆயில்.

(சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு, வெட்டுக்காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இன்புளூவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வு பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி. முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

## நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி



விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்குமுன்பு இருந்த கருமை நிறத்தையும், பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை.இதைப்போன்ற சிறந்த தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்குக் கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டுகளைக் கணக்கிடல் முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூபா 1.



## கூந்தல் வளரும் துளி.

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

# சிவப்பிரகாச பல் பொடி.



இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை ஈறு வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம் பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகமவென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.
6-டப்பிகள் விலை அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறுகிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

# அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்யமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும் இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சாப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சப்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூபா 1-12-0.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# எமது சொந்தப் பிரசுரங்கள்.

---

## இரத்தினபுரி இரகசியம் 2 பாகம் — 4 0 0

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றிய நீதிகள் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

## அமராவதி 2 பாகம் — 4 0 0

இது மிக்க பிரமையையுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்தநாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுடையவனுமிருந்தால் அவன்தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்றமனமகிழ்ச்சியையளிக்கும்.

## மஞ்சள் அறையின் மர்மம் — 1 8 0

இதுகாறும் அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனைப் படிப்பதால் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும் குற்றத்தைக் கண்டுபிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## கமலசேகரன் — 1 12 0

இது, ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர்குலத்தில் பிறந்தவனேயெனினும் தன் சிறிய தந்தையின் மோசச் செயலால் அனாதைபோல் அன்னியரால் வளர்க்கப்படுவதும், பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் இவனெதிரிற்றோன்றி இவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் இக்கதையில் மிக்க ஆச்சரியமாகவிருக்கும்.

## குணசுந்தரன் — 0 12 0

கீழ்மக்கள் சகவாசத்தால் தீமையே உண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. இதில் கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்குகள் ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

## தினகரசுந்தரி — 1 0 0

இதில், இக்கதாநாயகி ஆண்வேடந்தரித்துத் தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய கோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவது மிக்க வியப்பாயிருக்கும்.

## நிமித்தியக்குறி சாஸ்திரம் — 0 2 0

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

**ஆனந்தலிங்** 2 0 0

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதில் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தலிங்கின் அதிசய அபூர்வச் செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வி யறிவுடையோரு மாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். 492-பக்கங்கள் கொண்டது; விலை ரூபா 2.

**கலியாணச் சந்தடியில் தாலிகட்டமறந்த கதை** 0 5 0

கலியாணத்தில் தாலிகட்டுவதைக்கூட மறந்துவிடுவதுண்டா என்று சந்தேகப்படவேண்டாம். சில மௌட்டிகமான ஜனங்களிடத்தில் மெய்யாகவே இச்சம்பவம் நடந்திருக்கின்றது. அதை அனுசரித்தே இக்கதை எழுதப்பட்டிருக்கின்றது. இதைப் படிக்கப் படிக்க அடங்காச் சிரிப்புண்டாகும்.

**அங்கதன்** 0 4 0

இச்சரித்திரம் இதிகாச ரத்நமாகிய இராமாயணத்தின்கண் இருப்பது; அறிவறிந்த மகவின் சுகுணங்களை இனிதெடுத்துக் காட்டவல்லது. இதில் அங்கதன் தூதுபோகுந் திறமும், எதிரியின் நயவஞ்சகப் பேச்சுக்கிணங்காமல் வந்த காரியத்திற் றிடமனதோடிருந்து, அவனது துர்ப்பலங்களை நிர்ப்பயமாய் எடுத்துரைக்குஞ் சாதுரியமும் படிப்பவர்க்குங் கேட்பவருக்கும் உற்சாகத்தையும் மனக்களிப்பையும் தரும்.

**சம்பந்தமூர்த்தி** 0 7 0

இப்புத்தகம் சகோதர நேசத்தைப்பற்றிப் பேசும் அருமையானநாவல். இதில், சம்பந்தமூர்த்தியென்னும் மூத்தவன் தன் அன்னையிடம் காட்டும் அன்பும், தன்மீது வீண்பழிசுமத்திய தன் தம்பியிடம் காட்டும் விசுவாசமும் கடைசியில் தன் அன்னையின் மனத்திருப்திக்காகத் தன் தம்பி செய்த கொலைக் குற்றத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவனை விடுவிக்கும் உதாரகுணமும் படிப்பவர்களுக்குப் பெரும் வியப்பை யுண்டாக்கும்.

**வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள்** 0 10 0

இது, எட்டு மாதுசிரோமணிகளின் வீரச்செயலை விளக்குவது. இதில் அவர்கள் கற்போடு சுத்தவீரரான ஆடவரும் அஞ்சி பிரமிக்கத்தக்க வீரத்தன்மை காட்டுவதும், அவர்களின் புத்தி சாதுரியமும், பிராணனைத் துரும்பாய் மதிக்கும் தைரியமும் உற்சாகத்தை உண்டு பண்ணும்.

**ஸ்ரீ ராமாயண ஓடம்** 0 3 0

இந்த ஸ்ரீராமாயண ஓடம் எளிய நடையில்பாடி அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை யாவரும் வாங்கிப்படித்து எளிதில் ஆறுகாண்டங்களின் சரித்திரங்களையும் நன்குணர்ந்து சந்தோஷிக்கலாம்.

**பகவத்கீதா சங்கிரகம்** 0 2 0

இது, பகவத்கீதை யென்னும் அரியநூலின் இரத்னச் சுருக்கம். தெளிவான தமிழில் எழுதப்பட்டுள்ளது.



**பவளத்தீவு 2-பாகம்** 3 0 0

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும். விலை ரூபா 3.

**அற்புத நவநீத ரம்பை** 1 0 0

இதில், கதாநாயகி பருவகாலமடைந்து மணமின்றிச் சகல வித்தைகளிலும் புத்தி மீறின தன் தமையனை யழைத்துக்கொண்டு புரவியின்மீதேறி வனத்திற் சென்று வேட்டையாடி யிரவில் கானில் அவனுடன் துயில் செய்தபொழுது விடிந்தவுடன் விழித்தெழுந்து தமையனைக் காணாது பதறி அருகிலிருந்த வனங்களிற் புகுந்து அலைந்து தியங்குவது சோகரசமாயிருக்கும், பின்பு கேசரிமார்க்கம் பறந்து தனது தமையனை யெடுத்தேகிய பஞ்சமுக இராட்சதனை சம்மாரஞ்செய்வது பயங்கரமாயிருக்கும்.

**சண்டோபாக்கியானம்** 0 6 0

இது புதிதாகச் செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட ஓர் உண்மைச் சிவபக்தனுடைய புண்ணிய சரிதை. பிரமோத்தர காண்டத்திலிருக்குங் கிளைக் கதைகளுள் ஒன்றாகும். சிவ ஸ்தோத்திரப் பாடல்களும், சோபமும் பக்தியும் நிறைந்த செய்யுட்களும், நீதிச் செய்யுட்களும் சேர்க்கப்பட்டு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

**பீஷ்மவிஜயம்** 0 10 0

பீஷ்மர், ஒப்புயர்வற்ற வீரர், ஸத்திய ஸந்தர், பிதுர்பக்தி வாய்ந்தவர், மகா நீதிமான், இராஜதந்திர நிபுணர், கடவுட்பக்தி வாய்ந்தயோகி—இத்தகைய மகானுடைய குணங்களெல்லாம் இச்சரித்திரத்தில் வெகு அழகாகச் சிறந்த நடையில் விளக்கியுள்ளன.

**தசாவதார மகிமை** 0 6 0

உலகத்தில் தருமங்குறைந்து, அதருமம் தலை யெடுக்கும்போது, சாது ஜனங்களை ரக்ஷிக்கவும், அசாதுக்களை சிக்ஷிக்கவும் நான் அவதாரஞ் செய்கிறேன் என்று பகவான் கீதையில் கூறியபடி, தாம் எடுத்தருளிய அவதாரங்கள் பலவற்றிலும் சிறிந்துள்ள "தசாவதாரங்களின் மகிமைகள்" செந்தமிழ் நடையில் விளக்கமாக இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

**ஞானரத்தினம்** 0 4 0

இது, வேதாந்தஞானத்தைப்பற்றிய சில சிந்தனைக் கட்டுரைகள் அடங்கியநூல்.

**கோமளவல்லி** 0 8 0

இதில், கோமளவல்லி அம்மாளுக்கும் சத்தியவல்லி அம்மாளுக்கும் நடந்த சக்களத்திப் போராட்டம் லீலாவதிக்கும் சுலோசனாவுக்கும் ஏற்பட்ட அக்கா தங்கை சக்களத்திப் போராட்டத்திற்கு அதிகமாயிருக்கும். கோமளவல்லியால் துரத்தப்பட்ட உத்தமி சத்தியவல்லி காளியம்மன் ஆலயத்திலிருந்த ராக்ஷசன் பிராணனை யடியோடு வாங்குவதும் இன்னும் அனேக சாமர்த்தியங்களும் விளங்கும்.

**கனகரத்தினம்** 0 8 0

இஃதோரினிய நாவல். இதற்கொப்பான நாவல் இதுவரையில் வெளிவந்திராதென்பது திண்ணம். இதில் சோகரசம் இத்தன்மைத்தென நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

**இந்திராபாய்** 2 8 0

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலியயாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துகளிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணாராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையை யுண்டாக்கும்.

**தபால் கொள்ளைக்காரர்கள்** 0 14 0

இந்நாவலில் கல்வியும், சூக்குமபுத்தியும் அதோடு செல்வமுமுடையவன் உள்ளுக்குள்ளாகவேயிருந்து தபாலில்வரும் விலையுயர்ந்த பொருள்களைக் களவாடுவது அதியாச்சரியமாகவிருக்கும். துப்பறிபவன் பன்முறை பிராணாபத்தில் சிக்கி, அக்களவு நடக்கும் இரகசியவழியையும் கொலையைப்பற்றிய உளவையும் அறிந்து, கடைசியில் அக்கள்ளக் கூட்டத்தைப் பிடிப்பது அதிசயத்தை யுண்டாக்கும்.

**லோகநாயகி** 1 0 0

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும் அக்கிரமஸ்தரும், நம்பினவர்களுக்குத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப் படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்பட்டு வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும்.

**மதனாம்பாள் 2-பாகம்** 3 0 0

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

**மதிசூதனன்** 0 10 0

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில், படிக்கப் படிக்கப் பரமானந்தத்தைத் தரும் விகடங்கள் குருசிஷ்ய தர்க்கபாவனையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**ஜீவகன்** 1 0 0

இது, பஞ்சகாவியங்களில் முதன்மைபெற்றதாகிய சீவகசிந்தாமணிக் கதையாம். எல்லாச் சரித்திரங்களினும் ஜீவகன சரித்திரம் பெயர் பெற்றதென்பதைக் கற்றோர் யாவருமுணர்வா. ஆயினும், சிந்தாமணி பழைய செய்யுட் காவியமாகவும், கடின வுரையோடு கூடியதாகவு மிருப்பதால் அதிலுள்ள இனியகதையை யாவரும் படித்துணர்தல் அரிதாயிருந்து வந்தது. அக்குறை நீங்கவே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது.



**சுவர்ணாம்பாள்** 0 12 0

இதில், துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற்குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய சூக்ஷ்ம அறிவும் சாமர்த்தியமும் நன்கு விளங்கும்.

**பூங்கோதை** 0 10 0

இதில், பூங்கோதையின் கற்புள்ள நடக்கையும், பிதாபக்தியும் எல்லாப் பெண்களுக்கும் நற்புத்திபுகட்டும். அக்கிரமஸ்தரைக் கடவுள் எப்படியும் தண்டிக்கிறார் என்பதும், உத்தமர்க்கு ஆச்சரியமான விதமாய் நல்ல க்ஷேமத்தை யளிக்கிறார் என்பதும் இக்கதையால் நன்கு நிரூபிக்கப் படுகின்றன.

**மின்சாரமாயவன்** 1 8 0

இதில், எலக்டிரிக் கண்ணன் பெரியண்ணன், ஸார்ஜெண்ட் கமலநாதன் இவர்களுடைய பெருமை, சுந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப்படல், எலக்டிரிக் கண்ணன் பிச்சாண்டிபுரம் பிரயாணம் போவது, கமலநாதன் அதிக சாமர்த்தியசாலியாயிருந்தும் எலக்டிரிக் கண்ணனுக்கு ஐக்கியப்படல், ஜெயதேவியும் அவள் அத்தையும் இரத்னபுரியுல், உலாவுதல், முதலியன வேடிக்கையான ஆச்சரியமாயிருக்கும்.

**விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக்கொலை** 1 6 0

இக் கதையில் மூன்று அதிசயக் கொலைகள் நடக்கின்றன. குற்றத்தைச் செய்த ஆசாமிகள் மிக்க தந்திர சாமர்த்தியத்தோடு தங்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதனால் ஒரு நிரபராதி கைதுசெய்யப்படுகிறான். கடைசியில் துப்பறிபவனுடைய தைரியமும், துணிகரமும், புத்திசாலித்தனமுமான முயற்சிகளால் மிக்க சாமர்த்தியவான்களான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப் படுவதும், நிரபராதி விடுவிக்கப்படுவதும் மிக்க அதிசயத்தை விளைவிக்கும்.

**பத்மாவளி** 0 14 0

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண் பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க ருசுவுகள் கண்டுபிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறைமீட்பதும் படிக்கப் படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும்.

**மதனபூஷணம்** 1 0 0

இதில் குற்றவாளி, உயிரோடிருப்பவனை இறந்து விட்டவனாகவும், இறந்து போனவனை உயிரோடிருப்பவனாகவும், படித்தோர் நம்பும்படி செய்வது மிக்க வியப்பை யுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டு பிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது.

**மலையாள பகவதி** 1 0 0

இது, அடங்கா நகைப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க்கதை. பேய் பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெகஜால மாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாக்கின்புளுகர், முதலிய சண்டப்பிரசண்டயுக சண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திடீர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத்தக்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் காணப்படும்.

**ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்** 1 12 0

இதில், இம்மகானுடைய அற்புத சரித்திரம், ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, முமூட்சுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாதுசங்கம், வைராக்கியம், ஞானத்திற் கிடையூறுகள், பெண்ணாசை பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர் லக்ஷணம், சந்நியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு கிருகஸ்தர்க்குரிய போதனை, சித்திகள், கர்மநியதி முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆப்டோன் படமும், சுவாமி விவேகாநந்தருடைய படமும் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

**கைவல்ய நவநீத வசனம்** 1 8 0

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது, எவரும் எளிதில் வாசித்துணரும்படி எம்மால் வசனமாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இதனால் புத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

**குசேலோபாக்கியான வசனம்** 1 0 0

இதில், குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரைச் சிறப்பு, கடைவீதியின் சிறப்பு, அதற்கடுத்த மலையுச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகைசேர்தல், ஸ்ரீ கண்ணனுடைய அந்தப்புரத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்கு மேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம்பெற்றுத் தமது நகரமடைந்தது, குசேலனை அவர் மனைவி உபசரித்துக் கொண்டாடுதல், குசேலர் விஷ்ணு தோத்திரஞ் செய்தது முதலியன விளக்கமாக எழுதப்பெற்றிருக்கின்றன.

**மெய்க்காதலி** 0 8 0

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில் நட்பின் தன்மையும், தீச்செயலால் வருங் கேடுகளும், குணமுள்ள ஸ்திரீகள் கற்பைக்காப்பதும் இன்னும் பல விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. கதாநாயகி தன் மணப்பந்தலிலிருந்து நள்ளிருளில் வெளிச்சென்று போய்க்கொண்டிருக்கும்போது அவள் புத்திசாதுர்யத்தினால் ஒரு தூர்த்தனை ஏமாற்றித் தன் கற்பைக்காத்துக் கொள்ளுதலும், அவளுக்குக் கலியாணமாகின்றதும் மிகவும் வியப்பாயிருக்கும்.

**கற்கோட்டை** 2 0 0

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம், சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல்கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் [illegible]கொள்ளச் சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும் [illegible]யைப் புகட்டும் ஓர் உயர்ந்த நூல். இதில் நூலாசிரியர் திருவுருவப் [illegible] அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், [illegible]ல்பெட்டி நெ. 167, மதராஸ்.

187488

**நளினசுந்தரி** 0 10 0

இது, தேசாபிமானமும், ஜனாபிமானமும், மதாபிமானமும் நிறைந்து விளங்கும் இனியதோர் நாவல். இதில் வீரத்தன்மையும், விஸ்வாச குணமும் மிகுந்த வீரணத்தேவனது நடவடிக்கைகள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும். யானைக்காரனாகிய மகமத்கானுடைய ராட்சதயுத்தம் அதி விநோதமாயும் ஆச்சரியமாயுமிருக்கும்.

**சதானந்தர்** 1 4 0

ஒரு புருஷன் ஆய்ந்தோய்ந்து பாராது தன் மனைவியின்மீது வீண் சந்தேகங்கொள்ளுதலினால் அக்குடும்பம் இவ்வாறு சீர்கெட்டுத் துன்புறுமென்பதும், ஒரு குடும்பம் சண்டைச் சச்சரவின்றி, நித்திய சமாதானமாய் இனிது வாழ்வதற்கு அக் குடும்பத்தின் தலைவி எத்தகைய சாமர்த்தியமும், அன்பு பொறை யாதிய நற்குணங்களும், பெருந்தகைமையும் படைத்தவளா யிருக்க வேண்டுமென்பதும் இதில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

**மனோன்மணி** 0 8 0

இஃதோ ரினிய கதை; இதில் மனோன்மணி அம்மாள் ஆண்வேடம் பூண்டு தன் மணாளனை மந்திரிகளுடன் தேடுவதும் அவளை ஆண் என்று மதித்துச் சில ராஜகுமாரத்திகள் ஒருவருக்கொருவர் சண்டையுடன் அந்த மனோன்மணி மேல் விழுவதும் மிக ஆச்சரியமாயிருக்கும்.

**துயராளன் கதை** 0 12 0

மோகவேணியின் விருத்தாந்தம், கம்மாளர்கள் கூட்டம், துயராளன் கள்ளரிடம் சிக்குதல், மோகவேணி பண்டாரத்தைக் காண்பது, கல்யாணி துயராளனுக்குப் புத்திகூறல், விஸ்வகுலநேயன் துயராளனைக் கடலில் தள்ளுவது, பத்திராசலன் தைரியச் செயல்கள், நால்வர் பிரயாணப்படல், துயராளன் கப்பலில் வேலைக்கு அமர்தல், மோகவேணி கள்ளனிடம் துயராளனைத் தன் கணவர் இவர்தானென்று காண்பித்தது, துயராளன் விவாகத்திற்குப் பந்தல் சோடிக்கச்செய்வது மோகவேணி தனது பிதாவைக் கண்டு பாதம் பணிதல் முதலிய அநேக விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

**கீர்த்தி சிங்கன்** 0 8 0

இது கண்டிராஜன் கதை. இது நீதிகளடங்கிய சரித்திரம். பல பழமொழிகளுடனும் மேற்கோள்களுடனும் கூடியது.

**தேவசுந்தரி** 1 4 0

இஃதோர் மகாபதிவிரதையின் அரிய சரித்திரமாகும். இதில் தேவசுந்தரி, தனக்கு நேரிட்ட இக்கட்டைச் சகித்துக்கொண்டு தீயவழிகளிலிறங்கிய தன் புருஷனை ஆதரித்துக் கற்பின் தன்மையை விளக்கினது மிக்க வியப்பாயிருக்கும். இவள் கணவனுக்கு வரும் அநேக ஆபத்துகளை வெகு சாமர்த்தியமாய் நீக்கி அவனை நல்ல வழியில் கொண்டுவந்த பிறகு இவள் மேன்மேலும் விருத்தியடைந்தது புகழத்தக்கது.

**வீரநாதன்** 0 12 0

தேவராஜன், அவன் மனைவி இவர்களின் செய்கைகள், காணாமற்போன குழந்தை சிக்கினது, மலைமேல் நடக்கும் அதிசயங்கள், வீரநாதன் கன்னி இவர்களின் செய்கை, இரண்டாவது கலியாணமுடிவு, மலைநாட்டுப் பாடசாலை விநோதம் முதலிய அற்புத விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

**கண்ணன் பக்திரஸக் கீர்த்தனங்கள்** 0 3 0

**ஜெகதல ஜெகஜ்ஜோதி** 0 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

| | | | |
|---|---|---|---|
| கடற்கொள்ளைக்காரன் 2-பாகம் | 3 | 4 | 0 |
| மனமோகன மாணிக்கம் | 1 | 8 | 0 |
| ஆனந்தவிங்கின் அஷ்டஜெயங்கள் | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக் கொலை | 1 | 4 | 0 |
| மாதவி மாதவன் 2 பாகம் | 2 | 0 | 0 |

அரிச்சந்திரன் சரிதை 0 8 0

'சத்தியமே ஜயம்' என்பதோர் பழமொழி. இதனை இந்த அரிச்சந்திரன் சரிதை நன்கு வலியுறுத்தும். அம்மன்னவன் தன் வாய்மையை நிலைநிறுத்தத், தன் நாடு நகரமனைத்தையு மிழந்ததும், தன் மனைவியையும் மகனையும் விற்றதும், அவனும் ஓர் புலையனுக் கடிமையாயினதும், விசுவாமித்திர முனிவரியற்றிய கொடுமைகளெல்லாவற்றையும் மிக்க பெருமையோடு ஏற்றுக்கொண்டதும் இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

பூலோக லக்ஷ்மி கதை 0 10 0

பூலோக லக்ஷ்மியைக் கற்பழிக்கும் பொருட்டாக அரசனும் மந்திரியும் மோசஞ் செய்வதும், அன்னவர்களை வஞ்சித்து உபாயவல்லியம்மாள் அவளை ஓட்டிவிடுவதும், இன்னும் அநேக ஆச்சரியசெய்கைகளும் இதில் அடங்கியது.

| | ரூ. | அ. |
|---|---|---|
| விகடவல்லி | 0 | 6 |
| காமசேனரசிகா | 0 | 8 |
| அகட விகட விலாச விநோதக்கதை | 0 | 10 |
| கண்டிராஜா நாடகம் | 0 | 12 |
| விநோத கதைத்திரட்டு | 0 | 5 |
| மருமக்கள் துயரம் | 0 | 2 |
| ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல் | 0 | 8 |
| இந்துலீகா | 0 | 8 |
| வீணாகானன் | 0 | 8 |
| கமலமதி | 0 | 8 |
| நீலக்கொடி | 0 | 5 |
| தோடகம் | 0 | 8 |
| கிருஷ்ணன் தூது | 0 | 8 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 |
| ஸ்ரீபாலன் | 0 | 8 |
| உதயணன் | 0 | 8 |
| தசக்கிரீவன் | 0 | 14 |
| போஜ சரித்திரம் | 0 | 5 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| தக்கன் | 0 | 6 |
| மங்களேசுவரன் | 0 | 8 |
| சிசுபாலன் | 0 | 8 |
| சீமந்தனி | 0 | 8 |
| கர்ணன் சரிதை | 0 | 12 |
| மணவாளன் | 0 | 3 |
| பரசுராமன் | 0 | 3 |
| சத்தியவசனி | 0 | 4 |
| கருணாகரரும் சத்திய சீலரும் | 0 | 8 |
| நாலுமந்திரி கதை | 0 | 4 |
| செய்யுட் பாடத்திரட்டு | 0 | 4 |
| கண்ணபிரான் | 0 | 4 |
| விமலன் | 0 | 4 |
| பூர்ணவல்லி | 0 | 6 |
| மேனுமினுக்கி | 0 | 8 |
| தத்வஸங்க்ரஹ ராமாயணம் | 4 | 0 |
| வைணவக் கொத்து | 0 | 8 |
| ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர் சரித்திரம் (அச்சில்) | | |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.